
# திறப்பு விழா



# நினைவு மலர்

## 2017

முடியொடு கொடியோடு வாழ்ந்தவன் தமிழன்
முடிவின்றி காணாமல் போவது தமிழன் விதியோ...
விதி செய்யவென புறப்பட்ட தமிழன்
கதியின்றி மதிமயங்கி நிற்கின்றான் தமிழன் – இனிப்
பிறப்பானோ? ஒரு தமிழன் விதிசெய்ய புவியில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலானந்தர்



# நினைவு மலர்

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**RAMA KRISHNA MISSION**
**ASHRAMA & CHILDREN HOMES**
T.P. : 009465222752, rkmbat@gmail.com

# ஆசிச் செய்தி

காரைதீவு புஸ்பா பொருளாதார கல்வி சமுக அபிவிருத்தி அமைப்பினரால் அமைக்கப்பட்ட முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் 12 அடி உருவச் சிலையை காரைதீவு முச்சந்தியில் விபுலாநந்தா சதுக்கத்தில் 21-04-2016 அன்று திறந்து வைக்கப்பட்ட நிகழ்வையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். மலர்க் குழுவினருக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழ் பேராளன் சுவாமி விபுலாநந்தர் ஞானச்சுடர் விளக்காக அகிலமெங்கும் பேரொளி பரப்பி அவர் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் (மிஷன்) துறவியாகி மொழிக்கும், சமயத்துக்கும் பெரும் பணியாற்றி பரந்த நோக்குடன் பல கல்விச் சாலைகளை நிறுவ உதவிய உத்தமர் ஆவார், அன்னாருக்கு அகில இலங்கை இந்து சம்மேளன தேசிய ஆலோசகரும் மேற்படி அமைப்பின் பணிப்பாளருமான திரு. செல்லையா இராசையா அவர்களின் இடைவிடா முயற்சியாலே மேற்கொள்ளப்பட்ட இச்சிலை நிறுவும் திட்டத்தை இந்து சமயத்திற்கும், மொழிக்கும் செய்யும் பெரும் கைங்கரியமாகக் கருதுகின்றேன்.

இம்முயற்சியில் முன்னின்றுழைக்கும் இவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.செ.இராசையா அவர்களுக்கும் அவரது புஸ்பா பொருளாதார கல்வி சமுக அபிவிருத்தி அமைப்பு அங்கத்தவர்களுக்கும், அவர்களது பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய இறைவனை வேண்டி தெய்வத் திருமூவராம் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரது நல்லாசிகளை வேண்டி எனது நல்லாசிகளையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி
என்றும் இறைபணியில்

(சுவாமி பிரபுபிரேமானந்த)
SWAMI - IN - CHARGE
RAMAKRISHNA MISSION
RAMAKRISHNAPURAM,
BATTICALOA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு,
மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள்
அமைச்சர் மாண்புமிகு **டி.எம்.சுவாமிநாதன்**
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பினால் காரைதீவு முச்சந்தியில் நிறுவப்பட்ட சுவாமி விபுலாநந்தர் சிலையை திறப்பு விழா செய்யும் வேளையில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்து சம்மேளனத்தின் தேசிய ஆலோசகரான செல்லையா இராசையாவின் முயற்சியினால் முன்னெடுக்கப்பட்ட இச்சிலை அமைப்புத் திட்டம் எமது சமயத்திற்கும் மொழிக்கும் மிகப்பெரிய கைங்கரியம் என்று எண்ணுகின்றேன்.

காரைதீவு மண்ணிலே பிறந்து தமிழையும் தமிழிசையையும் உலகறியவைத்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தருக்கு அவர் பிறந்த ஊரிலே நடுநாயகமாக சிலை அமைக்க வேண்டுமென்று எண்ணிய புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பின் நோக்கம் போற்றுதற்குரியதாகும்.

தனது சமூகத்திலே கல்வி, சமூக மேம்பாட்டிற்காகப் பல சேவைகளைச் செய்துவரும் இவ்வமைப்பின் பணிகள் மென்மேலும் முன்னேற்றமடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு சுவாமி விபுலாநந்தர் சிலை பன்னெடுங்காலம் இவ்வூரிற்கே உரிய சிறப்பாக புகழ்பெற்று விளங்க வேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

டி.எம்.சுவாமிநாதன்
சிறைச்சாலைகள் மறுசரீமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை இந்து சம்மேளனத் தலைவர்

**நா.அருண்காந்த்** அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

காரைதீவின் முச்சந்தியில் அமைக்கப்பட்டுள்ள சுவாமி விபுலாநந்தரின் சிலையை உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வின் நினைவு மலரொன்றினை வெளியிடுவது ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

சுவாமி விபுலாநந்தர் ஒரு பன்முக ஆளுமை கொண்ட வரலாற்று நாயகன் என்பது அனைவரும் அறிந்த விடயம். விஞ்ஞானம், தமிழ், கணிதம் ஆகிய துறைகளில் தமது ஆளுமையை வெளிப்படுத்திய சுவாமி ஜீ அவர்களின் வாலாற்றுத் தடயங்கள் இலங்கை இந்துக்களின் பலத்திற்கும் கௌரவத்திற்கும் வலுச் சேர்க்கும் விடயங்களாக திகழ்கின்றன. சுவாமி ஜீ அவர்கள் உலகில் முதலாவது தமிழ் பேராசிரியர் என்பது எமக்கெல்லாம் கிடைத்த மிகப் பெரிய கௌரவம். குறிப்பாக சுவாமி ஜீ எழுதிய யாழ் நூல் அவரின் எழுத்துலகமாகும்.

இப்படிப்பட்டவொரு இந்துமத துறவியை கோடானு கோடி இந்து மக்களுக்கு தெரியாது. சுவாமிஜீயை தெரிந்தவர்களின் வட்டம் மிகச் சிறியது. ஆகவே சுவாமி ஜீ தொடர்பாக இந்திய பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றுவதற்கும் அவரின் பெயரில் இந்தியாவில் தபால் தலை வெளியிடுவதற்கும் இந்து சம்மேளனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இம்முயற்சியின் ஊடாக சுவாமிஜீயின் புகழ் உலகெங்கும் பரவும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

காரைதீவு மண் இலங்கை வாழ் இந்துக்களின் அடையாளங்களில் மிகவும் முக்கியமானது. இந்த மண்ணின் பெருமைகளை உலகிற்கு பறைசாற்றும் முயற்சியில் ஈடுபட்டு அதன் ஒரு கட்டமாக சுவாமி விபுலாநந்தரின் சிலையை காரைதீவு முச்சந்தியில் நிறுவி அதனைப் பெரு விழாவாக நடாத்தி வரும் புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பிற்கும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்லையா இராசையாவின் செயற்பாடுகளிற்கும் விழாக் குழுவினருக்கும் வாழ்த்துத் தெரிவிப்பதுடன் நில்லாது சொல்லில் அடங்காத பல சவால்களுக்கு முகம் கொடுத்து இப்பணியைச் செயற்படுத்திய நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு மீண்டும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன். அன்னாரது ஆத்மீகப் பணி தொடர நாமும் உந்து சக்தியாக இருப்போமாக.

**நா.அருண்காந்த்**

தலைவர், இந்து சம்மேளனம் - இலங்கை

077 4936997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலை அமைத்த செல்லையா இராசையா அவர்களுக்கான பாராட்டு ஓலை

**Dr. சாமித்தம்பி இராஜேந்திரன்** பிரதி வைத்திய அத்தியட்சகர்
ஆதார வைத்தியசாலை, கல்முனை (வடக்கு)

கற்பின் தெய்வம் கண்ணகிக்கு சிலையமைத்தான் சேரன் செங்குட்டுவன் மன்னன் அன்று: அவளின் அருள் பெற்று தமிழை வாழ வைத்த முத்தமிழ் வித்தகனுக்கு சிலையமைத்தான் மண்ணின் மைந்தன் எங்கள் செல்லையா இராசையா இன்று. சிலையமைப்பது என்பது மண்ணில் பிறந்த திண்ணியரிற்கு வரலாற்றில் அவர்கள் புகழ் என்றும் மக்கள் மனதில் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே அதை சுருக்கமாக கூறின் காலத்தின் பதிவிடல் எனலாம்.

அந்த வகையில் பல இக்கட்டுக்கள் நிறைந்திருந்த ஒரு இறுக்கமான சூழல் நாட்டில் நிலவிய வேளையில் இந்த சிலை அமைப்பதற்கான பணிகள் இவரினால் முன்னெடுக்கப்பட்டன. இவர் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் பதவியில் இருந்து நீங்கிய பின்பும் அவருடைய பணி சிலையமைப்பில் தொடர்ந்தது. அன்னாரின் நிர்வாகத் திறமையும் அவரினால் உருவாக்கப்பட்ட "புஸ்பா பொருளாதார கல்வி சமூக அமைப்பு" என்கின்ற அரசு சார்பற்ற நிறுவனத்தின் முயற்சியுமே இப்பணி முழுமையடையக் காரணம் எனலாம்.

இவ்வாறு சமூக சேவை செய்ய புறப்படுகின்ற இவர் போன்றோருக்கு வாழ்வில் பல விமர்சனங்கள் வெளி வருவது இயற்கை. அவ்வாறான ஏற்றுக்கொள்ள முடியாத விமர்சனங்களையும் தாண்டி, தான் பிறந்த மண்ணிலே பேரறிஞர் பெரு மகனுக்கு சிலை அமைத்ததை இம்மண்ணில் வாழும் சொந்தங்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

திரு செல்லையா இராசையா அவர்கள் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்கு வரும் முன்பும் மக்களால் மனம் கொள்ளத்தக்க பல அரிய பெரிய சேவைகளை செய்துள்ளார் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இப்போதும் இவர் தன்னலமற்ற சமூக சமய கலாசார நோக்கம் கொண்ட பணிகளில் ஈடுபட்டு வருவதை அறிந்தவன் என்ற வகையில் நான் அவரை உளமார பாராட்டுகின்றேன். அதே வேளை அவர் பணி எம் மக்களுக்கு தொடர வேண்டும். அதற்கான உடல், உள, ஆத்ம வல்லமையை எல்லாம் வல்ல அன்னை கற்புக்கரசி கண்ணகி வழங்க வேண்டும் என்று அவள் பாதங்கள் பணிந்து முடிக்கின்றேன்.

**மருத்துவர் சாமித்தம்பி, இராஜேந்திரன்**
பிரதி வைத்திய அத்தியட்சகர்
ஆதார வைத்தியசாலை
கல்முனை (வடக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சிலை அமைப்பதற்காக பூமி பூசையின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி விபுலாநந்தர் சிலை திறப்பு நிறைவு விழா

# வாழ்த்துச் செய்தி

**சி. சசிகரன் – பட்டயக் கணக்கறிஞர்**

கிழக்கிலங்கையின் புகழ்பூத்த தொன்மை மிகுந்த சைவத்தமிழ் கிராமமான காரைதீவில் அவதரித்த சுவாமி விபுலாநந்த அடிகளார் தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றி தமிழ், இலக்கியம், சமயம், தத்துவஞானம், விஞ்ஞானம் மற்றும் இசை முதலிய பல துறைகளில் கற்றுத் தேர்ந்து 1931ம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்று பல்கலைக்கழக வரலாற்றில் என்றென்றும் நினைத்து போற்றக்கூடிய தமிழ்த் தொண்டைப் பதிவு செய்தார். அதன் பின்னர் 1943 ஆம் ஆண்டில் இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கியபோது தமிழ்த்துறையின் முதலாவது பேராசிரியராக பணியாற்றி அளப்பரிய சேவையை தமிழ் பேசும் நல்லுலகிற்கு ஆற்றினார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் சேவையை நினைவு கூருமுகமாக அவர் அவதரித்த மண்ணில் அவருக்கு நிறுவப்பட்டிருந்த சிலை அழிக்கப்பட்ட அதே இடத்திலேயே மீண்டும் பெருமுயற்சியுடன் நிறுவியது பாராட்டிற்குரிய உன்னத பணியாகும். அந்த வகையில் மீண்டும் அடிகளாரின் சிலையினை அதே இடத்தில் அமைப்பதற்கு அரசின் அனுமதியைப் பெற்றதுடன் நில்லாது விடா முயற்சியுடனும், துணிச்சலுடனும் நிறுவிக் காட்டியது பெரும் பாராட்டுக்குரியதாகும். இப்பணியின் மூலம் கடந்த 21-04-2016 அன்று உருவச்சிலை திறப்பு விழா மிகச் சிறப்பாக நிறைவு பெற்றது. இப் பணிக்கு வித்திட்ட காரைதீவு முன்னாள் பிரதேச சபையின் தவிசாளர் செல்லையா இராசையா பணிப்பாளர் புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக மேம்பாட்டு அமைப்பு மற்றும் திறப்பு விழாவை நிகழ்த்திய காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கத்தினர் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதோடு இந் நிகழ்ச்சியையொட்டி அடிகளாரின் பணிகளை இக்கால சந்ததியினரும் அறிவதன் பொருட்டு இடம்பெறும் மலர் வெளியீட்டு பணிகளும் சிறப்புற நிகழ வாழ்த்தி கண்ணகை அம்பாளின் ஆசிகளையும் அருளையும் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**சி. சசிகரன் – பட்டயக் கணக்கறிஞர்,**
மாகாண உள்ளகக் கணக்காய்வாளர் - கி.மா.
மாகாண கணக்காய்வுத் திணைக்களம், கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**சி. ஜெகராஜன்**
பிரதேச செயலாளர்

கிழக்கிலங்கையின் முதுமையான தமிழர் கிராமமான காரைதீவுக் கிராமத்துக்கு பல்வேறுபட்ட பெருமைகள் இருந்தாலும் அவற்றுள் முதன்மையானது பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் அவர்களை ஈன்றெடுத்தமையாகும். உண்மையில் அப்பெருந்தகையின் அவதாரம் முழு நாட்டிற்கும் உலகிற்கும் முக்கியமான நிகழ்வாகும்.

சுவாமி அவர்களுக்கு ஒரு சிலையெடுத்துப் பார்க்க ஆசை கொண்ட பலர் அவருக்கு கிராமத்திலும் நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிலை அமைத்திருந்தாலும் அவரை ஈன்ற பெருமை கொண்ட காரைதீவுக் கிராமத்தின் முச்சந்தியில் விபுலாநந்தர் சதுக்கம் என மக்களால் அழைக்கப்படுகின்ற பகுதியில் இருந்த சிலை இன்று இல்லையே என்ற ஆதங்கம் இப்பிரதேச அன்பர்களுக்கு இருந்தது. ஆனால் நாட்டில் இருந்த சூழ்நிலை காரணமாக அதனை அமைப்பதில் பல்வேறு சவால்கள் இருந்து வந்தன.

எவ்வாறெனினும் காரைதீவைச் சேர்ந்த மக்களின் ஆதரவைப் பெற்று சுவாமிகளின் சிலை அமைப்புக்கான இலக்குக்கு வடிவம் கொடுக்கக் கூடிய நிலை காரைதீவின் முன்னாள் தவிசாளர் திரு. செல்லையா இராசையா அவர்களின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் சிலை அமைப்பதைவிட சிலைக்கான அனுமதி பெறுவதே சவாலாக இருந்த காலகட்டம் என்பதை அனைவரும் மனதில் கொள்வது சாலப் பொருத்தம் என்பதை நினைவு படுத்துவது எனது கடமை எனக் கருதுகின்றேன்.

எவ்வாறெனினும் இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டதும், சிலை திறப்பு விழா மாபெரும் எழுச்சியான நிகழ்வாக நிறைவு பெற்றதும் சுவாமிகளின் ஆசிர்வாதம் இருந்தமையினாலேயே என நான் உறுதியாக நம்புகிறேன். இப்பணிகளை மேற்கொள்வதில் காரைதீவு இந்து சமய அபிவிருத்திச் சங்கம், புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பு மற்றும் பெருந்தகைகளின் பங்களிப்பு என்பன இப்பணிகள் சரியான இலக்கினை அடைய உதவியாக அமைந்தன என்பதுடன் காரைதீவின் ஒற்றுமைக்கும் மற்றொரு உதாரணமாக அமைந்தது.

ஊர் கூடித் தேரிழுத்த இந்தப் பணியும் காரைதீவுப் பிரதேச சபையின் பராமரிப்புக்காக இச்சதுக்கம் கையளிக்கப்படும் நாளும் எமது மண்ணின் வரலாற்றில் மறக்க முடியாத மற்றொரு தருணம் என்ற வகையில் அந்நிகழ்வுக்கு வாழ்த்துக் கூற கிடைத்தமையைப் பாக்கியமாகக் கருதி இறைவனுக்கும் ஏற்பாட்டாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி. ஜெகராஜன்**
பிரதேச செயலாளர், திருக்கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பின் ஓர் கண்ணோட்டம்

மேற்படி அமைப்புக்கான "புஸ்பா" என்ற பெயர் வரக் காரணமாக அமையப் பெற்றது தமிழர் வரலாற்றின் துன்பியல் நிகழ்வுகளுள் ஒன்று ஆகும். அதாவது அன்றைய காலகட்டத்தில் (1984 இல்) காரைதீவில் முதல் முதலாக பல் வைத்திய பீடத்திற்கு தெரிவான பெண் ஒருவரை காரைதீவு மண் இழந்தது என்ற அடிப்படையிலாகும். இவர் காரைதீவு-7ம் பிரிவில் செல்லையா, சீனிப்பிள்ளை தம்பதிகளின் 8 வது பிள்ளையாக 23-09-1961ம் ஆண்டு உதித்தவர். பிறந்த ஊரில் உள்ள விஷ்ணு வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், விபுலாநந்த மத்திய கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் கற்று எவ்வித மேலதிக மீட்டல் வகுப்புகளும் இல்லாது பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு தெரிவாகி அங்கு கல்வி கற்கும் வேளையிலேயே காலன் அவரைத் துரத்தியது.

1991-4-19ம் திகதி அன்று இறுதியாண்டு கற்கையில் வீட்டில் இருந்து C.T.B பஸ்ஸில் பேராதனை நோக்கிச் செல்லும் போது "சியம்புலாண்டுவ" வில் வைத்து இராணுவத்தினர் பஸ்ஸை சோதனையிட்ட வேளை கடத்தப்பட்டார். இற்றைவரை எவ்வித தகவலும் இல்லாத நிலையில் அவரை தேடிய பெற்றோர்கள் அன்றைய ஜனாதிபதி R.பிரேமதாசா முதல் சந்திரிகா வரை முறைப்பாடுகள் செய்தும் சர்வதேச மனித உரிமை மற்றும் செஞ்சிலுவை சங்கம் போன்ற அமைப்புகளுடனும், காணாமல் போனோர் மனித உரிமைக் ஆணைக்குழு முதலிவற்றுடனும் தொடர்பு கொண்டும் பயன் அளிக்கவில்லை அன்றைய காலகட்டங்களில் நானும் அரசியலில் ஈடுபட்டு அண்ணன் அமிர்தலிங்கம், முடிசூடா மன்னன் இராஜதுரை, கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோருடன் தமிழ் தேசிய வரலாற்று பாதயாத்திரைகளுடன் தொடர்புபட்டதன் எதிரொலியோ என்னவோ கல்வி நடவடிக்கையில் ஈடுபட்ட எனது தங்கை புஸ்பா கடத்தப்பட்டார். இதனால் அவள் பெயரை மேற்படி அமைப்பிற்கு உச்சரிக்க வேண்டி ஏற்பட்டது.

இவ் அமைப்பின் மூலம் கல்விசார் அபிவிருத்தியின்போது கீழ் 3A எடுத்துள்ள மாணவ மாணவிகட்கு நன்கொடை வழங்கி வருவதுடன் கல்வி சார் கற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகரணங்களும் பிரயாண கஷ்டம் உள்ள வினாயகபுரம் போன்ற பகுதிகளில் துவிச்சக்கர வண்டிகளும் மற்றும் விவசாயத் தொழிலாளர்கட்கு மண்வெட்டி போன்ற உபகரணங்களும் பெண்களுக்கு சுய தொழில் முயற்சிக்காக சிறிய P.T.O அளவிலான பொருள் உதவிகளும் செய்கின்றோம். சமூக சேவையில் மக்களின் வருமான நிலைகண்டு ஜீவனோபாய உணவு விநியோகங்களையும் இடர் காலங்களில் அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, கண்ணகிபுரம் பகுதிகளில் வெள்ள அழிவுக்கான நிவாரணங்களையும் வழங்கியுள்ளோம். விசேடமாக சவுதியில் மரண தண்டனை நிறைவேற்றிய ரிஷானாவுக்காக அவரது குடும்பத்திற்கு 50,000 ரூபா வழங்கியுள்ளோம். அம்பாரை மாவட்டத்தில் உள்ள தமிழ் பிரதேசங்களில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற முதன்மை மாணவர்களை கௌரவித்தும் இருக்கிறோம். அத்தோடு குடிநீர் அற்ற விநாயகபுரம் போன்ற கிராமங்களில் கிணறு வசதிகளையும் இவ் அமைப்பு மூலம் செய்துள்ளோம்.

இவற்றைத் தவிர காரைதீவு கிராமத்தில் பிறந்த வித்தகர் விபுலாநந்த அடிகளின் திருவுருவச் சிலை ஒன்றை அவர் பிறந்த பூமியில் வைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அடிகளாரின் சிலை ஒன்றையும் நிறுவினோம். இதே போன்று மேலும் பல சமூக சேவைகளைத் திறம்படச் செய்வதற்கான செயற்திட்டங்களையும் மேற்கொள்ளவுள்ளோம்.

உயர் கல்விகற்று கடத்தப்பட்டு இதுவரை எந்த முடிவும் இல்லாது காலம் கடந்த நிலையில் உள்ள செல்வி செல்லையா புஸ்பராணியை நினைவு கூருமுகமாகவே எமது அமைப்பு இந்தச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

**செல்லையா இராசையா**
**பணிப்பாளர்**
புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு
(PEESDO) காரைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடமிருந்து வலம் கீழ்வரிசை: க.நடராஜா (ஆலோசகர்), சு.தில்லையம்பலம் (தலைவர்), செல்லையா இராசையா (நிறைவேற்றுப் பணிப்பாளர்), S.சிவராஜா (செயலாளர்), ந. பதிவரதன் (நிர்வாக உறுப்பினர்)

இடமிருந்து வலம் மேல்வரிசை: நி.நித்தியதர்சன் (நிர்வாக உறுப்பினர்), த.செல்லத்துரை (உப தலைவர்), பொ.செந்தூரன் (உள்ளக கணக்குப் பரிசோதகர்), செ.விஜயரெட்ணம் (உப செயலாளர்), S.தங்கவேல் (நிர்வாக உறுப்பினர்), சி. தெய்வநாயகம் (நிர்வாக உறுப்பினர்), ஆ.கிருஷ்ணபிள்ளை (நிர்வாக உறுப்பினர்), ந. பத்மபிரியன் (நிர்வாக உறுப்பினர்), சுதர்சன் (பொருளாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலைத்து நிற்கட்டும் சுவாமி விபுலாநந்தர் நாமம்.....

சோதீஸ்வரன் ஸுூரநுதன் B.Sc, SLEAS

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் எமது காரைதீவு மண்ணிற்கு மட்டுமல்ல முழுஇலங்கைத் திருநாட்டிற்கும், உலகமெங்கணும் பரந்து வாழ்கின்ற தமிழினத்திற்கும் பெருமை சேர்த்த பெருந்தகை. முதல் தமிழ்ப் பேராசிரியராக இருந்தது மட்டுமன்றி இலங்கையில் சைவ நெறி தழைத்தோங்க கல்லடியில் சிவானந்தா வித்தியாலத்தையும் பல்வேறு பிரதேசங்களில் பாடசாலைகளையும் சிறுவர் இல்லங்களையும் ஸ்தாபித்து கிழக்கில் சைவப்பாரம்பரியமிக்க சந்ததி உருவாவதற்கு காரணகர்த்தாவாக இருந்தார். சுவாமியின் இக்கைங்கரியம் நிகழாதுவிடின் முழுக் கிழக்கு மாகாணமுமே சைவ சமய பாரம்பரியத்தை இழந்திருக்கும்.

இம் மாமுனிவரின் பிறந்த மண்ணின் முகப்பில் அமைந்திருந்த அவரது திருவுருச்சிலையானது கடந்து இரண்டு தசாப்தங்களாக இல்லாமை பெரும் குறைபாடாகவிருந்தது. அக்குறையை நிவர்த்தி செய்ய தனிப்பட்ட நல்லுள்ளங்களும், பல்வேறு அமைப்புக்களும் சிந்தனை கொண்டிருந்தன. எனினும் புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பினர் அதற்கான பூர்வாங்க முயற்சியாக சுவாமியின் திருவுருவச்சிலையை அதன் ஸ்தாபகர் திருவாளர் செல்லையா இராசையா அவர்களின் சொந்த நிதியில் அமைப்பதற்கு முயற்சியெடுத்து இச்சரித்திர நிகழ்விற்கு கால்கோளிட்டிருந்தனர். அதற்கடுத்தபடியாக இதற்கான அரச அனுமதி பெறுவதிலிருந்து இத் திருவுருவச்சிலையை நிறுவுவதற்கான பூமி பூஜையை நடாத்தி சுவாமி சிலையை பிரதிஸ்டை செய்து காரைதீவு பொது அமைப்புக்கள் மற்றும் காரைதீவு பொதுமக்களின் பங்களிப்புடன், கௌரவ இந்து கலாசார அமைச்சரினால் திறந்து வைத்து சுவாமி சிலை இன்று கம்பீரமாக எமது மண்ணின் நுழைவாயிலில் தோற்றமளிக்கின்றதென்றால் அது புஸ்பா கல்வி பொருளாதார சமூக அபிவிருத்தி அமைப்பினரின் பெரும் பங்கினால் என்பதை எவரும் மறுக்க முடியாது.

சுவாமி விபுலானந்தர் பிறந்து 125 ஆண்டுகள் ஆகின்ற இத்தருணத்தில் சுவாமியின் திருவுருவச்சிலை திறப்பு நிகழ்வு தொடர்பானதான ஒரு நூல் வெளியிடப்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வரலாற்றுச் சான்றாகவும், பல்வேறு ஆய்வுகளை ஊக்குவிப்பதாகவும் அமையும் என நான் கருதுகின்றேன்.

காரைதீவு மண்ணைச் சேர்ந்தவர்கள் சுவாமி விபுலானந்தரின் உறவினன், அவரின் ஊர்க்காரன் என்றெல்லாம் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதை விடுத்து சுவாமி விபுலானந்தரின் கொள்கைகளும் அவரின் பணிகளும் மக்களிடத்தில் நேரடியாக கொண்டு செல்லப்படுவதும், சுவாமியின் படைப்புகளின் மீள்பதிப்புகள், சுவாமி தொடர்பான ஆராய்ச்சிகள், ஆவணப் படங்கள், போட்டிகள் போன்றவை ஒரு முறைமைப் படுத்தப்பட்ட வகையில் எமது மண்ணில் நடாத்தப்படுவதும் சுவாமி விபுலாநந்தருக்கு நாம் செய்யும் நன்றிக் காணிக்கைகளாகும். சுவாமி விபுலாநந்தர் எனும் பன்முக ஆளுமையைக் கொண்ட ஒருவர் இனி தோன்றுவது மிக அரிதெனிலும், எமது மண்ணிலிருந்து சுவாமி விபுலாந்தர் எனும் ஆளுமையின் நகல்கள் எதிர்காலத்தில் தோன்றுவதற்கு ஊக்கல் காரணிகளாக இச்செயற்பாடுகள் அமையும் என்பது திண்ணம். இதற்கு முதல் படியாக சுவாமியின் சிலை திறப்பும், அதனையொட்டி நடைபெற்ற நிகழ்வுகளும், இந்நூல் வெளியீடும் அமையும் என்பதில் ஐயமில்லை.

**சோதீஸ்வரன் ஸுரநுதன் B.Sc, SLEAS**

*பிரதிக் கல்விப் பணிப்பாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது”

**சு.தில்லையம்பலம்** (தவிசாளர்)

வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பதுபோல முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரும் இளமைப்பருவத்திலே தனது உள்ளத்தை ஒருநிலைப்படுத்தப் பழகிக்கொண்டார். ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்திலுள்ள வேம்பின் கீழிருந்து தியானத்தில் ஈடுபட்டு உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி உள்ளக்கமலத்தை அந்த பரப்பிரம்மத்திற்கு சார்த்தி இன்புற்றிருக்கிறார் என்பதனை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்திலுள்ள சுவரில் வரையப்பட்டுள்ள ஓவியம் சான்று பகர்கின்றது.

அவ்வாறு உள்ளக்கமலத்தை இறைவனுக்குச் சாத்தியதால் இளமையிலேயே அறிவும், ஆற்றலும் ஞாபகசக்தியும் இறையருளால் கிடைக்கப்பெற்றார். அவரின் தொடர்ச்சியான தியானப் பயிற்சியைத் தொடர்ந்து இராமகிருஷ்ண பரமகம்சரின் ஆசியினால் துறவு பூண்டு முத்தமிழ் வித்தகர் என்ற துறவியானார். இன்றைய இளம் சந்ததியினர் அவர் காட்டிய உள்ளக்கமலத்தை ஒருநிலைப்படுத்த பயிற்சி எடுத்தாலே போதும் உயர்ந்த வாழ்வை அடைந்துவிடலாம் என்பதனை அவரின் “உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது” என்ற வரி சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

கல்விக்கும் தமிழுக்கும் தொண்டு செய்யப் புறப்பட்டு இசைத்தமிழ், இயற்றமிழ், நாடகத் தமிழ் மூன்றையும் ஆய்ந்து யாழ் நூல் மற்றும் மதங்கசூளாமணி ஆகிய அரும்பெரும் பொக்கிஷங்களை தமிழ்கூறும் நல்லுலகிற்கு ஈந்த முத்தமிழ் வித்தகனுக்கு சிலை அமைக்க இயல்பாகவே எண்ணம் கொண்ட செல்லையா இராசையாவின் அயராத முயற்சியினால் அவரின் சொந்த நிதியில் சிலை செய்யப்பட்டது. இச்சிலையமைப்பிற்கு ஊர் மக்களின் இணைந்த செயற்பாடு தேவையென பல பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்து சமய விருத்திச் சங்கத்தையும் இணைத்துக்கொண்டு இதற்கான ஒரு குழுவையும் அமைத்து அவர்கள் மூலமாக இவ்வேலைகள் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன.

இவ்விடயத்தில் இந்து சமய விருத்திச் சங்கத்தின் செயலாளரும், சிலை அமைப்புக் குழுவின் செயலாளருமான திரு.கே.ஜெயராஜ் அவர்களின் ஆக்கபூர்வமான செயற்பாடு மிகவும் பாராட்டத்தக்கது. சிலை அமைப்பதற்கான அனுமதி பெறுவதில் திரு செல்லையா இராசையா அவர்கள் பல தடவைகள் கொழும்பு சென்றும் இந்தியா சென்றும் மேற்கொண்ட பணிகளையும் நான் பாராட்டுகிறேன்.

சிலை அமைப்பு விடயத்தில் அக்கறையோடு செயற்பட்ட அனைவருக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் எனது உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சு.தில்லையம்பலம்** (தவிசாளர்)
புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பு (PEESDO),
காரைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பின் செயலாளர்

**எஸ். சிவராஜா ஆசிரியர் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

“தோன்றின் புகழொடு தோன்றுக அஃ.திலார் தோன்றலின் தோன்றாமை நன்று” எனும் பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுர் வாக்கிற்கு இணங்க எமது புண்ணியபதியாம் காரேறு மூதூராகிய காரைதீவிற்கு உலகளாவிய முகவரியை தேடித்தந்தவர் சுவாமி விபுலானந்தர் ஆவார். கற்றோரும் மற்றோரும் போற்றும் சுவாமி அவர்கள் சுவாமி விவேகானந்தர் எதிர் பார்த்த அறிவும் இதயமும் இணைந்த முழுமனிதராக விளங்கினார். ஜீவசேவையே சிவபூஜை என்ற நடைமுறை வேதாந்த கருத்தை கிழக்கிலங்கையில் விதைத்து கல்வித் துறையில் சாதனை படைத்தவர் சுவாமி விபுலாநந்தர் என்றால் மிகையாகாது. மனிதனுக்குள் ஏற்கனவே புதையுண்டு கிடக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும், என்ற சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனையை முழுமையாக சுவாமி அவர்கள் செயற்படுத்தினார். பண்டிதராக நல் ஆசானாக விஞ்ஞான ஆராய்ச்சியாளனாக, பேராசிரியராக, இசைமேதையாக தனது அறிவுத்திறத்தால் உலக மாந்தர் அனைவரையும் தன்பக்கம் திரும்பி பார்க்க வைத்தவர் சுவாமி விபுலாநந்தர்.

இப்பேர்ப்பட்ட பெருமகனாருக்கு 1969இல் முதன் முதலில் முழு உருவச்சிலை காரைதீவு கிராமாட்சி மன்ற கட்டிடத்தின் முன் நிறுவப்பட்டது. இச்சிலை இடையில் ஏற்பட்ட வன்செயலின் போது இல்லாமல் போனதின் பின் முழு உருவச்சிலை இல்லை என்ற குறை இக்கிராமத்தில் இருந்து வந்தது. சுமார் 47 வருடங்களின் பின்னர் காரைதீவு பிரதேச சபையின் தவிசாளராக இருந்த திரு. எஸ். இராசையா அவர்களின் தனிப்பட்ட அயராத முயற்சியினால் அவரது சொந்த நிதி மூலம் இச்சிலை வடிவமைக்கப்பட்டு கடின முயற்சியினால் அரசிடமிருந்து சிலை வைப்பதற்கான அனுமதியும் பெறப்பட்டு 2016 இலே கௌரவ இந்து கலாசார அமைச்சரால் திறந்தும் வைக்கப்பட்டது.

இச்சிலையை வைப்பதற்காக கிராமத்திலிருந்தும், வெளிநாட்டில் வாழ்கின்ற எமது மண்ணைச் சேர்ந்தவர்களும் நிதி உதவி அளித்து எமது பணி நிறைவு பெற ஊக்கம் தந்திருந்தார்கள். காரைதீவு இந்து சமய அபிவிருத்தி சங்கமும் சிலையை நிறுவும் பணிக்கு எம்மோடு இணைந்து கடினமாக உழைத்திருந்தார்கள். இவர்கள் அனைவருக்கும் புஸ்பா பொருளாதாரக் கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பின் சார்பாக உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**எஸ். சிவராஜா ஆசிரியர்**
செயலாளர்,
புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பு (PEESDO)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

மாண்ட போதும் வாழுகின்ற மாமனிதன்
பார் புகழப் பாரதிக்கு பெருமை சேர்த்த பேராளன்
காரேறு மூதுராம் காரைதீவின் கனியமுதம்
திக்கெட்டும் பெயர் விளங்கும் சுவாமி விபுலாநந்தன்

நாமமது நடு கல்லாய் நிலைத்திடவே
நடு நிலையில் சிலை அமைக்கும் தனிமுயற்சி
செல்லையா இராசையாவின் மன உதிப்பு
சிலை கொணர்வு பாங்குடனே சிலை அமர்வு

இந்து சமய விருத்திச் சங்க ஒத்துழைப்பு
என்றுமே இவை போற்றப்பட வேண்டியவை
எண்ணி உயர்த்தப்பட வேண்டியவை
ஜென்மங்கள் கழிந்தாலும் பரம்பரைகள் உதித்தாலும்

காலங்கள் நகர்ந்தாலும் சுவாமியின் உருவச்சிலை
"உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற
உயர்ந்த எண்ணக்கருவை விளக்கி நிற்க
என்றும் வாழ்த்தி நிற்கும்.

**R. ரகுபதி (அதிபர்)**
கமு/கமு/சண்முக மகாவித்தியாலயம்
காரைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

கிழக்கிலங்கையில் உள்ள எமது கிராமமாகிய காரைதீவுக்கு முகவரி தந்த முகவரியாளர் சுவாமி விபுலாநந்தர். அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் இலங்கை பல்கலைக்கழகத்திலும் முதலாவது தமிழ் பேராசிரியராக திகழ்ந்தவர். இதனால் தமிழ் உலகு அறிந்த பேறறிஞர் "ஈசன் உவக்கும் இன் மலர் மூன்று" "கங்கையில் விடுத்த ஓலை" போன்ற கவித்திறனுடைய நூல்களை, மதங்க சூளாமணி எனும் நாடக நூலினையும், யாழ் நூல் எனும் இசை நூலினையும் தந்து முத்தமிழ் வித்தகர் எனும் விருதுப் பெயரைப் பெற்றவர்.

சங்ககாலத்திற்குப் பின்னர் யாழை நினைத்துப்பார்த்தவர். அவருடைய யாழ் நூலில் உள்ள விடயத்தை தமிழ், இசை, பௌதீகவியல் போன்ற துறைகளில் அறிவுள்ளவர்களே விளங்கிக் கொள்ள முடியும். அவரின் தனித்துவ ஆற்றலை இந்நூல் வெளிப்படுத்தியது. இவ்வாறான நூலினை மீண்டும் எழுதவுமில்லை எழுதவும் முடியாது. அவ்வாறான சிறப்பைக் கொண்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வட இலங்கையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமிழையும் சைவத்தையும் எவ்வாறு கட்டிக் காத்தார்களோ அவ்வாறு கிழக்கிலங்கையில் இராமகிருஷ்ண மிசனுடன் இணைந்து தழிழையும் சைவத்தையும் கட்டிக் காத்தவர் சுவாமி விபுலாநந்தர்.

சுவாமியின் பூதவுடல் மறைந்தாலும் அவருடைய புகழ் இன்றும் பேசப்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் இம்மண்ணுக்கு பெருமை சேர்த்த அம்மைந்தனின் திருவுருவத்தினை பிரதான வீதியின் முச்சந்தியில் அமைத்துள்ளமை பாராட்டுக்குரியது, போற்றத்தக்கது. இதனூடாக இளஞ்சந்ததியினருக்கு சுவாமியின் எண்ணங்களையும், செயற்பாடுகளையும் அறிவதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது. அத்தோடு சுவாமியின் வாழ்க்கைத் தரவுகளும் திருவுருவத்திற்கருகில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் சுவாமியினைப் பற்றிய விடயங்களை அறியாதவர்களும் தெரிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

எனவே இப்புனித கைங்கரியத்தில் ஈடுபட்ட புஸ்பா பொருளாதார கல்வி சமூக அமைப்புக்கும், இந்து சமய விருத்தி சங்கத்தினருக்கும் ஏனைய சமய நிறுவனங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய பண்பாடுகளையும் கலாசாரங்களையும் பேணி .போற்றி வருகின்ற அமைப்புகளின் பணிகள் தொடர வேண்டுமென இறைவனை யாசிக்கின்றேன்.

**தா. சிவசுப்பிரமணியம்**
சிரேஸ்ட பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகார சபை
அக்கரைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சுவாமி விபுலாநந்தரின் திருஉருவச்சிலை உத்தியோக பூர்வமாக கையளிக்கும் வைபவத்தில் வெளியிடப்படும் ஞாபகார்த்த நூல் வெளியீட்டுக்கான**

# வாழ்த்துரை

கற்புக்கரசி கோயில் கொண்ட காரேறும் மூதூராம் காரைதீவின் நாமத்தை உலகறியச் செய்த மாபெரும் துறவி சுவாமி விபுலாநந்தராவார். சுவாமி அவர்களால் எமது கிராமமும் மக்களும் பெருமிதம் கொள்ள முடியும். எங்கள் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கும் சுவாமிகளுக்கும் இடையில் நீண்ட தொடர்பு இருந்து வந்துள்ளமை வரலாறாகும். கண்ணகியின் அருளை சுவாமி அவர்கள் பெற்றதனால்தான் முத்தமிழ் சாதனையை சுவாமிகளால் செய்ய முடிந்தது. இச்சாதனைக்கு காரணமாகவும், யாழ் நூல் ஆக்கத்திற்கும் அரங்கேற்றத்துக்கும் மூலப்பொருளாகவும் அமைந்தது காரைதீவு கண்ணகி அம்பாளும் சிலப்பதிகாரமும் என்பதை இந்த இடத்தில் ஆணித்தரமாகக் கூறுவேன்.

இவ்வாறான மேன்மைமிக்க பெருந்தகையை கௌரவிக்கும் முகமாக எமது ஆலயத்தின் முன்னாள் தர்மகர்த்தா அமரர் டாக்டர் இ.பரசுராமன் அவர்கள் கிராமாட்சி மன்றத் தலைவராக இருந்தபோது 1969 இல் இக்கட்டடத்தின் முன் முழு நீளச்சிலை ஒன்றை நிறுவி அதனைப் பெருவிழாவாக செய்திருந்தார். இதன் பின் இடையில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக இச்சிலை உடைக்கப்பட்டது. சுமார் 47 வருடங்களின் பின் முன்னாள் பிரதேச சபை தவிசாளராக இருந்த திருவாளர் செ. இராசையாவின் பெரு முயற்சியால் இச்சிலை செய்விக்கப்பட்டு கௌரவ இந்து கலாசார அமைச்சரால் திறந்தும் வைக்கப்பட்டது. இச்சிலையை பிரதேச செயலகத்துக்கு கையளிக்கும் வைபவத்துக்காக வெளியிடப்படும் ஞாபகார்த்த நூலுக்கு எனது சார்பிலும் எமது கண்ணகியம்மன் ஆலயம் சார்பிலும் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**சா.கங்காதரன்**
தர்மகர்த்தா, கண்ணகி அம்மன் ஆலயம்,
காரைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருவே துணை

**கந்தவனம் நடராஜா (J.P.) ஆலோசகர்**
புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு

இறைவனே மனிதனுக்கு குருவாக வந்த வரலாறு தான் அதிகம். மனிதனை மனிதனாக வாழவைக்க காலத்துக்கு காலம் ஞான வழிகாட்டிகள் தோன்றுவதுண்டு, மகாபாரதத்திலே அர்ஜுனருக்கு பகவான் கண்ணனே ஆன்மீக குருவாக இருந்தார்; அதன் விளைவே பகவத் கீதை. மாணிக்கவாசகருக்கு பரமசிவனே குருந்த மரத்தின் அடியில் குருவாக வந்து காட்சி கொடுத்தார்; அதன் விளைவுதான் திருவாசகம் என்னும் தேன். இதே போன்று பதினெண் சித்தர்கள் தோன்றி எமது சிந்தனைகளை செம்மைப்படுத்தி ஜீவசமாதி அடைந்தார்கள். 171 நாட்டு உலக ஆன்மீகத் தலைவர் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகள் மனிதர்களோடு மனிதனாக நாட்டில் இருக்கும் காலங்களில் இம் மண்ணை நேசித்தவராக தனது பாதங்களை இம்மண்ணில் பதிப்பதிலும் தவறுவதில்லை. இதற்கு சுவாமி பதில் அளிக்கையில் சித்தானைக்குட்டி சுவாமி நடமாடி ஜீவ சமாதி அடைந்ததும், அசையாத குருபக்தி கொண்ட சுவாமி விபுலாந்தர் அவர்கள் பிறந்த மண்ணும்தான் என்பார். இதே போன்றுதான் இராமகிருஷ்ண பரமாத்மாவின் தோன்றலான விபுலாநந்த சுவாமிகளும் அசையாத குருபக்தி கொண்டு சைவமும் தமிழும் தழைத்தோங்க தன்னையே அர்ப்பணித்து யாழ்நூலை உலகிற்களித்து பிறந்த மண்ணிற்கு நற் பெயரையும் அழியாத புகழையும் தந்துவிட்டு ஜீவ சமாதி அடைந்த சுவாமிஜீ அவர்களுக்கு முழு அளவிலான திருவுருவச்சிலை நிறுவுவதில் புஸ்பா பொருளாதார அமைப்பு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது.

இப்புண்ணிய பூமியின் இதயமாக விளங்கும் முச்சந்தியிலே வீதி நெடுகிலும் வியாபாரத் தளங்களும் ரவி சினிமா திரையரங்கும், சக்தி அரிசி ஆலையும், இரவுபகலாக விழித்தியங்கும் சிற்றுண்டிச் சாலைகளும் வடமேற்கும், தென்மேற்கும் விளைநிலங்கள் அரசயடி சித்தி விநாயகர் ஆலயமும் புத்தர் சிலையும் ஒருங்கே அமையப்பெற்ற முப்பரிமாண சந்தியிலே மேற்கே விசாலமான தாமரைத்தடாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்பு, வெள்ளை, பூக்கள் வாசனையை பரப்பிக்கொண்டிருக்கும் வம்மிமரப் பூக்கள் பிரம்ம முகூர்த்த வேளையிலே விபுலாநந்த அடிகளின் அரை உருவச்சிலை. இக் காட்சி சகல மக்களின் மனதையும் கவர்ந்திருந்தன.

கால மாற்றத்திலே வேண்டத் தகாத நிகழ்வுகளால் இப்பிரதேசத்தின் செல்வங்கள் சீரழிக்கப்பட்டதும் சுவாமியின் சிலை விசமிகளால் மறைக்கப்பட்டதும் வரலாறு. எத்தனை முறை விழுந்தாலும் எழும்பித் தான் ஆகவேண்டும். அந்த வகையிலே சித்தானைக்குட்டி சுவாமி, காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகள், சுவாமி நடராஜாநந்த ஜீ ஆகிய முப்பெரும் குரு அருளும் ஸ்ரீ கண்ணகை அம்மனின் சக்தியும் கிடைக்கப் பெற்றதால் முழு அளவிலான திருவுருவச் சிலை புதுப்பொலிவுடன் கம்பீரமான தோற்றத்தோடு விபுலாநந்த சதுக்கத்திலே மிகவும் பக்தி பூர்வமாக இந்துசமய குருமார்கள், துறவிகள் முன்னிலையில் இந்துசமய மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அவர்களால் 21.04.2016 திகதி திறந்து வைக்கப்பட்டதை காரைதீவு மண் விழாக் கோலம் கொண்டு கை கூப்பி நிற்கின்றது.

**கந்தவனம் நடராஜா (J.P.)**

ஆலோசகர்,

புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு (PEESDO)

காரைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயர்ந்தவன் துணிந்தவன்

**தம்பாபிள்ளை செல்லத்துரை (J. P.)**
ஒய்வு பெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்
காரைதீவு 12

விபுலாநந்த அடிகளார் பற்றிச் சில வார்த்தைகள் கூறுங்கள் எனக்கேட்டால் மீன்பாடும் தேன்நாடாம் மட்டுநகர் என்று ஆரம்பித்து காரைதீவில் பிறந்தார். என்று முடிப்பார்கள். இதற்கு என்ன காரணம் எனப் பார்த்தால் அடிகளாரின் அதிகமான கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளும், பாடும் மீனினத்தின் ஆய்வுகளும், அன்னாரது சமாதியும் மட்டுநகர் கல்லடியில் அமையப் பெற்றது தான். அவரது வாழ்க்கை வரலாறு எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஏனெனில் அன்னார் குழந்தைகளின் உள்ளம் முதல் முதியவர்களின் உள்ளம் வரை புகழ் பூத்த மாமனிதர்.

கல்வியை கசடறக் கற்ற அடிகளார் கல்வியில் ஓர் கரையைக் கண்டவர் எனலாம். அன்னார் இயற்றிய நூல்களுள் புகழ் பெற்று விளங்குவது "யாழ் நூலாகும்" நூல்கள் தவிர ஆய்வு கட்டுரைகள் சஞ்சிகைகள் என ஆயிரமாயிரம். அடிகளார் பசித்திருந்து தனித்திருந்து விழித்திருந்து இந்த நூல்களை இயற்றியது மண்ணிலுள்ள மக்கள் அனைவரும் படித்து பயன்பெற வேண்டியேயன்றி பெட்டகத்துள் வைத்துப் பூட்டிக் கும்பிடுவதற்கல்ல, விபுலாநந்த அடிகளாரின் ஜனன, சிரார்த்த தினங்களை ஆயிரமாயிரம் மக்கள் நினைவு கூருகின்றனர். இவர்களுள் எத்தனை பேர் யாழ் நூலைப் புரட்டினார்கள் என்றால் நான் நினைக்கின்றேன் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே அன்றி வேறுயாருமல்ல.

யாழ் நூலில் கூறப்பட்டுள்ள ஏழு வகையான யாழ்களையும் தானே செய்து ஏழு வகையான சுரங்களுடன் கூடிய நூற்றெட்டு தாளங்களையும் மீட்டுப்பார்த்த மாமனிதர் அடிகளார். 7ம் நாற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசக சுவாமிகளின் "திருப்பள்ளி எழுச்சியில்" இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால் என்ற கூற்று அக்காலத்திலும் யாழ் எனும் கருவி இருந்ததை பறைசாற்றுகின்றது. இருந்தாலும் 18ம், 19ம் நூற்றாண்டுகளில் அவை மருவி மறைந்து கிடந்தன.

அடிகளாரின் யாழ் நூலில் விஞ்ஞானமும் கணிதமும் இசையுடன் சேர்ந்துள்ளன. பௌதீகவியலிலே ஒலி (sound) என்ற பிரிவு உள்ளது. ஒலியின் வேகம் அதன் கட்டுப்பாடு இசைமீட்டும் நரம்புகளின் வெப்ப தட்ப நிலைகளில் ஒலியலையின் நீளமாற்றங்கள் உலோக நரம்புகளின் விரிவுக் குணங்களின் போன்ற இன்னோரன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான விளக்கங்கள் பொதிந்த, மேலை, கீழைத்தேய மக்களினால் புகழப்படுகின்றன. அந்த யாழ் நூல் எனும் பொக்கிசத்தை ஆக்கிய மாமனிதர், முத்தமிழிலே கரை கண்ட வித்தகர்.

ஆன்மீகத்திற்கும் அற நெறிக்கும் தன்னை அர்ப்பணித்த மாமேதை. இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பாதையில் புகுந்து துறவு பூண்டு இலங்கையின் கிராமப் புறங்களின் கல்விக்காக இ. கி. மிசன் மூலம் பாடசாலைகளைக் கட்டிக் கல்விக்கு வித்திட்ட வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் உருவம் உறைத்துப் பதிய வேண்டும் என்பதற்காகத்தான் பன்னிரரெண்டு அடி பாரிய சிலை ஒன்றைப் பிறந்த மண்ணின் பிரதான சந்தியிலே வைக்க வேண்டும் என்று துணிந்தான் செல்லையா இராசையா.

ஆயிரம் சிலைகளை வீட்டிற்குள் வைக்கலாம். ஆயிரம் சிலைகளைச் சொந்தக்காணிகளுள் வைக்கலாம். மலர்களையும் வெளியிடலாம். மார்பு தட்டலாம் ஆனால் நடு வீதியில் சிலை வைப்பதென்பது முடியாத காரியம். இன்றைய அரசியல் நிலையில் யுத்தம் முடிந்த பின்னர் தமிழர்கள் எந்த இடத்தில் வைத்து எண்ணப்படுகிறார்கள் என்பது நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அம்பாரை மாவட்டத்தில் தமிழர்கள் மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில் துறவிக்கு நடு வீதியில் சிலை வைப்பது சின்னக் காரியமல்ல.

அரச அனுமதி பெறுவதற்குப் புஸ்பா பொருளாதார கல்வி அபிவிருத்தி அமைப்பின் இயக்குனர் எத்தனை ஏணிப்படிகள் ஏறி இருப்பார் என்பது எமக்குத் தெரியாது. எத்தனை (V.I.P.) பிரமுகர்களை சந்தித்துள்ளார் என்பதும் புரியாது. அவர் தனக்கு உதவிக்காக பௌத்த சங்கங்களையும் சங்கைக்குரிய சில தேரர்களையும் சேர்த்துக்கொண்டு பௌத்த கலாசார அமைச்சின் வாசற்படியில் காத்து நின்று காத்து நின்று அமைச்சரின் அனுசரணையுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பூரண அனுமதியைப் பெற்றுக் கொண்டே அவர் தனது அமைப்பின் பூரண பொருளாதார ஒத்துழைப்புடன் அடிகளாரின் சிலை ஒன்றினை நித்திரையும் நிம்மதியுமின்றி சுமார் 12k.m தொலைவில் இருந்து கொண்டு வந்து காரைதீவு நடுச்சந்தியிலே நிறுவினர்.

காரைதீவுச் சந்தியிலே சிலை நிறுவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது செல்லையா இராசையாவுக்குப் பெருமை சேர்ந்து விடுமே என்று காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலர் கவுண்டி இயந்திரம் பெறுவதில் சில தடைகளை ஏற்படுத்தியும் பார்த்தனர். தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து 21-12-2014ம் திகதி அடிகளாரின் சிலையை நிறுவினார் செல்வையா இராசையா. ஆரம்ப வீதி அனுமதி பெறுவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைதீவு பிரதேச சபையூடாக அதன் செயலாளர் திரு. S. நாகராசா அவர்கள் செய்த உதவி என்றும் நினைவில் நிறுத்த வேண்டிய ஒன்றாகும்.

நிறுவப்பட்ட சிலையை திறந்து வைக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்ட செல்லையா இராசையா அடிகளார் ஒட்டு மொத்த காரைதீவுக்கும் உரித்தானவர் என்பதால் இந்த விழாவைத் தானும், தனது அமைப்பும் தனிப்படச் செய்யாது, காரைதீவு மக்கள் மற்றும் அமைப்புகளையும் சேர்த்து இறுதி விழாவைச் செய்வது உகந்தது என்ற உயர்ந்த எண்ணங்கொண்டு இந்து சமய விருத்திச் சங்கத்தையும், விபுலாநந்த மணி மண்டப நிருவாகத்தையும் அழைத்து விஷ்ணு பகவானுடைய ஆலய முன்றலிலே புஸ்பா பொருளாதாரக் கல்வி அபிவிருத்தி அமைப்புடன் சேர்ந்து திருவாளர் வெ.ஜெகநாதன் ஐயாவின் தலைமையில் அடிகளாரின் திருவுருவச்சிலை திறப்பு விழாக்குழுவை நல்லெண்ணத்துடன் தெரிவு செய்து விட்டார்.

விழாக்குழுவை அமைத்த பின்னர் குழுவின் செயற்பாட்டில் இறங்கினார். அப்போது இந்துசமய சம்மேளனத்தின் அமைப்பின் பேரில் திரு. செல்லையா இராசையா இந்தியா சென்று விட்டார். அங்கு மாநில மத்திய அமைச்சர்கள் ஒருசிலருடன் விபுலாநந்த அடிகளின் முத்திரை ஒன்றை இந்தியாவில் வெளியிடுவதற்கான சில கருமங்களையும் செய்து விட்டு இலங்கை திரும்பினார்.

அடிகளாரின் சிலைதிறப்பு விழாக்குழுவினர் மிகத் திறமான முறையில் செயற்பட்டு மிகக் கச்சிதமான முறையில் இந்துமத அலுவல்கள் அமைச்சர் கௌரவ D.M. சுவாமிநாதன் ஐயா அவர்களைக் கொண்டு அடிகளாரின் சிலையை திறந்து விழாவை நிறைவு செய்தனர். வேலிக்கு வைத்த முள் காலுக்குத் தைக்கிறதே என நினைக்காமல் செல்லையா இராசையா "யார் குத்தினாலும் அரிசாகிறதே" என்ற உயர்ந்த பண்புடன் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் சாத்திரம் தாழ்த்தினார்.

போற்றுவார் போற்றட்டும்
தூற்றுவார் தூற்றட்டும்
போகட்டும் கண்ணுக்கே.

**தம்பாபிள்ளை செல்லத்துரை (J. P.)**
ஓய்வு பெற்ற கிராம சேவை உத்தியோகத்தர்
காரைதீவு 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றச் செயலாளர்

**எஸ். தங்கவேல் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக, இந்து சமய கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்காக, இசைக்கலையை மேலோங்கச் செய்வதற்காக, தமிழ் மொழி வளர்ச்சிக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அத்தோடு தன் வாழ்க்கையையே அர்ப்பணித்து செயலாற்றிய சுவாமி விபுலாநந்தரின் நாமத்தை நன்றியோடு நினைவு கூருமுகமாக அவருக்கு உருவச்சிலை நிறுவியது சாலப் பொருத்தமான செயலாகும். அதற்கு மேலாக பெரிய உயரமான சிலையொன்றை அவர் பிறந்த மண்ணிலே தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் தரிசித்து செல்லக்கூடிய வகையில் அமைத்திருப்பது மிகப் பொருத்தமான காரியமாகும்.

உலகம் போற்றும் உத்தமர் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கே சொந்தமானவர். இமயம் வரை சென்று தமிழ் தொண்டாற்றிய பெருமைக்குரியவர். இராமகிருஷ்ண சங்கத்திலே இணைந்து அதனூடாகப் பல கல்விக் கூடங்களை நிறுவி பாமர மக்களின் கல்வி வளர்ச்சிக்கு அத்திவாரம் இட்டவர். அநாதைச் சிறுவர்களின் நல்வாழ்வுக்காக இல்லங்களை அமைத்து பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு வழிவகுத்தவர். இத்தகைய செயல்களால் பெருமையடைந்த பெருந்தகைக்கு சிலையமைத்து நினைவு கூர்ந்துள்ளனர் காரைதீவு மக்கள்.

சுவாமி விபுலாநந்தரின் நூற்றாண்டு நினைவாக அவர் பிறந்த இல்லத்தோடு இணைந்து ஒரு பெரிய நினைவாலய கட்டடத்தை கட்டி அந்த கலாலயத்தின் முன்பாக சுவாமியின் முழு உருவச் சிலையை அமைத்து வருங்காலச் சந்ததியினருக்கு ஞாபகமாக கையளித்து மகிழ்ந்தது சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம். அதைத் தொடர்ந்து சுவாமியின் 125 வது ஜனன தின (1892-2017) நினைவு நிகழ்வுகள் நடைபெறப் போகும் இவ்வேளையிலே உயரமான ஒரு சிலையை அமைத்து மக்களுக்கு கையளிக்கும் நிகழ்விற்கு எனது வாழ்த்துச் செய்தியை கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இச்சிலையமைப்பிற்கு முன்னின்று உழைத்தவர்கள் பாராட்டிற்கு உரியவர்கள்.

குறிப்பாக புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பும், அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்லையா இராசையா அவர்களின் செயற்பாடும் காத்திரமானதாகும்.

இச்சிலை அமைப்பின் தொடக்க நிகழ்வில் பங்களிப்புச் செய்ததோடு அச்சிலை அமைப்பிலும் ஒத்துழைப்பு வழங்கியது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

சுவாமி விபுலாநந்தரின் சிலை கையளிப்பு விழா சிறப்பாக நடைபெற எனது நல்வாழ்த்துக்கள்.

**"உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நித்தியம் வாழும் வித்தகன்

**புத்தக ஆசிரியனாகி புகழ்பெறு யாழ்நூல் ஆக்கி**
**பத்திரிகை ஆசிரியனாகி பல்கலைக்கழகம் தன்னில்**
**வித்தக ஆசிரியனாகவும் விளங்கிய விபுலாநந்தன்**
**செத்திலன் அமரனாகி நித்தியம் வாழ்கின்றானே**

சுவாமி விபுலாநந்த அடிகளார் எமது ஊரில் பிறந்தாலும் எமது ஊருக்கே மட்டும் சேவை செய்தவராக அவரைக் கருத முடியாது. அவர் முழு நாட்டிற்கும் அர்ப்பணிப்போடு சீரிய தொண்டாற்றிய ஒரு ஆன்மீகத் துறவியாவார். அவருடைய அளப்பரிய பணியை இன்று உலகமே மதிக்கிறது. அவர் புகழ் தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாக இவருடைய நாமத்தில் கல்லூரிகள், வீதிகள், மன்றங்கள் என எல்லா இடங்களிலும் பெயர் சூட்டப்பட்டிருப்பதனைக் காணலாம். அதேபோன்றே அவரது ஞாபகார்த்தமாக சிலைகளும் நிறுவப்பட்டு அவரை நினைவுகூருவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இவ்வாறு எல்லோராலும் பெரிதாக மதிக்கப்பட்டு எமது கிராமத்திற்கே நல்ல மதிப்பையும், மரியாதையையும் பெற்றுத் தந்த இந்த மாபெரும் துறவிக்கு எமது கிராமத்தின் மையப்பகுதியான பிரதான வீதி முச்சந்திப்பகுதியை விபுலாநந்த சதுக்கமெனப் பெயரிட்டு சுவாமிகளின் அரையுருவச் சிலையொன்று வைக்கப்பட்டிருந்ததாகவும் அச்சிலை பின்னர் நாசகாரர்களால் அழிக்கப்பட்டதாகவும் பெரியோர்கள் கூறுவார்கள். இதன் பின்னர் பிரதான வீதியில் விபுலாநந்தா பொது நூலகம் அமைக்கப்பட்ட போது அதற்கு முன்னால் ஒரு சிலை நிறுவப்பட்டு அச்சிலையும் யுத்த சூழ்நிலையில் அவ்விடத்திலிருந்து இல்லாமல் செய்யப்பட்டதும் பெரும் குறையாகவே இருந்து வந்தது. அதன் பின்னர் விபுலாநந்தா ஞாபகார்த்த பணி மன்றக் கட்டடம் அமைக்கப்பட்டு அங்கு ஒரு சிலை நிறுவப்பட்டு சுவாமியினுடைய நிகழ்வுகள் யாவும் அங்கேயே நடைபெற்று வருவதனைக் காணலாம் அச்சிலையைத் தவிர இக்கிராமத்தில் வேறெங்கும் சுவாமிகளின் சிலை இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் அனைவரது பார்வையும் திரும்பும் காரைதீவின் மையப்பகுதியின் பிரதான வீதி முச்சந்தியில் அவரது முழு உருவச் சிலை ஒன்றினை நிறுவவேண்டுமென்பது இக்கிராம மக்களின் ஆதங்கமாக இருந்து வந்த போதிலும் யார் முன்னெடுப்பது? இதை யார் முன்னின்று செய்வது? என்பதில் இழுபறி நிலை இருந்து வந்த சந்தர்ப்பத்தில் புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பு முன்வந்து சிலை அமைப்பு வேலைகளை முன்னெடுத்ததுடன் இதற்குத் தடங்கலாக இருந்துவந்த அத்தனை தடைகளையும் நீக்கி சிலையினையையும் செய்து வந்து நிறுவியுள்ளது. சிலை நிறுவப்பட்டதும் இக்கிராம மக்கள் அனைவருமே மட்டில்லா மகிழ்ச்சியடைந்தனர். சிலை நிறுவப்பட்ட பின்னரும் அதன் வேலைகள் பூரணமாக முடிக்கப்படுவதற்கிடையில் பல தடைகள் ஏற்பட்டதை நான் நன்கறிவேன். அவற்றிற்கெல்லாம் தீர்வு கண்டு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட சுவாமியின் சிலை மையப்பகுதியான விபுலாநந்த சதுக்கத்தில் கம்பீரமாகக் காட்சியளிப்பது எமது மண்ணில் பிறந்த மகானுக்கு எமது மண்ணைச் சேர்ந்த மக்கள் அளித்த பெரும் கௌரவம் என்றுதான் நான் கூறுவேன்.

"எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு" என்ற வள்ளுவனின் வாக்குப்போல இப்பெரும் பணியை ஆரம்பித்து வைத்த புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பிற்கு இக்கிராம மக்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளனர். அதேபோல் இச்சிலை அமைப்பதில் உடன் நின்று பெரும் பங்காற்றிய இந்து சமய விருத்திச் சங்கத்தினரும் பாராட்டுக்குரியவர்கள். அத்தோடு இச்சிலை அமைப்பு வேலைகள் முற்றுப்பெற பல வழிகளிலும் உதவிகள் புரிந்த நல் உள்ளங்களும் நன்றிக்குரியவர்களே என்ற செய்தியினையும் இச்சிறப்பு மலர் ஊடாக தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**எஸ். நாகராஜா – செயலாளர்**

பிரதேச சபை,

காரைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் பெற்று வாழி



முத்தமிழ் வித்தகனாய் திகழும் எங்கள்
முதுசம் என அவதரித்தார் காரைதீவில்
இத்தரையோர் ஏற்றுகின்ற ஏந்தல் எங்கள்
இணையில்லாப் பேரறிஞன் விபுலாநந்தன்.

முத்தமிழும் கற்றுணர்ந்த மூதறிஞனாகி
முழு உலகும் வியப்புறவே மண்ணில் வாழ்ந்து
ஆத்மீகம் அறநெறிகள் அனைத்தும் பேணி
அகிலமதில் அறநெறியில் வாழ்ந்தார் நன்றே.

ஈழவள நாடு இந்த அகிலம் மீதில்
எண்திசையும் புகழ் பரப்பி செழித்து ஓங்கி
சூழ்கலி நீங்கி இந்தப் புவனம் மீதில்
சோபிதங்கள் பல சேர்த்தார் விபுலஞானி

காரைதீவுச் சந்தியிலே கம்பீரமாய்க்
காட்சிதர விபுலனுக்குச் சிலையமைத்த
பெருமகனாம் செல்லையா இராசையாவின்
புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு புகழ் பெற்று வாழி.

**அன்பு சண்முகம் (J.P)**
ஓய்வு நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர்,
காரைதீவு 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்

**வெ. ஜெகநாதன்** அவர்களின்

# வாழ்த்துரை

சுவாமி விபுலாநந்தர் உலகம் போற்றும் உத்தமர். அவர் புகழ் எங்கும் பேசப்படுகிறது. இப்பெரியார் சிறந்த தமிழ் அறிஞர். இசைத்துறையை இனிதே ஆராய்ந்தவர். சிறந்த விஞ்ஞானி

இராமகிருஷ்ன மிஷன் துறவியாக படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் உதவியவர்.


புத்தக ஆசிரியராகப் புகழ்பெற்ற யாழ் நூலாக்கி, பத்திரிகை ஆசிரியராகி, பல்கலைக்கழகம் தன்னில் வித்தக ஆசிரியராயும் விளங்கிய விபுலாநந்தன் செத்திலன் அமரனாகி, நித்தியம் வாழ்கின்றானே என்று செப்புகின்றது தியாகியின் பாடல்.

இந்த சிறப்பு மிக்க சுவாமி அவர்கள் எமது காரைதீவு மண்ணில் பிறந்தது எங்கள் ஊரவர் அனைவருக்கும் பெருமை தரும் விடயம். இவரை என்றும் வருங்காலச் சந்ததியினர் நினைவு கூர வேண்டும் என்ற பேரவாவில் காரைதீவு புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளரும், எமது காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தலைவருமான திரு.செல்லையா இராசையா அவர்கள் காரைதீவு சந்தியில் சுவாமியின் திருவுருவச் சிலையை நிறுவினார். அவரது எண்ணம் நிறைவேற காரைதீவு மக்களின் அனுசரணையுடன் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதில் ஈடுபட்டுள்ள அனைவரையும் மனதார வாழ்த்துகின்றேன்.

**வெ. ஜெகநாதன்**
ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்
காரைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விபுலனும் சிலையும்

**இ. தங்கராசா**
ஓய்வு பெற்ற அதிபரும்,
பாலையடி விக்னேஸ்வரா ஆலய தர்மகர்த்தாவும்

காரைதீவு அறிஞர்களையும், கல்விமான்களையும், சிந்தனையாளர்களையும் தன்னகத்தே கொண்டு மட்டு நகரில் இருந்து தெற்கே 27 மைல்கள் தொலைவில் தனக்கென்று ஒரு கலாசார விழுமியங்களையும் கொண்டு விளங்கும் கிராமம் ஆகும்.

இக்கிராமத்தில் 1892ம் ஆண்டு 3ம் மாதம் 27ம் திகதி கண்ணம்மைக்கும் சாமித்தம்பிக்கும் பிறந்தவர் தான் மயில்வாகனனார். இவர் இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து சுவாமி சிவாநந்தரிடம் தீட்சை பெற்று விபுலாநந்தர் என்னும் சிறப்புப் பெயர் பெற்று விளங்கினார். இவர் பாடசாலை ஆசிரியராகவும், பல்கலைக்கழக பேராசிரியராகவும் மொழி பெயர்ப்பு ஆசிரியராகவும் தொண்டாற்றி தமிழ் அன்னைக்கும் சமூகத்திற்கும் ஆத்மீகத்திற்கும் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த தியாகி.

இவருக்கு சிலையும், நினைவாலயமும், மலரும் எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இக்கிராம மக்களால் 1965ம் ஆண்டு காரைதீவு பகிரங்க நூல் நிலைய முன்றலில் திருவுருவச் சிலை ஒன்று வைக்கப்பட்டது.

இச்சிலை தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் திறக்கப்பட்டது; பின்னர் ஏற்பட்ட கலவரத்தில் விஷமிகளால் சிதைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அடிகளாரின் பிறந்த மனைக்கு அருகாமையில் நினைவாலயம் ஒன்றை அமைத்து அதற்கு விபுலாநந்தர் ஞாபகார்த்த மணி மண்டபம் எனப் பெயரிடப் பட்டது. அம் மண்டப முன்றலில் 1999-6-26ம் திகதி மீண்டும் சிலை அமைக்கப்பட்டு அது சுவாமி ஆத்மகனானந்த ஜீ அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மலரும் வெளியிடப்பட்டது.

இருந்தும் அடிகளார் பிறந்த மண்ணின் பகிரங்க பாதையில் செல்பவர்கள் அன்னாரை நினைவு கூர வேண்டும். என்ற நன் நோக்குக் கொண்ட புஸ்பா பொருளாதார கல்வி அபிவிருத்திச் சேவை மன்றத்தின் இயக்குனராக இருக்கின்ற முன்னாள் தவிசாளர் திருவாளர் செல்லையா இராசையா அவர்களின் வழிகாட்டலின் பெயரில் காரைதீவுப் பகிரங்க பாதையில் அமைந்த விபுலாநந்த சதுக்கத்தில் அடிகளாரின் சிலை ஒன்று 2014-12-21ம் திகதி நிறுவப்பட்டு 2016-04-21ம் திகதி சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் கௌரவ D.M சுவாமிநாதன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இத் திறப்பு விழாவிற்கு இந்து சமய அபிவிருத்திச் சங்கமும் காரைதீவில் உள்ள பொது ஸ்தாபனங்களும் அனுசரணை நல்கினர்.

இச் சிலை விபுலாநந்த சதுக்கத்தில் அமைவதற்குப் புஸ்பா பொருளாதார கல்வி அபிவிருத்தி அமைப்பின் இயக்குனர் செல்லையா இராசையா எடுத்த முயற்சி இக்கிராம மக்களால் என்றென்றும் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

"கூப்பிய கைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது"

இ. தங்கராசா
ஓய்வு பெற்ற அதிபரும், பாலையடி விக்னேஸ்வரா ஆலய தர்மகர்த்தாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலமண்ணே வீழ்த்திடுவாய்



01. நல்லவர்கள் பலர் நாயகமாய் வாழ்ந்திட்ட
நம்மூர்தான் விபுலமுனி பிறந்திட்ட காரையூர்
வல்லவர்கள் வடிவமைத்த வாய்க்காலும் வடிகாலும்
வளமாக்க ஊருக்கு உரமூட்டி நிறைவாக்க
செல்வமென அமைத்துவிட்ட சீரான பாதைகளும்
செப்பிவிடும் நம்மவரின் செவ்வாய்ச் செந்தமிழும்
மெல்ல மெல்ல சீர் குலைத்து மேதினியைச் சீராக்கும்
மெச்சலுக்காய் வாழ்வோரை விபுலமண்ணே வீழ்த்திடுவாய்

02. ஆதிகாலமதில் ஊர்தனில் ஓர் பிரதிநிதி வருவதற்கு
ஆனைக்கிழாக்கர் அமைத்த திட்டமதை அழித்துவிட்டு
பாதிதனில் மக்களைப் பரிதவிக்க வைத்துவிட்ட
பாவியவன் பரம்பரையைப் பள்ளத்தில் வீழ்த்திய நீ
சாதி பல கூறி சம நிலை குழப்பியோரைச் சாடியநீ
சாதாரணமாயுனை நினைப்போரை சும்மா விடலாமா
வாதிட்டு வளமாக்க வாய்ப்பிருக்கும் போதினிலே
வாயடைக்கும் வாசிகளை விபுலமண்ணே வீழ்த்திடுவாய்

03. கேவை மகேசனின் சுந்தரத் சுதந்திரன் நாளேடும்
கோமகனாம் அந்தனில்வின் தீப்பொறித் தினஇதழும்
சாவையடைந்த எம்முன்னோரின் சாட்சியமும் இன்றிருப்பின்
சாகாது இன்றிருக்கும் என்நண்பர் சாதனையும்
நோவைச் சுமந்து நொடிந்து சுகம் பல இழந்த
நோற்றலுள்ள எம்மை நோக்கவைக்க வேண்டுமென்றே
சேவையாளன் போர்வையிலே பாசாங்கு வாழ்வு செய்யும்
சேவகனைச் சேர்ந்தோரை விபுலமண்ணே வீழ்த்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. வரைவுதனை மண்நிரப்பி வயலெல்லாம் கடைகட்ட
வாணிபம் செய்வோர்க்கு வாரியே வழங்கிட்டு
இரவையிலே வாணிபத்தார் இதமான கையூட்டும்
இளமையிலே பணம் சேர்க்கும் இலட்சிய நிலைதனையும்
குரவையிட்ட காரைமண் கூசாமல் விற்றுவிடும்
குள்ளர்களை எம்மக்கள் கூர்ந்தே கவனிக்க
அரவைவெட்டி மக்களது துவேஷத்தைப் புதைத்து விடும்
துர்மாந்தர் வீரியத்தை விபுலமண்ணே வீழ்த்திடுவாய்

05. சந்தியிலே அண்ணன் சாதகமாய்ச் சிலைவைக்க
சடுதியிலே தம்பியவன் சந்தோஷமாய் விழாவைத்தான்
முந்தியொரு சொருபமதை மூதாதையர் வைத்தபோது
முண்டியடித்து முழுப்பேரும் முன்றலிலே கூடிவிட
சிந்தியவியர்வை துடைத்த துடிப்பான தொண்டரெலாம்
சீராளன் சற்குணத்தான் சிறப்பான வழியதனில்
பந்திதனிற் குந்தியோர்க்கு பக்குவமாய் உணவளித்த
பகட்டற்றோர் பகைவர்தனை விபுலமண்ணே வீழ்த்திடுவாய்

06. விதியாலே வெளியூரில் விரும்பாது வாழ்வு செய்தும்
விண்ணுலகம் சென்றுவிட்ட விற்பன்னர் நம்மவரை
பதிபோன்றே மனமிருத்தி பாடலிலே துதிசெய்யும்
பற்றுள்ள எங்களையே பாராமுகம் செய்து
சதிபோன்றே ஊருக்குச் சச்சரவார் எனக்காட்டி
சட்டம் செய்யும் இளையோரே சளைக்காத முதியோரை
திதியறிந்து ஒருகாலம் திட்டமுடன் நினையாதார்
தினவாழ்வுச் சுகமதனை விபுலமண்ணே வீழ்த்திடுவாய்

07. இலக்கியத்தில் ஆசானாய் இலக்கணத்தில் பெரியவராய்
இருந்திட்ட பற் பலரின் இறைஞானத் திறனாலே
பலகாலம் நம்மூரில் பலராலும் புகழ்பெற்றோர்
பாரைவிட்டுப் போனபின்பு பழந்தமிழைக் கவியாலே
நலமாகும் கதையாலே நாற்திக்கும் பரப்பிவிடும்
நன்றான பாண்டிருப்பு நல்லியற்கை மண்டூர்
நலமாகும் சித்தாண்டி தந்திட்ட கவிஞர்கட்குத்
தலை குனியார் இறுமாப்பை விபுலமண்ணே வீழ்த்திடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீழ்ந்தகதை பறைசாற்று

08. சோரம் போய்ச் சுடுகுழலைச் சூழலிலே விற்றவனும்
சோர்ந்திருந்த அயலவரார் சோகம் போக்கியவனும்
வீரம்கொள் காரைதீவான் வீரியம் குறைந்தவனும்
வீழ்ந்தவரை புதைத்துவிடும் இடுகாடு விற்றவனும்
ஆரம் வாங்கி அவைதனிலே அதிதியாய் அமர்ந்துவிட்டு
ஆயிரம் நோட்டுக்காய் ஆலயத்தையமுதாய் நினைத்தவனும்
பேரம் பேசி ஊரெல்லை விட்டுவிட்டு பெரியோராயிருந்தோரும்
பேறுள்ள உன்னாலே வீழ்ந்த கதை பறைசாற்று

## விபுலமண்ணே வாழ்ந்திடுவாய்

09. ஊரினிலே காழ்ப்புணர்வு ஊன்றிவிட்ட கடுந்துரோகம்
ஊழியங்கள் செய்தோரை ஓரங்கட்டித் தான்முந்தி
நாரினிலே மலர்கோர்த்து நாடிச்சென்று அதைச்சூட்டி
நாலுபேருள் உத்தியோகம் நாமும் பெறவேண்டி
காரினிலே வந்தவரின் கைபிடித்து ஆதரித்து
கனவுகண்ட ஏழைகளில் கனபேரின் பெயர்வெட்டி
பாரினிலே உயர்ந்திடவே பகற்கனவு கண்டோரின்
பாழுடலை ஏற்காத விபுலமண்ணே வாழ்ந்திடுவாய்

**வி. கமலநாதன்**
ஓய்வு நிலை அதிபர்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வித்தக முனிவர் விபுலாநந்தர்

சிலப்பதிகாரத்துடன் தொடர்புபட்டதாகவே யாழ்நூலைக் காணலாம். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டிருக்கும் யாழ்களின் பாவனை இல்லாததைக் கண்ட விபுலாநந்தர், அவற்றை மீண்டும் உருவாக்கும் ஆய்வின் கண்டுபிடிப்பே யாழ் நூலாகும்.

இளங்கோ அடிகளைத் தொட்டுத் தொடர்ந்தவர் விபுலாநந்த அடிகளார். எனவே இளங்கோ அடிகளின் அவதாரமே விபுலாநந்தர் என்னுங் கூற்றில் உண்மை இருப்பது போன்ற உணர்வினைப் பெறுகின்றோம்.

அவதார புருடரான அடிகளார் அவதரித்த மண்ணில், நாம் பிறக்கவும் வாழவும் புண்ணியஞ் செய்துள்ளோம். இதற்குக் கைமாறாகச் சிலை வடிப்பது மட்டுமல்ல, அவரது நாமம் நிலை பிடித்து நிலைத்திருக்க உழைப்பதை இந்த மலர் வெளியீட்டின் மூலம் மீண்டும் ஒரு முறை உறுதி செய்வோம்.

**வித்தகர் வெண்பா**

காரேறும் மூதூராம் காரதீ வீன்றமகன்
பேரேறும் யாழ்நூல் பெரும்ஞானி - பாரேறும்
வித்தகனாம் முத்தமிழின் விபுலமுனிக் கானசிலை
பத்தியெழத் தாபித்தார் பதம்.

**சிலையின் அலைகள்**

**ஆசிரியப்பா**

கொட்டும் புகழின் கொலுவாய்த் திகழும்
மட்டக் களப்பின் மதிப்பின் தெற்கில்
பண்டைச் சிறப்பின் பல்வளச் செழிப்பைக்
கொண்டபே ரூராய்க் கொழிநலங் காணும்
பத்தினித் தெய்வம் பாதுகாப் பளிக்கும்
சித்தியின் பூமி செலவுறு வீரக்
காரெழில் தீவாம் கலைகளின் கோட்டம்
பேரெழும் முந்தைப் பெருமையி லாளும்
அலைகடல் தாளத் தசைவிலே செந்நெல்
குலைகளின் பழனக் கூத்தொடு பொலியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைதீ வுலகின் கணிப்பிலே வுயுரப்
பேரெழு மடிகளைப் பேறெனப் பெற்றதே!
ஆன்றார் புகலிடம் அடிகளார் தோன்றிய
சான்றுகள் கூட்டியே சரித்திர மாகிடத்
தொண்டினுக் கேற்றதே துறவெனத் தெளிவினில்
கண்டுமே அடிகளால் காளியின் உபாசகர்
காத்திடும் பரம கம்சரின் வழியிலே
ஏத்திடும் சிவத்தமிழ் எழுத்தரத் தொண்டிலே
பன்மொழிப் புலவராய்ப் பன்முகத் திறனொடு
நின்றொளி பரப்பினார் நிகரிலாப் பெருமையே!
கல்லடிப் பாலக் காற்றிடை தவழும்
மெல்லிசை பாடும் மீனிசை யாழின்
துள்ளிசை யாகத் துறவியா ருள்ளம்
அள்ளிடத் தூர்ந்த அவ்விசை காணும்
ஆய்விலே நீந்தி அறிவிய லலைகளின்
தோய்விலே பண்டைத் தொல்லிசை கண்ட
விதிகளின் நூலாய் விளங்கிடும் யாழ்நூல்
அதிசயத் தாரமாம் அடிகளார் பொலிவுற
அன்னை தமிழுக் கணிவித் தெழுச்சியின்
முன்னைப் பெருமையில் மூழ்கிக் களித்தாரே!
ஊரும் நாடும் உலகும் வியக்கும்
பேரா சிரியன் பெருமைப் புலவன்
அறிஞன் கலைஞன் ஆய்வின் ஞானி
செறிவின் கல்விச் சேவை கிழக்கில்
ஊக்கம் பிறந்தது உணர்வு தெளிய
ஆக்கப் பணிகளோ ஆயிர மாகின.
ஈழம் முதல் இமயம் வரைக்கும்
சூழுந் திறனால் சுடரொளி ஆகியே
காலக் கொடையாய்க் கட்டுரை கவிதைகள்
மேலாய்ச் சாதனை மேவிய யாழ்நூல்
மாறிலா வுணர்வளை மதங்கசூ ளாமணி
பேறென முத்தமிழ் பெருமைக ளானதே!
ஊரை நினைத்தால் உவக்கு மடிகள்
பேரே உதிக்கும் பிரியா தணையும்
இருவர் பொழுதின் ஈர்க்குஞ் சித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளும் சுவாமி ஆனைக் குட்டி
சத்திய வடிவில் சமயத் தொண்டில்
பக்தியின் சேவைப் பணிகளில் தூய்மை
நாடிடும் சுவாமி நடராஜா னந்தா
கூடியே அடிகளின் குதூகல மாட்சியின்
தொடரிலே படிகிறார் தொழுதிட மூவரும்
கடவுளின் வடிவெனுங் காட்சியி லாகினர்!
அடிகளின் சிலையினை அறுபத்து ஒன்பதில்
வடித்திடும் பணிகளில் வரலா றெழுதிடச்
சலியா துழைத்திட்ட சற்குணச் சான்றோனும்
நிலையாய் மக்களின் நினைவிலே வாழ்கிறார்.
குடிகளைக் கொன்றிடும் கொடுமையின் நாட்டினில்
இடும்பரின் ஆட்சியில் எண்பத்து மூன்றிலே
எழுச்சியின் சிலையினை இனவெறிக் கொலைஞர்கள்
அழச்சியில் இடித்து அழித்தது நிகழ்ந்த
அழிவினில் பெரிய அழிவிது மக்கள்
விழிசொரி நீரில் வீழ்ந்தனர் விதியே!
ஆண்டுகள் ஓடின அடிகளார் சிலையினை
மீண்டுமே நிறுவிட மேலெழு மார்வமாய்ப்
பிரதேச சபையினர் பெருவிருப் பாகிடத்
தரமேவு பணிகளின் தலைமையை ஏற்றுமே
செயலின வுணர்வின் செல்லையா இராசையா
நயவழி கூட்டி நற்பணி யாற்றச்
சிலைதரும் அலையின் செழுமையை மலராய்க்
கலையெழ விரித்தார் களிப்பினி லாழ்வோம்.

**வாழ்த்து**


**விருத்தம்**

காரெழிற் கோல மாகிக்
கண்ணகிக் காவ லாகிச்
சீரெழும் வளங்க ளாலே
சிறந்திடுங் காரை தீவே
பாரெழும் புகழின் சேயைப்
பயந்ததை யெண்ணி மக்கள்
கூரெழு முணர்வில் போற்றக்
கூடினார் நீடு வாழ்க!

**தத்துவக் கவிஞர், கலாபூஷணம்** பொன் தவநாயகம்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருமை மிக்க சுவாமி விபுலாநந்தர்

**எஸ். விஜயரத்தினம்** முன்னாள் செயலாளர்
அறங்காவல் ஒன்றியம், ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயம்,
காரைதீவு.

பிறந்த காரைதீவு மண்ணிற்கும் இலங்கைக்கும் ஏன் இந்தியா போன்ற அயல் நாடுகளுக்கும் பெருமை தேடித்தந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் திருவுருவச் சிலை கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மறைக்கப்பட்டிருந்த கதை யாவரும் அறிவர். நடந்து முடிந்த பயங்கரவாத நடவடிக்கையின் போது காரைதீவு பொது நூலக வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த சுவாமியின் திருவுருவச் சிலை சிதைக்கப்பட்டு நீருள் அமிழ்த்தப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட சூழ் நிலையில் முன்னாள் காரைதீவு பிரதேச சபைத் தவிசாளரும், புஸ்பா நிறுவன முகாமையாளருமான திரு. செல்லையா இராசையா அவர்களின் அயராத முயற்சியின் காரணமாக மறைக்கப்பட்ட சிலை பெருவடிவில் தோற்றம் பெற்றது. காரைதீவு இந்து சமய விருத்திச் சங்கத்தின் துணையோடு மீண்டும் சுவாமியின் சிலையை வடிவமைத்து காரைதீவு பிரதான வீதி சதுக்கத்தில் அமைக்க இராசையா அவர்கள் முன்னின்று உழைத்தார். அன்னாரின் உழைப்பின் பேராக காரைதீவுச் சதுக்கத்திலே கம்பீரமாக சுவாமியின் சிலை நிமிர்ந்து நிற்பதை காணலாம்.

சுவாமிகளின், ஆன்மீகத்தையும், அறிவினையும் உலகெங்கும் பரப்பிய நூல்களும், யாழ் ஒலிகளை ஆராய்ந்து எழுதிய யாழ் நூலும் காலத்தால் அழியாத கலைப் பொக்கிசங்களாக போற்றப்படுகின்றன. பார் போற்றும் ஆசிரியனாக, பத்திரிகை ஆசிரியனாக, ஆராய்ச்சியாளனாக, ஏன் கவிஞனாக கூட விளங்கியவர் வித்தகன் விபுலாநந்தர். இளமைக்காலத்தில் நாட்டைக்காக்க புறப்பட்ட போர் வீரனாக செயற்பட்ட சுவாமி அவர்கள் பின்னர் தமிழையும் கல்வியையும் மானுட இன தன்மையையும் காக்க தன் வாழ்க்கையையே அர்ப்பணித்தார். இல்லறத்தில் இருந்து இவ் அரிய சேவைகளைச் செய்ய முடியாதென்பதை உணர்ந்து கொண்டு துறவறத்தை நாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து துறவியாகி மயில்வாகனன் என்ற பெயரை நீக்கி விபுலாநந்தர் என்ற நாமம் வாங்கி அரும் பணிகளை புரிந்துள்ளார். தமிழ்த்துறைத் தலைவராக, தமிழ் அகராதியாக்கக் குழுவின் தலைவராக இலங்கை இராமகிருஷ்ண சங்கம் நிறுவியவராக பல பதவிகளை அறிவின் ஆன்மீக ஒளியை நம்மில் யாருமே மறுக்க முடியாது. குறிப்பாக இளம் சந்ததிகள் சுவாமியையும் அவர் ஆற்றிய பணிகளையும் அறியவேண்டுமல்லவா அதனால் தான் காரைதீவு சதுக்கத்தில் அவரது திருவுருவச் சிலை நிறுவவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நல்லதை யார் செய்தாலும் அதனைப் பாராட்ட வேண்டும்.

அனாதைகளை ஆதரித்து அவர்களுக்கு கல்வி புகட்டி அவர்களை உயர்த்திய சுவாமி அவர்களை வரும் வரும் சந்ததிகள் நினைவு கூர வேண்டும். "ஈசன் உவக்கும் இன் மலர்கள்" மூன்றை எடுத்தோதிய எம் தலைவரை போற்ற வேண்டியது நம் கடமையல்லவா? ஞாபக மறதியுடைய எம் போன்றோர்க்கு எதிர் மறையாக ஞாபக ஆற்றல் மிக்க அதிசயமாக சுவாமி அவர்கள் விளங்கினார் என்றால் அவர் பெருமை சொல்லவும் கூடுமோ. இப்படி பல்வகை ஆளுமை மிக்க சுவாமி அவர்களின் சிலைகள் இந்தச் சதுக்கத்திலே மட்டுமல்ல ஊரோடு இலங்கை நாட்டின் மூலை முடுக்கெல்லாம் நிறுவப்பட வேண்டும்.

**எஸ். விஜயரத்தினம்**
முன்னாள் செயலாளர், அறங்காவல் ஒன்றியம்,
ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயம்.
காரைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைப்படுத்திய வரலாறு

முத்தமிழ் வித்தகர் யாழ் நூல் தந்த பெருமகன் சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கு அவர் பிறந்த காரைதீவு மண்ணில் பெரும் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளமை விதந்து பாராட்டத் தக்கது.

ஆம் அவர் பிறந்த மண்ணான காரைதீவின் முக்கிய பிரதான முச்சந்தியில் அன்னாரது திரு உருவச்சிலை நிறுவப்பட்டுள்ளமை வரலாற்றுப் பெருமை மிக்கதாகும்.

இதற்காக உழைத்த காரைதீவு புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பினரும், குறிப்பாக அதன் பணிப்பாளரும், சமூக சேவையாளருமான திரு.செல்லையா இராசையா அவர்களும் பெரும் பாராட்டுக்குரியவர்கள்.

பலத்த சவாலுடன் கூடிய சிலை நிறுவுவதற்கான அனுமதியைப் பெறுவதில் நண்பர் செல்லையா எடுத்துக்கொண்ட அயராப் பெருமுயற்சியை காரைதீவு மண் எளிதில் மறந்து விட முடியாது.

நண்பர் இராசையாவை ஒரு சமூக சேவையாளனாக மட்டுமன்றி நீதி, நேர்மை மிக்க அரசியல்வாதியாகவும் காணும் நான் அன்று அண்ணன் அமிர்தலிங்கம் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கிராமிய யாத்திரையின் போதே முதன் முதலில் சந்தித்தேன்.

அப்பொழுதிருந்து தொடர்ந்த எமது நட்பு அவர் அரசியல் களத்தில் குதித்த போது புது மெருகுடன் வலுப்பெற்றது. அவரிடம் இன மத பேதங்களுக்கப்பால் பெரும் சேவை மனப்பான்மையைக் கண்டேன்.

மூதுரைச் சேர்ந்த முஸ்லிம் பெண் பிள்ளை றிஷானாவுக்கு மரண தன்டணை அங்கு நிறைவேற்றப்பட்ட போது ஏற்பட்ட பெரும் அனுதாப அலை அவரையும் ஆட்டிக்கொண்டது.

நேரில் சென்று நண்பர்களுடன் அக்குடும்பத்திற்கு ஆறுதல் சொன்னது மட்டுமன்றி தன் சொந்தப்பணத்தில் ஐம்பதாயிரம் ரூபாவையும் அக்குடும்பத்திற்கு வழங்கினார்.

காரைதீவு பிரதேச சபைத் தவிசாளராக செல்லையா இராசையா இருந்த போது 90 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு ஒன்று சபைக்கு கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நிதி முழுவதையும் முஸ்லீம் பிரதேசமான மாவடிப்பள்ளியில் பொது நூலகமொன்றை நிர்மாணிப்பதற்காக வழங்கினார்.

இவையன்றி தமிழ் முஸ்லீம் நல்லுறவுக்காக அவர் ஆற்றிய பல சேவைகளைக் குறிப்பிடலாம். இத்தகைய பெருந்தகையின் துணிச்சலான தனி முயற்சியின் வெற்றியால் முத்தமிழ் வித்தகருக்கு பெருமையளிக்கும் வகையில் முக்கிய சந்தியில் சிலை நிறுவப்பட்டமை பெரும் பேறாகும்.

கலாபூஸணம் **ஏ.எல்.எம்.சலீம் (J.P.)**
வைத்தியசாலை வீதி,
நிந்தவூர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "கீழைத்தேய சிந்தனை மரபில் சமகால சிந்தனையாளர் சுவாமி விபுலாநந்தர்"

**கலாநிதி. க. கணேசராஜா**

ஆரம்பத்தில் இருந்த மனிதனின் முகம் இறுக்கமில்லாது சந்தோச உணர்வின் வெளிப்பாடாக இருந்தது. அவன் ஆரம்பத்தில் இலை, காய் கனிகளை மட்டும் உட்கொண்டதால் **சாத்வீக** குணத்தையும் நல்ல சுபாவத்தையும் அதிகம் வெளிப்படுத்தினான். பின்னர் இலை, தளை, காய் கனிகளுடன் மாமிசமும் சேர்த்து சாப்பிடத் தொடங்கிய போதுதான் கடவுள் பாதி மிருகம் பாதி என்ற மனிதத்தன்மையை உடைய **தாமச** குணங்களை பெற்றான். இன்றைய சூழலில் தாமச குணங்களை வெளிப்படுத்துபவரே பலர். சிலர் இறைத் தன்மையை முற்றும் மறந்து மிருகத் தன்மையை மட்டும் கொண்டு காணப்படுவர். இத்தகையோர் **ராட்சச** குணங்களை மட்டும் கொண்டு காணப்படுவர் என இந்திய சிந்தனையாளர்கள் கூறுகின்றனர். இந்த மனித வளர்ச்சியின் விளைவை தொகுத்து சிந்தனையாளர்கள் ஆதிகாலம், ( Early Period), மத்திய காலம் (Middle Period), மறுமலர்ச்சி காலம், (Renaissance Period), நவீன காலம், (Modern Period), சமகாலம், (Contemporary Period), கடந்த சமகாலம் (Post Contemporary Period), என கூறுகின்றார்கள். இந்த கால பரிணாம வளர்ச்சியில் மொழிஆற்றல், இலக்கியம், கலை, அழகுணர்வு, புதிது புனைதல் போன்ற துறைகளில் பல சிந்தனையாளர்கள் சிறந்து விளங்கினர்.

இந்த நோக்கில் சம கால சிந்தனையாளராக சுவாமி விபுலாநந்த அடிகளார் காணப்படுகின்றார். இவர் ஆரம்பத்தில் மட்டக்களப்பு என்று அழைக்கப்பட்டதும் பின்னர் மாவட்ட ரீதியாக பிரிந்ததால் தற்போது அம்பாரை மாவட்டத்திலுள்ளதுமான காரைதீவு என்ற பழம்பெரும் கிராமத்திலே பிறந்தார். (1892 – 1947) **"வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ"** என்ற பாடலை கேட்டதும் எமது மனம் சுவாமி விபுலாநந்தரையே ஞாபகப்படுத்துகிறது. சுவாமியை நாற்பத்தி எட்டு தமிழ் கட்டுரைகளையும், ஏழு ஆங்கிலக்கட்டுரைகளையும், ஐந்து மொழிபெயர்ப்பு நூல்களையும், நான்கு செய்யுள் நூல்களையும் எழுதியுள்ளார். இவற்றுள் **யாழ் நூல், நடராச வடிவம், உமாமகேசுவரம், கலைச்சொல் அகராதியின்** ஒரு பகுதி போன்றன மிகவும் சிறப்பானவை. இவரை பற்றி அறிய விரும்புவோர் இன்று ஏராளம். சாதாரண மாணவர்கள் முதல் புலமையாளர்கள் வரை இவரைப்பற்றியும் இவரது எழுத்துக்கள் பற்றியும் அறிய முயல்வர். அப்பிள் பழத்தினால் அப்பிள் மரம் பிரபல்யமாவது போன்று விபுலாநந்தரின் எண்ணம், செயல், எழுத்து ஆகியவற்றால் தமிழ் பேசும் நல் உலகமே பெருமையடைகிறது. அவரது பிறந்த இல்லத்தில் அவரது நினைவாக கட்டப்பட்டிருக்கின்ற விபுலானநந்த ஞாபகார்த்த மண்டபத்தை பார்த்ததும் வியப்படைவர். அவரது வீடு பழைய முறையில் அமைந்த வீடாக காணப்படுவதால் அது ஒரு தொல்லியல் ஆவணமாகப் பாதுகாக்கப்படுகிறது. அவரது ஞாபகமாக அமைந்துள்ள மண்டபம் பல கலாசார நிகழ்ச்சிகளை நடத்தக் கூடிய அழகான கலை அரங்கு. அதில் இன்றும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள் நிகழ்வதுண்டு. அது மட்டுமல்ல அவர் பெயர் சார்ந்த பாடசாலைகள், விளையாட்டு கழகங்கள், தனியார் கல்வியகங்கள், சமூக அமைப்புகள் இங்கு மட்டுமல்ல எல்லா பிரதேசங்களிலும் அமைந்துள்ளன.

விபுலாநந்தர் தமிழியல் சிந்தனையாளராக சம காலத்தில் விளங்கியவர் என்பதற்கு அவரது பல்வேறு பணிகளும், படைப்புக்களும் அடிப்படையாக இருந்தன. ஆசிரியராக அதிபராக, விரிவுரையாளராக, பேராசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, கவிஞராக, மொழிபெயர்ப்பாளராக, எழுத்தாளராக, ஆய்வாளராக, கண்டுபிடிப்பாளராக, ஆன்மீக வழிகாட்டியாக, பாடசாலை ஸ்தாபகராக, கல்விசார் குழுக்களின் உறுப்பினராக, சிறந்த சொற்பொழிவாளராக, கலைச் சொல் ஆக்குனராக, சங்கங்களின் அல்லது பேரவைகளின் தலைவராக பன்முக பரிமாணங்களை தமது பணியோடு வெளிப்படுத்தி நின்றவர். அதுமட்டுமல்ல மொழி, பண்பாடு சமயம் சார்ந்த விடயங்களில் மிகுந்த பற்று கொண்ட இவர் குடும்ப உறவுசார்ந்த விடயத்திலும் மிகவும் அக்கறையாக இருந்தார். சுவாமி விபுலாநந்தரின் பணிகளை மதிப்பீடு செய்யும்போது கல்வி, சமூகம், கலை, இலக்கியம், அறிவியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கினார் என்பது புலப்படும். இதில் கல்வி பற்றிய கருத்துக்கள் எனக்கு மிகவும் பிடித்ததாகும். இவர் ஆன்மீக நெறியுடன் இணைந்த கல்வி, மூடப்பழக்கவழக்கங்கள் இல்லாது ஒழித்தல், கல்வியில் அனைவருக்கும் சம வாய்ப்பு, தீண்டாமை ஒழிப்பு, தாய் மொழிக் கல்வி, தேச நலன் பேணக்கூடிய கல்வி, மத வேறுபாடுகளை கருத்தில் கொள்ளாது மக்கள் ஐக்கியமாதல் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்.

**"புதிய தொகுப்பு நூலில் சுவாமி பற்றி"**

சுவாமி விபுலாநந்த அடிகளாருடைய பணி பற்றி பார்க்கும் போது இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் அவர் ஆற்றிய பங்களிப்பு அதிகமாகும். குறிப்பாக கரந்தை தமிழ்சங்கத்திலும், மதுரை தமிழ் சங்கத்திலும் பல கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். அவர் எழுதிய கட்டுரைகள் இன்னும் ஆராய்ச்சிக்கு உட்படக் கூடியவை. இவற்றுள் சிலவற்றை தொகுத்து நூலாக வெளியிட்டிருக்கிறார் முனைவர் ஜெ.அரங்கராஜ் அவர்கள். அவர் தனது தொகுப்பு நூல் ஒன்றை **"சுவாமி விபுலாநந்தர் பேச்சும் எழுத்தும்"** என்ற தலைப்பில் இந்தியாவில் 2009 ல் வெளியிட்டிருக்கிறார். அந்நூலில் சுவாமி எழுதிய பல கட்டுரைகளை அறியக் கூடியதாக இருந்தது. "நிலவும் பொழிலும்", "நாடும் நகரும்", "மலையும் கடலும்", "கவியும் சால்பும், சமயமும் அழகும், வண்ணமும் வடிவும், விஞ்ஞான தீபம், சூரிய சந்திரோற்பத்தி", "வங்கியம்", "பொருநூற்சிறப்பு-1", "பொருநூற்சிறப்பு-2," "உலக புராணம்", "எண்ணலளவை", "லகரவெழுத்து", "மதுரை இயற்றமிழ் மாநாட்டு தலைவர் பேருரை", "திருக்குறள் முதல் அதிகாரமும் திருச்சிவபுரத்து திருப்பதிகமும்", "இமயம் சேர்ந்த காக்கை", "உள்ளம் கவர் கள்வன்", "உணவு, கரந்தை தமிழ்சங்கத்தின் 22 ஆவது ஆண்டு விழாவில் தலைமை தாங்கிய உயர் திரு.சுவாமி விபுலானந்தர் அவர்கள் பேசிய முன்னுரை", "கங்கையில் எழுதியிட்ட ஓலை", "சங்கீத பாரிஜாதம்", "சங்கீத மகரந்தம்", "இசைக்கிரமம், பண்ணும் திறனும்", "எண்ணும் இசையும்", "எண்ணும் எழுத்தும்", "சுருதி வீணை", "குழலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழும்'', ''நீரரமகளிர் இன்னிசை பாடல்'', ''இயலிசை நாடகம், பாலைத்திரிபு'' போன்ற கட்டுரைகள் அவரது நூலில் காணப்படுகின்றவையாகும்.

**''மணிமொழிகள் நூலில் சுவாமி விபுலானந்தர் பற்றி''**

மேலும் சுவாமி விபுலாநந்த அடிகளாரது தமிழ் ஆக்கங்கள் யாவற்றையும் படித்து அவற்றிலிருந்த சிறந்த கருத்துக்களை மணிமொழிகளாக தொகுத்து வெளியிட்டுள்ளார் கல்வி அமைச்சின் தமிழ்மொழிப்பிரிவின் முன்னாள் பணிப்பாளராகிய என். நடராசா அவர்கள். அவற்றுள் சிலவற்றை இங்கு நான் குறித்துக் காட்ட விரும்புகின்றேன். கடவுளிடத்து வழிப்பட்டு பக்தி செய்தால் தீய குணங்களைப் போக்கும். ஆடம்பரம் இன்றி தியானம் செய்ய விரும்புபவன் துயிலப் போகும் போதும் துயில் எழுந்தும் கிடந்த படியே தியானம் செய்வது எளியதும் மேலானதுமான முறையாகும். யான் உன்னைத் தொழவேண்டும், தூய்மையடைய வேண்டும் பலஉயிர்க்கும் பயன்பட வேண்டும் இன்புற்றிருக்க வேண்டும் என்று அவனைப் பிரார்த்திக்க வேண்டும். தன்னிடத்திலும் சரி ஆசிரியரிடத்திலும் சரி தமையனிடத்திலும் சரி எந்த உயிரிடத்திலாயினும் நீதியோடு திகழ்கின்ற இரக்கமே உண்மையன்பு. காரணம் தெரியாமலே பனையிலும் பற்றையிலும் ஏழையிலும் வழிப்போக்கனிடத்திலும் உள்ளம் ஓடித்தழுவி இரக்கத்தையோ இன்பத்தையோ அடையக் கூடுமானால் அதுதான் அன்பு வாழ்வு. பயனில்லாத செயலும், சிந்தனையும் விவேகமற்று நடப்பதும் ஆத்தும துரோகமாகும் காமத்திலும் வெகுளி கொடியது, வெகுளியிலும் மயக்கம் கொடியது விடய சுகங்களை காதலித்து நிற்கும் பற்றுள்ளமே காமம் எனப்படுவது. மற்றைய பொருள் மேற்செல்லும் உளப்போக்கினை பிறிதொருவர் இடைநின்று தடுக்குங்கால் அவற்றை அழித்தற்கு முயலும் முயற்சியே வெகுளியாவது. வெகுளியினால் அலைந்த உள்ளம் நன்மையைத் தீமை என்றும் தீமையை நன்மை என்றும் மாறுபட உணர்வதே மயக்கம் எனப்படுவது. இம்மூன்றும் எழுதற்கு பற்றுக் கோடாகிய விடய சுகங்களை வெறுத்தகற்றுதலால் ஆன்மசக்தி அதிகரிக்கின்றது. மௌனம் என்பது உரையாடாது இருக்கும் ஒன்று மாத்திரம் அன்று மனம், மெய், மொழி ஆகிய மூன்றும் சமநிலையில் நிற்பதே உண்மையான மௌனமாகும். இத்தகைய மௌனத்தினால் ஆன்ம சக்தி அதிகரிக்கின்றது. மானத சக்தியை விருத்தி செய்து காரிய சித்தியை பெறவிரும்பிய மனிதன் முதற்படியாக காமம் கோபம் ஆகிய இரண்டினையும் அடக்குதல் வேண்டும். பிறர் பொருளை காஞ்சிரம்பழமென கருதுதல் வேண்டும். பிறர் மனைவியை கனவிலும் நினைத்தல் கூடாது. கண்டும் கேட்டும் உண்டும் உய்த்தும் உற்றும் அறியும் பலவாறாகிய உலக இன்பமனைத்தும் ஒண்டொடி மாதரிடத்தே உள்ளன ஆயினும் அவர்பாற் பெறும் இன்பம் துன்பத்தோடு கூடிய சிற்றின்பமாகும். இறைவனிடத்து பெறும் இன்பமோ எல்லையுகந்த பேரின்பம். சமய சச்சரவுகளுக்கு காரணம் சமய உணர்ச்சி இன்மையும் அறியாமையுமே ஆகும் நீ செய்யும் எந்தக் காரியமும் உலகத்திற்கு பயன்படுமாறு இருக்கவேண்டும். செய்த நன்மைக்கு மூடர்களே நன்மதிப்பும் கைமாறும் நாடுவார்கள். பகுத்தறிவுள்ள உயிரின் இலட்சணங்கள் அன்பு, சத்தியம். அடக்கம். எந்தளவிற்கு மனம் கலங்காமல் இருக்கிறாயோ அந்தளவிற்கு சக்தி உண்டாகும் ஆண்மை அற்றவனே துயரப்படுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினங்கொள்வான். சினமும் துயரமும் கொள்பவன் கஸ்ரத்தை தாங்கி நிற்க மாட்டான், தோல்வியடைவான்.

**"தமிழ்ப்பொழில்' நூலில் சுவாமி விபுலாநந்தர் பற்றி**

அண்மையில் சுவாமிகளின் ஆக்கங்கள் பற்றித் தேடும் அவாவில் இந்தியாவின் கரந்தையில் உள்ள தமிழ்ச் சங்கத்திற்குச் சென்றேன். அங்கு தமிழ் சங்கத்தினரால் 1925ம் ஆண்டு முதல் வெளியிடப்படுகின்ற "தமிழ்ப் பொழில்" என்ற கட்டுரைத்தொகுதி நூலில் 1947ம் ஆண்டு வெளியான தொகுதியில் விபுலாநந்தர் பற்றிய குறிப்புக்கள் வாசிக்கக் கிடைத்தது அக்குறிப்பினை அப்படியே பகிர்ந்து கொள்கின்றேன்.

அண்மையில் இசைத்தமிழ் நூலாகிய யாழ்நூலை நிறைவு செய்து அரங்கேற்றி அருளிய யாழ் நூல் ஆசிரியரும், இலங்கை பல்கலைக்கழக தமிழ் பேராசிரியரும் ஆகிய அருட்திரு விபுலாநந்த அடிகளாரவர்கள் கொழும்பு நகரத்திலே 1947 ஜுலை 19 சனிக்கிழமை இரவு 1 ¼ மணிக்கு இறைவன் திருவருளிற் கலந்து மறைந்தார்கள் என்னும் துயரச் செய்தி தமிழகத்தாருள்ளத்திற் பேரிடி வீழ்ந்ததென பெரும் கலக்கத்தை தருகின்றது. சென்ற வைகாசித் திங்களில் ஆளுடைய பிள்ளையார் திருநாளில் (5,6-06-1947) திருக்கொள்ளம் பூதுார்திருக்கோவிலில் நிகழ்ந்த யாழ்நூல் அரங்கேற்று விழாவில் பெருமகிழ்ச்சியில் நிலைத்தயாம் தமிழருக்கு எய்ப்பில் வைப்பாகிய அடிகளாரது பெரும் புலமையினைக் கொண்டு தமிழகத்தில் இன்னும் பல புது நூல்களைப் பெற்று மகிழ்வார் எனவும் பண்டைத்தமிழர் இசை நலம், உலகெலாம் பரவ அடிகள் யாழ் நூலை ஆங்கில மொழியில் இயற்றியளிப்பார்கள் எனவும் எதிர்பார்த்திருந்தோமே. எமது எண்ணங்கள் சிதறுண்டு போகும் வண்ணம் இவ்வளவு விரைவில் அடிகளார் எம்மைப்பிரியும் தீவினையுடைய ராயினேம் என்றதன்றி வேறு என்ன சொல்ல இருக்கிறது. உடைந்த நெஞ்சினோமாகிய யாம், எமது துயரத்தினை இணைத்தெடுத்து வெளியிடவும் இயலாதிருக்கின்றோம்."

"நம் சங்கத்தைப் போற்றி வளர்த்த செந்தமிழ்ப் புலவர் தமிழ்வேள் அவர்கள் வட நாட்டின் அயோத்தி நகரின் அருகே இறையருளிற் கலந்து மறைந்த துன்ப நிகழ்வைக் கேட்டு உள்ளங்கலங்கிய விபுலாநந்த அடிகளார் அருட்புலமை நீர் பெய்து, நம் அனைவரையும் ஆறாத்துயரத்தில் ஆழ்த்தினார். இசைத் தமிழ் நூலை விரைவில் இயற்றி அளித்தல் வேண்டுமென அடிக்கடி தமிழ்வேளவர்கள் வேண்டியதற்கிணங்க நம் அடிகளாரும், தமிழ்வேள் அவா்கள் அன்பு நிலையமாகிய கரந்தை தமிழ்ச்சங்கத்தின் கதிரையில் அமர்ந்து யாழ்நூலின் முதற்பகுதியை எழுதினார்கள். போர்க்காலத்தில் கல்கத்தா நகரத்தில் தங்கிய அடிகளாரது உள்ளம், பண்டைத்தமிழரது அரங்கநிதியமாகிய இசைச் செல்வத்தை எப்படியாவது தமிழ் நாட்டார்க்கும், உலகத்தார்க்கும் வெளிப்படுத்திவிட வேண்டுமென்ற நினைவிலேயே தோய்ந்திருந்தது. அந்நாளில் அடிகளார் கருத்தினைக் குறிப்பினால் உணர்ந்து அதனை வாங்கித்தர முன்வந்த பெரியவர் திருக்கொள்ளம் பூதுார் திருப்பணிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வரும், நம் சங்கப் பேரன்பரும், புரவலரும் ஆகிய கோனூர் சமீன்தார் திரு.பெ.ராம்.சீத. சிதம்பரச் செட்டியாரவர்களாவர். இவர்களது தூண்டுதலினால் அடிகளார் கல்கத்தாவில் நின்று மீண்டும் தமிழ் நாட்டிற்கு வந்து புதுக்கோட்டை ராம நிலையம் என்னும் இவர் தம் இல்லத்தில் தங்கி யாழ் நூலின் பிற்பகுதியினையும் எழுதிமுடித்தார்கள். யாழ் நூல் எழுதி முடிந்த பின்னரும் அதனை அச்சிடத்தொடங்குவதற்குத் தடைகள் இருந்தன. ஊணுறக்கமின்றி இவ்வாராய்ச்சியினை நிகழ்த்தி தளர்ந்த நிலையில் உள்ள அடிகளார் இலங்கைப் பல்கலைக்கழக அலுவல்களையும் மேற்கொண்டு நிகழ்த்தும் கடமையுடைய வரானார்கள். வட நாட்டிற்கும் தென்நாட்டிற்கும் சென்று வந்த நலிவால் அவர்களுக்கு நெருப்புக்காய்ச்சல் உளதாயிற்று. அதனால் பெரிதும் வருத்த முற்ற அடிகளாரது நல்லுயிர், உடம்பின் அகத்ததோ புறத்ததோ என ஐயுறு நிலையினை எய்தியது. இந்நிலையில் அடிகளாரைக்கண்டு வேண்டும் மருத்துவ வசதிகளை செய்யவந்த செட்டியார் அவர்களை நோக்கி அடிகளார் மெலிந்த குரலில் கூறிய மொழி நம்மனோர் உள்ளத்தையுருக்கும் நீர்மையதாம்.. **"யான் இன்னும் சிலவாண்டுகள் உயிர் வாழ்தற்குரிய நன்மருந்து யாழ் நூலையச்சிட்டுப் பார்த்தலொன்றே"** என அடிகளார் கூறிய கனிவுரையைக் கேட்ட செட்டியார் யாழ்நூலை விரைந்து அச்சிடச்செய்தார்கள். அதன்பின் யாழ் நூல் திருத்தப்படிகளை அடிகளார்பார்வைக்கு அனுப்பி வந்தோம். அவற்றைக்கண்டு மகிழ்ந்த அடிகளாரும் நோய் நீங்கி நலம் பெற்றார்கள் என்றாலும், அவர்கள் தமிழாராய்ச்சியில் வைத்த பேராற்றலால் தம் உடம்பினை உரியவகையில் பேணிக்கொள்ளவும் மறந்தார்கள். அதனால் பாரிச வாயு என்னும் நோய் அவர்கள் உடம்பை பற்றியது. யாழ் நூலரங்கேற்றத்தை விரைவில் நிகழ்த்தித் தாம் கண்ட அரியவுண்மைகளை தமிழறிஞர்களுக்கு வெளிப்படுத்திவிட வேண்டுமென்னும் ஆர்வம் அடிகளார் உள்ளத்தில் பெருகியது. அந்நிலையில் அவர்களை செட்டியார் அவர்கள் நன்றாக கவனித்து வந்தார்கள். அவர்கள் தொண்டின் பயனாக அடிகளாரும் உடல் நலம் பெற்று யாழ் நூல் அரங்கேற்று விழாவில் நோய் நீங்கிய பெருமித நிலையில் வீற்றிருந்தார். பண்டைத்தமிழர் இசைநயங்களை எடுத்துரைத்து நம்தமிழ் மக்களுக்குத் தமிழ்ப்பணியில் புதிய எழுச்சியினையும் ஊக்கத்தினையும் தந்தருளினார்" ....... என அந்நூலில் முதலாம், இரண்டாம் பக்கங்களில் அவர்பற்றி எழுதியுள்ளார்கள்.

இவற்றைத் தொகுத்து நோக்கும் போது கீழைத்தேய சிந்தனை மரபில் இயல், இசை. நாடகம், போன்ற துறைகளில் மிகவும் ஆளுமை பொருந்தியவராக சுவாமிஅவர்கள் திகழ்ந்துள்ளார். இவரது கருத்துக்கள் கட்டுரைகளிலும் நூல்களிலும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அத்தோடு சுவாமி அவர்களது கருத்துக்கள் பல மேலைத்தேய சிந்தனையாளர்களது கருத்துக்களுடன் இசைவாக உள்ளதை என்னால் அவதானிக்க முடிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சான்றாதாரம்


01. சற்குணம் எம். : அடிகளார் படிவமலர், காரைதீவு, சிலை நிறுவனக் குழுவினர். 1969, பக் 90 - 93

02. அருணாசலம் க. : விபுலானந்தரின் சமயச் சிந்தனைகள், சென்னை மில்லாத் அச்சகம், 1992, பக் 71 - 73

03. சிவசுப்பிரமணியம் வ. : விபுலானந்த தரிசனம், மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபை, புனித செபத்தியார் அச்சகம், 1993 பக் 171-173

04. சுவாமி விபுலானந்தர் : "கரத்தை தமிழ்ச் சங்கத்தின் தமிழ்ப் பொழில், 1947, பக் 2 - 4

05. சுவாமி விபுலானந்தர் : யாழ்நூல், கரத்தை தமிழ்ச் சங்க வெளியீடு, 1947, பக் 26 - 27

06. நடராசா ந. : விபுலானந்தர் மணி மொழிகள் இலங்கை, மட்டுநகர் விபுலாநந்த இளைஞர் மன்றத்தால் வெளியிடப்பட்டது. 1976, பக் 1 - 3

07. சபா ஜெயராஜா : 13வது சுவாமி விபுலானந்தர் நினைவு பேருரை. 2009, ப -1

08. மணி. பெ.சு சுவாமி விபுலானந்தர், மணிவாசகம் பதிப்பகம், சென்னை.ப.5

09. ராதாகிருஸ்ணன்.ச, கீழைமேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, (1979), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.ப.8




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலாநந்தரும் கல்வியும்

"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்" என்ற உலகநாதனின் உலகநீதியையும் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற ஔவையின் அமுத வாக்கையும் தமது வாழ்நாளில் இறுதிவரை கடைப்பிடித்து வந்தவர் சுவாமி விபுலாநந்தர். அது மட்டுமன்றி தமது மாணவர்களிடமும் ஒவ்வொருவரும் எப்போதும் மாணவர்களாகவே இருக்கவேண்டும், அப்படி இருந்தால் தான் எப்போதும் கற்றுக் கொண்டே இருக்கலாம் என்று கூறுவார்களாம். பிறருக்கு அவர் எதைச் சொன்னாரோ அதையே தமது வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வந்தார். அதனடிப்படையில் சுவாமி அவர்களின் கல்வியைப் பற்றி அறிய முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

என்று தெய்வப்புலவர் திருவள்ளுவரின் வாக்கு குறிப்பிடுகிறது. ஒரு பிறவியில் ஒருவர் பெற்ற கல்வி அவர் வாழும் காலத்தில் மட்டுமல்லாது அவர் மறைவுக்கு பின்னரும் தொடர்ந்து ஏழ் பிறவியிலும் அவருக்கு புகழையும், பாதுகாப்பையும் தரவல்லது என தெளிவு படுத்தியுள்ளது. இந்த வெண்பாவுக்கு ஒப்பாகவே நமது சுவாமியவர்களும் வாழ்ந்து காட்டியுள்ளார் என்பதில் ஐயமில்லை. அவர் தாம் கற்ற நூல்களினை மிகவும் தெளிவாக மயக்கமின்றி ஆராய்ந்து கற்றார். முழு மனதோடு சுவைத்துக் கற்ற காரணத்தால் சுவாமியவர்கள் ஞான சக்தி மிகுந்தவராக திகழ்ந்தார்கள். அதன் வழியில் தொடர்ந்து பிறருக்கும் பயன் தரும் வகையில் அவர் விட்டுச் சென்ற கல்வி காணப்படுவது போற்றற்குரியது.

கி.பி 1892-03-27 இல் மட்டக்களப்புக்கு தென்பால் அம்பாரை மாவட்டம் காரைதீவில் திருவவதாரம் செய்த சுவாமியவர்கள் தீட்சண்யம் மிக்க ஒளி வீசும் கண்களுடன் பார்ப்போர் மனதை பரவசப்படுத்தினார். பிரண்டு, உருண்டு, தவண்டு சுட்டிப்பையனாக சுறுசுறுப்போடு விளங்கிய அவரது நடவடிக்கைகள் பிற்காலத்தில் சாதிக்கப்பிறந்தவர் என்பதை கோடிட்டுக் காட்டின. தந்தை சாமித்தம்பி விதானையாருக்கும் தாய் கண்ணம்மைக்கும் மிகுந்த களிப்பினைக் கொடுத்தார். பள்ளிப்பருவம் எய்தியதும் 1897இல் தமது ஆரம்பக்கல்வியை நல்லரெத்தினம், குஞ்சித்தம்பி ஆசிரியர்களின் வித்தியாரம்பத்தோடு தற்போது இராம கிருஷ்ண ஆண்கள் பாடசாலை என அழைக்கப்படும் பழம் பெரும் பாரம்பரியமிக்க சைவப் பாடசாலையில் பெற்றுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து வயதான போதில் 1904 இல் கல்முனை மெதடிஸ்த மிசன் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து கல்வியை மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து சிரேஷ்ட வகுப்புகளில் கற்பதற்காக 1906 இல் மட்டக்களப்பு மெதடிஸ்த மிசன் மத்திய கல்லூரியில் சேர்ந்து கற்கும் போதே கேம்பிரிஜ் ஜுனியர் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்றதால் உயர்கல்வி பெறும் பொருட்டு 1908 இல் மட்டக்களப்பு சென்(புனித) மைக்கல் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார்.

அதே ஆண்டில் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைக்குத் தோற்றி சித்தியும் பெற்று பாராட்டப்பட்டார். சுவாமியவர்களின் கல்வியார்வத்தையும், திறமைச்சிறப்பையும் கண்ட கல்லூரி நிர்வாகம் அதே கல்லூரியில் அவரை ஆசிரியராக்கியது. சைவப் பாரம்பரியத்தில் ஊறி வளர்ந்த மயில்வாகனன் என்னும் இளமைப் பெயருடைய சுவாமியவர்கள் கிறிஸ்தவ பாடசாலைகளில் படித்ததாலும், ஆசிரியராக படிப்பித்ததாலும் ஆறுமுக நாவலர் அவர்களைப்போன்று கிறீஸ்தவ மதக் கோட்பாடுகளையும் நன்கு அறிந்து கொண்டார்.

ஆரம்ப காலத்திலேயே இஸ்லாமிய, கிறீஸ்தவ மத கலாசார விழுமியங்களை அறிந்ததன் பயனாக சமய நெறியில் இராம கிருஷ்ண பரமஹம்ஸரைப் போன்று சமரச சன்மார்க்க நெறியில் நடக்க முடிந்தது. இனமத வேறுபாடின்றி அவரது கற்கை நெறியும் கற்பித்தலும் நிகழ்ந்தது.

"கல்வி கரையில கற்பவர் நாள்சில மெல்ல நினைக்கின் பிணி பல" என்ற நாலடியாரின் போதனைகளை சிரமேற்கொண்டு மேலும் மேலும் கற்க வேண்டுமென்ற வேணவாவால் 1916 இல் மதுரைத் தமிழ்ச் சங்க பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றி சித்தியையும் பெற்றார். இலங்கையில் முதலாவது பண்டிதர் என்ற பெருமையையும் பெற்றார். இலக்கண யாப்பு அறிவுகளையும் பெற்று உயர்ந்தார். தமிழ் இலக்கிய அறிவோடு மட்டும் நின்று விடாமல் பொறியியல் கல்லூரியிலும், யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் வேத நூல் ஆசிரியராகக் கடமையாற்றினார். அவ்வேளை கல்வியின் தாகத்தால் உயர் கல்வியை விஞ்ஞானத்தில் பெறவேண்டுமெனத் துணிந்தார். கல்வித்தாகத்தின் உந்துதலால் அயராது படித்து 1920இல் இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞான பிரிவு B.Sc பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தி பெற்று பட்டதாரியானார் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை தேடித்தந்தார். படிப்பும் உயர பதவியும் உயர்ந்தது.

1922 இல் யாழ் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகி அரிய சேவை செய்து வந்துள்ளார். இக் கால கட்டத்தில் இந்து மார்க்கக் கல்வியில் ஈடுபாடு காட்டுகையில் துறவறத்தில் மயில்வாகனாருக்கு நாட்டமேற்பட ஆரம்பித்து பரமஹம்ஸரின் போதனைகளும் விவேகானந்தரின் வழிகாட்டல்களும் அவரைத் தூண்டின தமிழ் நாட்டு இராமகிருஷ்ண சங்கத்தாரோடு தொடர்புகளை ஏற்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைலாப்பூர் இராமகிருஷ்ன மடத்தை நாடி பிரபோத சைதன்யர் என்ற துறவறப் பெயரையும் பெற்றார். துறவறம் பூண்ட போதும் அறிவைத்தேடும் ஆர்வம் குன்றவில்லை. அதன் காரணமாக இராமகிருஷ்ன விஜயம் (தமிழ்) வேதாந்த கேசரி (ஆங்கிலம்) ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியரானது மட்டுமன்றி பண்டைய பழந்தமிழ் நூல்களையும் புதுப்பித்தார்.

மடத்திலிருந்து ஞானோபதேசம் பெற்றதன் பின்னர் 1924 இல் ஸ்ரீமத் சுவாமி சிவாநந்தரால் “விபுலாநந்தர்” என்ற புனிதத் திருநாமம் சூட்டப்பட்டது. கல்வி ஒளியும் ஞான ஒளியும் சேர்ந்த வேளையில் மட்டக்களப்பு விவேகானந்த சபையினரால் நடத்தப்பட்ட பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கான பொறுப்பை ஏற்று 1925இல் இலங்கை திரும்பினார்.

“தொட்டனைத்தூறும் மணல் கேணி மாந்தர்க்கு கற்றனைத்தூறும் அறிவு”

என்ற பொய்யா மொழிப்புலவரின் வாக்கை மெய்யாக்கும் வண்ணம் விஞ்ஞானத்தோடு மெய்ஞ்ஞானத்தையும் இலக்கியங்களையும் தேடிக் கற்றார். கற்கக் கற்க அறிவு வளர்ந்தது. அதன் பேறாக அரிய கட்டுரைகளை சஞ்சிகைகளுக்கு எழுதினார். இதனோடு காரைதீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இலங்கையின் பல பாகங்களிலும் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு பாடசாலைகளுக்கு புதுக்கட்டிடங்களை அமைப்பதற்கு அடிக்கல் நாட்ட வழிசமைத்தார்.

இந்தியாவில் நடைபெற்ற சங்கமாநாடுகளில் பல அறிஞர்களுடன் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டதோடு பல அறிஞர் பெருமக்களுடைய தொடர்புகளையும் பெற்றார். சுவாமி விபுலாநந்தரின் ஆற்றலும் நாடகங்களின் பாலுள்ள ஈர்ப்பும் சேக்ஸ்பியர் நாடகங்களை கற்கத் தூண்டின. அதன் பலனாக சேக்ஸ்பியரின் நாடகங்களை ஒப்பியல் நோக்கோடு தமிழில் எழுத முனைந்த போது மதங்கசூளாமணி மலர்ந்தது. 1926இல் மதுரைத் தமிழ் சங்கத்தாரால் சுவாமியின் மதங்கசூளாமணி என்னும் நாடக நூல் வெளியிடப்பட்டது.

சுவாமி விபுலாநந்தரின் எழுத்து, பேச்சு, கற்பித்தல் துறைகளில் காணப்பட்ட ஆளுமையையும், சிறப்பையும் தமிழ் நாட்டு அண்ணாமலை பல்கலைக்கழக நிருவாகத்தினர் அறிந்து 1931இல் அப்பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராக அவரை நியமித்தனர். அதன் வழியாக 1934 இல் கரந்தை தமிழ் சங்க ஆண்டு விழாவிற்கு தலைமை தாங்கும் பொறுப்பு அவருக்கு கிட்டியது. அவரது ஆழமான தமிழ் புலமையும், சொல்லாட்சியும், பேச்சுத்திறனும் தமிழக அறிஞர் பெருமக்களால் பாராட்டப்பட்டன. இதனைத் தொடர்ந்து 1936 இல் தொடர்ச்சியாக சுவாமி அவர்கள் பல இடங்களிலும் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். கற்றாரை கற்றாரே காமுறுவர் என்பதற்கேற்ப சென்னை கலைச்சொல்லாக்க மகா நாட்டுக்கு தலைமை தாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியை சென்னை மாகாண தமிழ்ச் சங்கம் சிபார்சு செய்தது. அவர் கற்ற கல்வியே அவருக்கு அந்தப் பதவியை பெற்றுக் கொடுத்தது. அதன் பிரதிபலனாக 1938 இல் கலைச் சொற்கள் என்னும் அகராதி நூல் சுவாமியின் உழைப்பால் உருவானது.

அத்தோடு நின்றுவிடாமல் இந்தியாவின் வடநாட்டில் மாயாவதி ஆச்சிரமத்தில் இருந்தபோது "பிரபுத்தபாரக" என்னும் ஆங்கில சஞ்சிகையையும் இராமகிருஷ்ண சங்கத்தின் சார்பாக வெளியிட்டார்.

மேலும் செந்தமிழ் போன்ற பல தமிழ் சஞ்சிகைளிலும் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதி வந்தார்.

சுவாமி விபுலாநந்தரின் ஆற்றலையும் ஆளுமையையும் தமிழ்ப் பற்றையும் அறிந்து கொண்ட இலங்கை அரசினர் 1947இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியர் பதவியை அன்னாருக்கு வழங்கி கௌரவித்தனர். சிறந்த ஞாபக சக்தியை கொடையாகப் பெற்றிருந்த சுவாமியவர்கள் பல நூல்களைக் கற்று அவற்றை தமது மனதிலே பதித்து வைத்திருந்தார்.

மாணவர்களுக்கு கற்பிக்கும் போது பல நூல்களில் இருந்து ஆதாரங்களை எடுத்துக்காட்டி அற்புதமான விளக்கமும் கொடுப்பார்.

எந்த நூலில் எத்தனையாம் பக்கத்தில் எதற்கான எடுத்துக்காட்டு இருக்கின்றது என்று மந்திரவாதி போல் குறிப்பிடும் வல்லமை வாய்ந்தவர். கற்றல் கற்பித்தலில் மட்டும் ஞாபக சத்தியை காட்டினாரில்லை அறிஞர் பெருமக்களின் ஆய்வுகளை, பேச்சுகளை மொழிபெயர்த்தலிலும் காட்டினார். ஒருவர் பேசும் போது இடைக்கிடை நிற்பாட்டி மொழி பெயர்த்தவர் மொழி பெயர்த்துப் பேசுவதுதான் வல்லமையாக இருந்தது. ஆனால் சுவாமி அவர்களோ ஆங்கிலப் பேச்சாளர் இடையில் நிறுத்தி பேசாது தொடர்ந்து பேசவைத்து, முடிந்தபின் ஒரு அட்சரம் பிசகாமல் கருத்துச் சிதறாமல் அவ்வளவையும் அப்படியே தமிழில் மொழிபெயர்த்து கூறுவார்களாம். அப்படிப்பட்ட ஆற்றல் சுவாமியிடம் மட்டுமே உண்டு எனப் பலர் கூறியுள்ளனர்.

இவ்வாறு தாம் கற்ற கல்வியினால் பல சாதனைகளை நிலைநாட்டிய சுவாமியவர்கள் பெட்டி தொட்டிகளில் எல்லாம் இராமகிருஷ்ண பாடசாலைகளைத் தோற்றுவித்து ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு காட்டாமல் சாதி மதத்தை சாடாமல் கல்வியை எல்லோருக்கும் புகட்டி வைத்தார். குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்தே கல்வி அழகே அழகு என்பதை அவனிக்கு எடுத்துரைத்தார். போதனைகளோடு மட்டும் நின்றுவிடாமல் பல சாதனைகளையும் நிகழ்த்திக் காட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்து யாழ்களைப் பற்றி ஆராய்ந்து அரும் பெரும் நூலான யாழ்நூலை உருவாக்கி 1947இல் நமக்குத் தந்தார். மதங்க சூளாமணியும் யாழ்நூலும் அவர் கல்வியின் கண்களாக கட்டியம் கூறுவனவாம். நாடகம், உரைநடை மட்டுமல்லாது தேனினும் இனிய கவிதைகளையும் பெயர்த்துத் தந்தார். "ஈசன் உவக்கும் இன்மலர்களான வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ" என்ற பாடல்கள் நம் எல்லோர் காதுகளிலும் ஒலித்துக் கொண்டிருப்பதை மறக்கமுடியுமா. ஈழமுதற் பணி இமயம் வரை கொடி கட்டும் இசைத்தமிழனான சுவாமி அவர்களின் கல்வியின் ஆற்றல் தான் என்னே. இயல் இசை, நாடகம் ஆகிய மூன்று தமிழ் நூல்களையும் தந்த முத்தமிழ் முனிவர் மட்டுமல்ல சுவாமியவர்கள் ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகிய மும் மொழிகளிலும் புலமை மிக்கவர்.

இவற்றிற்கும் மேலாக உலக வரலாறு, மானிடவியல், தத்துவம் ஆகியவற்றையும் கற்று பரந்த மனப்பாங்கையும் பெற்றவர். மேலும் தமிழ் மீது கொண்ட காதலால் பலரும் அறியாமல் மது பாவனையால் மறைக்கப்பட்டிருந்த மகா கவிஞன் பாரதியை உலகறிய வைத்தவர். புதுமைக்கவிஞன் சுப்பிரமணிய பாரதியின் பாட்டுக்களால் கவரப்பட்டு "பாட்டுக்கொரு புலவன் பாரதி" என்பதை பாருக்கு அறிவித்தவர். இவ்வாறு கல்வியாலும் பேராற்றலாலும் வீரியம் பெற்று விளங்கிய சுவாமி விபுலாநந்தரின் கல்வித்தாகம் அவர் இப்பூவுலகை விட்டு மறையும் வரைக்கும் தணியவில்லை என்பதை எமக்கு அவர் வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. கடல் கடந்த நாடுகளிலும் போற்றப்படுகின்ற நம் சுவாமியவர்களின் வழியில் நாமும் நடந்து அறிவைப் பெருக்க விழைவோமாக.

விபுலமணி, கலாபூஷணம் **இரா, கிருஷ்ணபிள்ளை**
ஓய்வு நிலை அதிபர்
காரைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவாமி விபுலாநந்தர் எப்போது பிறந்தார்?

**ஆய்வுக்கட்டுரை**

அகிலம் போற்றும் உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் காரைதீவு மண்ணில் பிறந்து 124 வருடங்களாகின்றன.

கிட்டத்தட்ட 125 வருடங்களைக் கடந்த ஒரு பெருமகனின் பிறந்த நாளை துல்லியமாக அறியமுடியாத எமது வரலாற்று ஆய்வாளர்கள் எப்படி பல நூறு அல்லது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறுகளை அறிவார்கள்?

இது உண்மையுள்ள ஆய்வாளர்களின் வினாவாகும். இதற்கு விடையளிப்பதே இதன் நோக்கமாகும்.

சுவாமி விபுலானந்த அடிகளார் பற்றி இதுவரை வந்த நூற்றுக்கணக்கான நூல்களில் அவரது பிறப்பு பற்றி தமிழ் திகதி தொடர்பில் எந்தவொரு மாறுபாடான தகவலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

அதாவது சுவாமிகள் 1892 கர வருடம் பங்குனித்திங்கள் 16ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தார் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை

இந்த தமிழ் திகதிக்கான ஆங்கிலத் திகதியை பெறுவதில் பலர் தவறு விட்டிருக்கின்றார்கள். இம்மண்ணிலிருந்து வெளிவந்த அடிகளார் படிவமலர் கூட தவறு விட்டிருக்கிறது.

அதில் அடிகளார் 26, 27, 28, 29ஆந் திகதிகளில் பிறந்ததாக வேறு வேறு கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் நான்கு தினங்களில் பிறக்க முடியுமா? இல்லை.

சுவாமிகளின் நூற்றாண்டை ஒட்டி என்னால் தொகுக்கப்பட்ட "அடிகளார் நினைவாலய மலரில் "சரியான திகதி தொடர்ந்து பேணப்பட்டு வந்தமை இவ்வண் சுட்டிக்காட்டப்படுதல் பொருத்தமாகும்.

இலங்கையில் முதன்முதல் வாக்கிய பஞ்சாங்கம் வெளிவந்த ஆண்டு 1892 ஆகும். யாழ்ப்பாணம் கொக்குவிலை சேர்ந்த சந். இரகுநாதையரவர்களால் கணிக்கப்பட்ட வாக்கிய பஞ்சாங்கம் அதுவரை கையெழுத்துப் பிரதியாகவே வெளிவந்து கொண்டிருந்தது.

1892இல்தான் முதன் முதல் அப்பஞ்சாங்கம் அச்சில் வெளியிடப்பட்டது. அதே ஆண்டிலேதான் சுவாமி விபுலானந்தரும் பிறந்தார்.

எனவே அந்த 1892 கர வருட பஞ்சாங்கத்தை பார்த்தால் பிறந்த நாள் (ஆங்கிலத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அதை பெறுவதென்பது முயற்கொம்பாக இருந்தது.

ஆதலால் எனது இலக்கிய நண்பர் களுதாவளையைச் சேர்ந்த பிரபல வரலாற்றாய்வாளர் ஒய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் திரு. ஆ.அரசரெத்தினம் அவர்களை தொடர்பு கொண்டு அப்பஞ்சாங்கத்தை பெற முயற்சித்தேன். அவரும் சுவாமி விபுலானந்தரின் நேரடி அபிமானி. வரலாற்றாய்வாளர் எவ்.எக்ஸ்.சி.நடராஜா அவர்களின் நேரடி சீடர். அவர் பலத்த பிரயத்தனத்தின் மத்தியில் அப்பஞ்சாங்கத்தை யாழ்ப்பாணத்தில் இருக்க கூடிய இலக்கிய ஆய்வாளர்களிடம் இருந்து பெற்றெடுத்து எனக்கும் பிரதியை அனுப்பி இருந்தார்.

(இங்கு அதன் முதற் பிரதியின் முன்பக்கம் தரப்படுகிறது)

அப் பஞ்சாங்கத்தில் தமிழ் திகதியாம் கர வருடம் 1892 பங்குனித்திங்கள் 16ஆந் திகதிக்கு நேர் ஒத்த ஆங்கிலத் திகதியை பார்த்தோம்.

அஃது 27.3.1892 என இருந்தது.

அரபுத்திகதி ஷஃபான் 27 . ஆங்கிலத்திகதி மார்ச் 27 . தமிழ்திகதி பங்குனி 16

ஞாயிறு, திதி - சதுர்த்தி, நட்சத்திரம் - பூரட்டாதி, யோகம் - சுப்ரம், கரணம் - விட் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இங்கு அதன் பிரதியும் தரப்படுகிறது)

இப்படியாக சுவாமியின் பிறந்த தினம் 1892.03.27 என வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் எந்த சர்ச்சையும் ஏற்பட நியாயம் இல்லை.

சுவாமிகள் பிறந்த திகதியைக் குறிக்கும் தனித்தமிழ் எழுத்துக்களாலான பஞ்சாங்கத்தின் பிரதியையும் இங்கு தருகின்றேன். இலக்கங்களை தமிழ் எழுத்துக்களில் வாசிக்கத் தெரிந்த சான்றோருக்கு இது நன்கு புலப்படும் எனக் கருதுகிறேன்.

## பிறப்பு அத்தாட்சி பத்திரம்

அந்த காலத்தில் பிறப்பு சான்றிதழுக்கு பதிவது என்பது பொதுவாக காலம் தாழ்த்தியே என்பது அனைவரும் அறிந்ததாகும்.

இதற்கு சுவாமியின் தந்தையாரும் விதி விலக்கல்ல.

காரணம் சுவாமி பிறந்து ஒரு சில தினத்தில் ஜனன ஜோதிடம் பார்க்க ஜோதிடரிடம் சென்ற போது தற்போது ஜாதகம் கணிக்க முடியாது என சூசகமாகக் கூறிவிட்டார் ஜோதிடர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையாரான சாமித்தம்பி அவர்கள் பிள்ளைக்கு தத்து (கண்டம்) இருப்பதனை ஊகித்தவராக பிள்ளைக்கு பெயரும் வைக்கவில்லை. இந் நாளில் பிள்ளைக்கு ஒருவித நோய் தொற்றிக்கொண்டது. ஜோதிடர் கூறிய விடயமும் நோயும் தந்தை சாமித்தம்பி விதானையாருக்கு மேலும் பீதியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியது. உடனே பெற்றோர் பிள்ளையை தூக்கிக் கொண்டு கதிர்காமத்திற்குச் சென்று அங்கு முருகனிடம் ஒப்படைத்து பிள்ளையைக் காப்பாற்று என அங்கேயே மண்டாடி விரதமிருந்தனர்.

சில நாளில் பிள்ளையின் நோய் தீர்ந்தது. அந்த இடத்திலேயே பிள்ளைக்கு முருகனின் நாமமான "மயில்வாகனன்" எனப் பெயரிட்டனர். இந்தத் தருணத்தில்தான் பெயரிடப்பட்டதென்பதை கவனத்தில் கொள்ளவும். முருகப் பெருமானின் வாகனமான மயில்வாகனம் என்று சிலர் இளமைப்பெயரைக் குறிப்பிடுவது பொருத்தமில்லை என்பதையும் கவனத்தில் கொள்க.

பின்பு பிள்ளையை ஊருக்குக் கொண்டுவந்தார்கள். ஜனன ஜோதிடம் பார்த்தார்கள். இவைகள் எல்லாம் இடம் பெற்று ஓரிரு மாதங்களின் பின்னர் தான் தந்தையார் பிறப்புக்காகப் பதிவு வைத்துள்ளார்.

சுவாமியின் தந்தை ஒரு விதானையார். அக்காலத்தில் கிராமத்தலைவர் என்றால் அது விதானையாகத்தானிருக்கும். அப்படிப்பட்ட அவருக்கு சுவாமி பிறந்த உடனே பதிவு வைக்கத் தெரியாதா? ஆனால் பிறந்தபின்பு ஏற்பட்ட நோயும் அதனோடிணைந்த காரணிகளும்தான் பிந்திய பதிவுக்குக் காரணம்.

இவையனைத்தும் இன்றும் காரைதீவில் வாழும் உதிர உறவுகளால் கூறப்பட்டவை. அந்த பிறப்பத்தாட்சிப் பத்திரமே இன்று ஒரு சாராரின் பிறந்த நாள் விழாவிற்குக் காரணமாயிற்று என்பது துரதிஸ்டமே.

## தர்க்கநியாயம்

அப்படி பிறப்புப் பத்திரத்தில் குறிக்கப்பட்டவாறு 1892.05.03 என எடுத்துக் கொண்டால் கர வருடம் பங்குனித் திங்கள் 16ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமையில் சுவாமி பிறக்கவில்லை என்று அர்த்தப்படுமே? அது சரியா?

அது மட்டுமல்ல சாதாரணமாக ஒரு தமிழ் வருடம் ஏப்ரல் மாதம் 13,14 தொடங்கி அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 13,14இல் முடிவடைவது தெரிந்ததே.

உதாரணமாக இந்த வருடப்பிறப்பைப் பாருங்கள். கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி நள்ளிரவு வரை " மன்மத வருடம்" எனும் தமிழ்வருடம் இருந்தது. ஏப்ரல் 14ஆம் திகதி புதிய தமிழ் வருடமாக "துர்முகி வருடம் "அமுலுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று அடுத்த வருடம் ஹேவிளம்பி எனும் புதிய வருடம் 14 ஏப்ரல் 2017இல் பிறக்கும். எனின் தமிழுக்கு கர வருசத்தில் வரும் பங்குனித் திங்கள் 16ஆந் திகதி என்பது கர வருசத்திற்குரியது. பிறப்புப் பத்திரத்தின்படிவரும் ஆங்கிலத் திகதியான 1892.05.03 ஐப் பார்த்தால் அவரது பிறந்த தமிழ் திகதி அடுத்த வருடமான "நந்தன" வருடமாக கொள்ளப்பட வேண்டுமே!. ஏனெனில் ஆங்கிலத்தில் 5ம் மாதம் என்பது தமிழுக்கு அடுத்த வருடமாகக் (நந்தன) கொள்ளப்பட வேண்டும் என்பதனை யாரும் அறிவார்கள்.

60 ஆண்டு கால வருடச் சுழற்சியில் 25ஆவது வருடமான கர வருடம் (1891 - 1892) 1892 ஏப்ரல் 14ஆந் திகதியுடன் முடிவடைய, அதற்கடுத்த 26ஆவது வருடமான நந்தன வருடம் (1892 - 1893) 1893 ஏப்ரல் 14ஆந் திகதியுடன் முடிவடையும்.

பிறப்புப்பத்திர 1892.05.03 ஆங்கிலத் திகதியின்படி பார்த்தால் சுவாமிகள் தமிழுக்கு நந்தன வருடம் சித்திரை மாதம் 22ஆந் திகதி பிறந்ததாக கருதப்படும். அது செவ்வாய்க்கிழமையில் ஏகாதசி திதியில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்ததாக கொள்ளப்படும். இது சாத்தியமா?

அப்படியெனின் இதற்கு முன்பு எழுதப்பட்ட சுவாமிகள் பற்றிய நூற்றுக்கணக்கான நூல்களில் இடப்பட்ட தமிழ்த்தேதி பிழையென கொள்ளப்படவேண்டும்.

எந்தவொரு நூலிலும் சுவாமிகள் கர வருடத்தில் பிறந்ததாகவே சொல்லப்படுகின்றது. இன்னும் இன்றும் காரைதீவில் வாழும் உதிர உறவுகள சுவாமி கரவருடத்தில் பிறந்ததாகவே கூறுகின்றனர். இந்நிலையில் காலந்தாழ்த்தி வைக்கப்பட்ட பதிவின் அடிப்படையில் பெறப்பட்ட பிறந்த ஆங்கிலத் திகதியான 1892.05.03 சுவாமிகள் பிறந்த திகதியாக கொள்ளமுடியுமா? அத்தினத்தில் பிறந்த தின விழாவை நடாத்துவது பொருத்தமா? இல்லைவே இல்லை.

## முடிவுரை

சுவாமிகள் 1892 கர வருடம் பங்குனித்திங்கள் 16ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தார் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை

இந்த தமிழ் திகதிக்கான ஆங்கிலத்திகதியை உரிய பஞ்சாங்கத்தில் பார்க்குமிடத்து அது 27.03.1892 என வருகின்றது.

எனவே. மட்டக்களப்பிலிருக்கக்கூடிய ஒருசில சுவாமி அபிமானிகள் சுவாமியின் பிறந்த தினத்தை மே மாதத்தில் தொடர்ந்து கொண்டாடுவதென்பது அவரைக் கேலிசெய்வதாக, கொச்சைப்படுத்துவதாக உள்ளது.

இது இவ்வாறிருக்க காரைதீவு முச்சந்தியிலுள்ள விபுலானந்த சதுக்கத்தில் திறந்துவைக்கப்பட்ட விபுலானந்தசிலை திறப்புவிழா வைபவத்தின்போது உரையாற்றிய இ.கி.மிசன் சுவாமி ஸ்ரீமத் பிரபுபிரேமானந்தா ஜீ கூறியதனையும் இவ்வண் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது துறவிகள் மற்றும் சுவாமிகளுக்கு பிறந்த தேதி என்பது அவர்கள் துறவறம் பூண்ட திகதியை குறிக்கும். அந்தவகையில் சித்ராபூரணையில் சுவாமி விபுலாநந்தர் துறவறம் பூண்டவர். அத்தகைய தினத்தில் சிலை திறப்பது பொருத்தமானதே. அதாவது அவரது பிறந்த நாளில் அவருக்கு பரிசாக சிலை நிறுவியுள்ளீர்கள். காரைதீவு படித்தமண் என்பதனை மேலும் ஒருமுறை நிறுவியுள்ளீர்கள் எனக் குறிப்பிட்டார்.

அது அவரது கருத்தாக இருந்தபோதிலும் காரைதீவு மண்ணில் ஒரு நூற்றாண்டு காலத்துள் பிறந்து புகழ்பெற்ற ஒரு மகானின் பிறந்த நாளை அங்கு அவரோடுபிறந்த அவரது உதிர உறவுகள் கல்விமான்கள் அவரது அபிமானிகள் ஊர்ப்பிறந்தவர்கள் கூறுவதற்கு போதுமான அருகதையுடையவர்கள். இவற்றைவிட பிறப்பத்தாட்சிப்பத்திரம் ஒரு வலிதான ஆதாரமா?

இ.கி.மிசனின் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வருபானந்த ஜீ கல்லடியிலுள்ள சுவாமியின் சமாதியருகே நின்று பட்டயக்கையளிப்பு விழாவில் பேசுகையில் :

சுவாமி ஆராய்ச்சி செய்யக்காரணமாயமைந்த யாழ் கருவியை காட்சிப் பொருளாக அல்லாமல் நிஜத்தில் மீண்டும் பாவனைக்குக் கொணரவேண்டும். அதுவே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

யாழ் இசையானது அற்புதமானது. பல இசைக்கருவிகளின் இசைகள் இக்கருவியில் எழும். இன்று இக்கருவி பாவனையில் இல்லை. யாழை வெறும் காட்சிப்பொருளாக பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இவ் யாழ் இசையினை இசைக்க வல்ல ஆசிரியர்கள் முன்வருவதுடன் யாழை மீண்டும் மீட்க உலகம் தயாராதல் வேண்டும். யாழ் உள்ளவரை சுவாமி நினைவு கூரும் வீதம் மேலும் அதிகரிக்கும். இது தான் இவ்வுலகம் சுவாமிக்கு செய்யும் கைம்மாறு. வெறுமனே அவரது வாழ்க்கை வரலாற்றையும் சாதனைகளையும் மட்டும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பதனை விட யாழ் இசைக்கருவியை மீட்டு உயிர் கொடுக்க வேண்டும் என்றார்.

இனிமேலாவது சுவாமிகளது பிறந்த தினத்தில் தேவையற்ற விவாதங்களை விடுத்து அவரது பெயரில் பல அமைப்புகள் வீணே காலத்தைக் கடத்துவதைத் தவிர்த்து தமிழ் கூறுநல்லுலகம் சுவாமிகள் பற்றிய மேலும் பல ஆராய்ச்சிகளை செய்தல் பொருத்தமாகும்.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா** (ADE)

முன்னாள் தலைவர் - சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம்
இந்து சமய விருத்திச் சங்கம் காரைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலாநந்த சதுக்கத்தில் வித்தகரின் சிலை

சிறப்புற்ற சந்திதான் காரைதீவின்
சீரோங்கு விபுலாநந்த சதுக்கத்தில்
அறப்பற்றல் அறிஞர் திரு மயில்வாகனனார்
ஆற்றிய பணியென்றும் அலை கடல் முத்தே
திறமுற்ற பெருந்தகை விபுலாநந்தருக்குப்
புகழ் சேர்க்கும் சிலைவைப்புச் சிறப்புக் கூற
விருப்புற்றுக் கவிதை செய்ய வந்தேன் நானே
விளைவூரின் வித்தகனாம் இராமநாதன்

முடக்கனாந்தின் நீர் நிலையில்
மூழ்கிக் களிக்கும் முற எருமை
படக்கென அவற்றின் முதுகினிலே
பனையான் மீன்கள் ஏறிவிளையாடும்
கிடக்கும் அல்லி ஆம்பல் மலர்
கிளறும் கண்ணுக் கெழிலூட்டும்
இடத்தில் அமைந்த சதுக்கம் தான்
எங்கள் விபுலாநந்த சதுக்கம்.

சின்னப்பாலம் பெரியபாலம்
சீறிப்பாயும் பேராறு
வண்டில் மாடு குளிப்பாட்ட
வட்டானையின் கானுன்டு
பென்னம் பெரிய வயல் வெளியின்
பேராய் அமைந்த சந்தியிலே
அன்பாய் அறிவாய் புகழ்வீசும்
அடிகள் சிலையாய் அமைந்தாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குச் சிறப்பெங்கள் விபுலாநந்தனே
உண்மைத் தமிழுக்கு சிறப்பெங்கள் சுவாமியாமே
யாருக்கும் பெருமை அவர் வழித் தொடரல்
யாம் பெற்ற பெரும் பேறு அடிகளாரே
பெயருக்கு அவர் நாமம் சொல்லியென்ன
பெரியாரின் புகழ் கடத்தல் இன்பமாமே
பாருக்கு புகழ் சேர்த்த அடிகள் நாமம்
பாடும் மீன் பரப்புக்கே பாறுவமே.

வித்தகருக்குச் சிலைவைத்துச் சிறக்க நின்றோர்
விளக்கமற்ற தமிழ் மணம் விரியச் செய்தோர்
உத்தமரின் தத்துவர்கள் ஏறிநின்றோர்
உண்மையாம் தமிழுக்காய் உழைத்தோன் நாமம்
தத்துவ மேதை நற்றமிழின் ஈர்ப்பால்
தரம் பெறு யாழ் நூலைத் தந்தோன் பாதம்
எத்தனை தலைமுறை தாண்டினாலும்
ஏற்றுவர் போற்றுவர் என்பேன் நானே
வாழ்க புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு.

கலாபூஷணம் **சின்னத்தம்பி இராமநாதன் (J.P.)**
காரைதீவு - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்க சூளாமணி படைத்த மாமுனிவன் தவத்திரு சுவாமி விபுலாநந்த அடிகளார்

(தவத்திரு சுவாமி விபுலாநந்த அடிகளாரின் பிறந்த தினத்தினை நினைவு கூருமுகமாக இக் கட்டுரையினை சமர்ப்பிக்கின்றேன்)

**நல்லதம்பி நல்லராஜா - மட்டக்களப்பு**

ஈழநாட்டின் அணையாத அறிவுச்சுடர் அருட்டிரு சுவாமி விபுலாநந்த அடிகளார் தமக்கென வாழாத பெரும்தகை. ஈழத்தின் ஞானச்சுடரான அடிகளாரின் பெருமை ஈழத்துடன் நின்று விடவில்லை. தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்தது.

தாயைத் துறந்தாலும் தண்டமிழைத் துறவாத முத்தமிழ் வித்தகர் மாமுனிவர் தவத்திரு சுவாமி விபுலாநந்த அடிகளார் தமிழ் கூறும் நல்லுலகிற்கு படைத்தளித்த அரும் பெரும் பொக்கிஷங்களுள் இறவாப் புகழ் பெற்ற யாழ்நூல் எனும் தமிழ் இசை பற்றி விளக்கும் கணித - பௌதீவியல் ஒலியியல் நூலாகவும், முத்தமிழில் ஒன்றான நாடகத்தமிழ் பலவீனமைடைந்து போகாமல் பேண வேண்டும் என்ற உயரிய நோக்கில் காலத்தின் தேவை அறிந்து 1926 இல் வெளியிட்ட மதங்க சூளாமணி என்பது வில்லியம் சேக்ஸ்பியர் என்னும் ஆங்கில நாடக கவிஞனது நாடகங்களை தமிழின் முதநூலாகிய தொல்காப்பியம், வடமொழி நூலாகிய தனஞ்சயரின் தசரூபகம் ஆகிய நூல்களோடு பொருந்தும் வண்ணம் பகுப்பாய்வு செய்து காட்டினார். இந்த பகுப்பாய்வுக்காக சேக்ஸ்பியரின் பன்னிரண்டு நாடகங்களை ஆய்வுக்குட் படுத்தினார் அதன் விளைவாக சுவாமியவர்களின் இலக்கிய ஆற்றலும் பன்மொழித் திறனும் ஒருங்கே அமையப்பெற்று படைக்கப்பெற்ற உயரிய நூல்தான் மதங்கசூளாமணி என்னும் உன்னத நூலாகும்.

நாடக உலகின் இமயம் என விளங்கிய சேக்ஸ்பியரை "சூளாமணி" என்று சுவாமியவர்கள் சிறப்புடன் கூறி சிறப்பிக்கின்றார். மதங்கர் என்பதற்கு "கூத்தர்" என்ற பதத்தினை அடிப்படையாகக் கொண்டு சேக்ஸ்பியரை சூளாமணி என்று அடிகளார் சிறப்புடன் வர்ணிக்கின்றதோடு சேக்ஸ்பியருக்கு "மதங்க சூளாமணி" என்னும் சிறப்புப் பெயரையும் இட்டு மதங்கசூளாமணி என்னும் சிறப்பு மிக்க நாடகத் தமிழ் நூலினை தமிழ் கூறும் நல்லுலகிற்கு படைத்தார். அத்தோடு நாடகத்தில் நடைமுறை உலகினைப் படைத்துக் காட்டிய சிற்பியாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்ஸ்பியரை கண்ட சுவாமியவர்கள் அவரை செகசிற்பியர் என்றும் அழைத்து ஆங்கில ஒலியுடன் பொருந்தத்தக்கதாக அமைத்தார்.

இந்நூலின் சிறப்பியல்பினை நோக்கும் போது செகசிற்பியரது நாடகங்களின் பெயர்களையும் நடிகர்களின் பெயர்களையும் ஆங்கிலத்தில் அவ்வாறே எழுதாமல் கவிதை நடையில் மொழி பெயர்த்திருப்பது சுவாமியவர்களின் மொழிபெயர்ப்புத் திறனையும் தமிழ் அறிவினையும் பறைசாற்றுகின்றது.

செகசிற்பியர் அழியாத நாடகங்களை உருவாக்கியதோடு அந் நாடகங்களில் நடித்தும் வந்துள்ளார். அவர் படைத்த கதாபாத்திரங்கள் இன்றும் கூட இறவாத பெயர்களாக மிளிர்கின்றன. எனவேதான் செகசிற்பியரை நடிகன் என்று கூறாமல் "மதங்கர்" எனக் கூறியது அடிகளாரது ஆய்வுத்திறனை எடுத்தியம்புகின்றது.

செகசிற்பியரது நாடகங்களை அடிகளார் விரும்பிப் படித்தார். அத்தகைய ஓர் சூழ்நிலையைத் தமிழ் மொழியிலும் ஏற்படுத்துவதற்கு எண்ணங் கொண்ட அடிகளார் அதற்கிணங்க ஆங்கில மகாகவியாகிய செகசிற்பியரின் நாடகங்களையும் வடமொழியாசிரியராகிய தனஞ்சயரின் தசரூபத்தையும் மூலக் கருவாகக்கொண்டு சிலப்பதிகாரத்திலுள்ள நாடக நுண்முடிவுகளை ஓரளவிற்கு விளக்கிக் காட்டுவதற்கு ஏற்றதாக உருவாக்கப்பட்டதே மதங்கசூளாமணி என்னும் நாடகத் தமிழ் நூலாகும்.

அடிகளாரால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட செகசிற்பியரின் பன்னிரண்டு நாடகங்களுக்கு தமிழ்மொழியில் கொடுக்கப்பட்ட பெயர்களும் அவை ஒவ்வொன்றிலும் சுவாமியவர்கள் உணர்ந்த மெய்ப்பாடுகளும் பின்வருமாறு அட்டவணைப் படுத்தி காட்டப்படுகின்றன.

| | நாடகத்தின் ஆங்கிலப் பெயர் | தமிழில் அடிகளார் கொடுத்த பெயர் | மெய்ப்பாடு |
|---|---|---|---|
| 1. | லவஸ் லேபரஸ் லாட் | காதல் கைம்மிக்க காவலன் சரிதை | நகை |
| 2. | கிங் லீயர் | ஆகுலராஜன் கதை | அழுகையும், இளிவரலும் |
| 3. | ரோமியோ- யூலியட் | இரம்மியன் சுசீலை சரிதை | பெருமிதம் |
| 4. | டைமன் ஒவ் ஏதென்ஸ் | தீ நட்பு அஞ்சிய தீமோன் சரிதை | வெகுளியும் அவலமும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 5. | தி டெம்பஸ்ட் | பெரும்புயற் சரிதை | மருட்கையும் அவலமும் |
| 6. | மக்பெத் | மகபதி சரிதை | அச்சம் |
| 7. | மர்ச்சன்ட் ஒவ் வெனிஸ் | வணிக தேய வர்த்தகன் சரிதை | உவகை |
| 8. | யூலியஸ் சீசர் | யூலிய சீசர் சரிதை | பெருமிதம் |
| 9. | டைடஸ் அந்த்ரானிகஸ் | சேனாதிபதி சரிதை | வெகுளி |
| 10. | அஸ் யு லைக் இட் | வேனிற் காதை | உவகை |
| 11. | வின்டரஸ் டேல் | கூதிர்க் காதை | உவகை |
| 12. | டுவெல்த் நைட் | கருதியது எய்திய காதலர் சரிதை | உவகை |

(ஆதாரம் : மதங்கசூளாமணி -1996 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)

இத்துடன் செகசிற்பியரின் நாடகங்களில் தோன்றிய கதாபாத்திரங்களின் ஆங்கில பெயர்களையும் அடிகளார் அப்பாத்திரங்களின் குணஇயல்புகளை நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றிற்கு பொருத்தமான தமிழ் பெயர்களையும் பின் வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.

நாடகங்களில் வரும் கதாநாயகர்களின் தமிழ்ப்படுத்திய பெயர்கள்

| ஆங்கில பெயர்கள் | தமிழ் பெயர்கள் |
|---|---|
| பிளாரி ஜல் பெர்டினாண்டு | வசந்தன் பிரியதத்தன் |
| டீயூக் ஆர்சினோ | மாசேனன் |
| அன்டோனியோ | அனந்தன் |
| ரோமியோ | இரம்மியன் |
| ஆர்ல்டாண்டோ | ரதிகாந்தன் |
| மேக்பெத் | முகபதி |
| ஷைலக் | சாபலன் |

(ஆதாரம் : மதங்கசூளாமணி - 1996 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)

செகசிற்பியரின் நாடகங்களில் தோன்றும் கதாநாயகிகளின் தமிழ்ப்படுத்திய பெயர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆங்கில பெயர்கள் | தமிழ் பெயர்கள் |
|---|---|
| யூலியட் | சுசீலை |
| மிராண்டா | மாலதி |
| பெர்டிடா | புரிபவை |
| போர்ஷியா | விஜயை |
| ஜெஸ்ஸிகா | பதுமை |
| கல்பூர்ணியா | கல்பூர்ணியா |
| ரோஸலின்ட் | கோகிலவல்லி |
| வயோலா | விமலை |
| கெர்மியோன் | ஆயிராணி |
| ஒலிவியா | குமலை |

(ஆதாரம் : மதங்கசூளாமணி - 1996 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)

சுவாமியவர்கள் தமது ஆய்வுத் திறனால் செகசிற்பியரது இறவாத நாடகங்களின் தலைப்புகளையும் நடிகர்கள் நடிகைகளின் பெயர்களையும் அப்படியே தமிழ் மொழியில் மொழி பெயர்க்காமல் நறுமணம் வீசும் நல் கவிதை நடையில் தமிழாக்கம் செய்திருப்பது இந் நூலில் காணப்படும் சிறப்பம்சமாகும். அத்தோடு நம் முன்னோர்கள் வகுத்த நாடக இலக்கணத்திற்கேற்ப இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளமை மேலும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

இந் நூலினை நாம் நுணுகி ஆராயும் போது இயல், இசை, நாடகமெனும் முத்தமிழுக்கும் புத்தெழுச்சி, புதிய நடை, புதிய துகளுக்கு வழி, புதிய நோக்கு முதலானவற்றை வழங்கியதுடன், செகசிற்பியரின் கருத்துக்கு எவ்வகையிலும் தாழ்ந்து போகாமல் அடிகளாரின் தமிழாக்கம் வானத்து நட்சத்திரங்கள் போன்று மிளிர்வதோடு மூல நூலாசிரியரான செகசிற்பியரைக் காட்டிலும் சுவாமியவர்கள் மேலோங்கி நிற்பதையும் காண்கின்றோம்.

இவ்வாறு செயற்றிறன் மிக்கவரும் பழைமையில் புதுமையைக் காண்பித்தவருமான தவத்திரு சுவாமி விபுலாநந்த அடிகளார் மேலை நாட்டையும் கீழை நாட்டையும் இணைத்ததால் உண்டான புதிய நாகரீகத்தை தோற்றுவித்தார்கள். இவ்வாறு அடிகளாரின் முத்தமிழ்ப் பணிகள் யாவுமே மனித மேம்பாட்டை மையப் படுத்தியனவாகவே அமைந்தன என்பது தெளிவாகும். அதற்கு அடிகளாரின் வாழ்வும் பணிகளும் சான்று பகர்கின்றன.

**"வாழ்க விபுலாநந்தர் நாமம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இல. கணேசன் V. I. P. தமிழ் நாட்டுத் தலைவர்
செல்லையா இராசையா இந்து சம்மேளன ஆலோசகர்



இல. கணேசன் V. I. P. தமிழ் நாட்டுத் தலைவர்
செல்லையா இராசையா இந்து சம்மேளன ஆலோசகர்



முரளீ மனோகரன் ராவ் - அமைச்சர்
செல்லையா இராசையா இந்து சம்மேளன ஆலோசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து சம்மேளனத் தலைவர் **திரு. N.அருண்காந்த்**
**பொன் இராதாகிருஷ்ணன்** (அமைச்சர்), **முரளி மனோகர ராவ்** (அமைச்சர்),
**செல்லையா இராசையா** (அகில இலங்கை இந்து சம்மேளன ஆலோசகர்)



**திரு. N.அருண்காந்த், இராஜேந்திரம்** (ஜீ தென்னாசிய இணைப்பாளர் RSS),
**இல. கணேசன்** (தமிழ்நாட்டு VJP தலைவர்) **செல்லையா இராசையா**



**தமிழிசை சவுந்தரராஜன் N. அருண்காந்த்** (இந்து சம்மேளனத் தலைவர்)
**செல்லையா இராசையா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புஷ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளர் உள்ளத்திலிருந்து....

சுவாமி விவேகானந்தரை மானசீகக் குருவாகவும், சுவாமி விபுலாநந்தரை உப மானசீக குருவாகவும், பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சரை சற்குருவாகவும் வணங்கி வரும் நான் சுவாமி விபுலாநந்தரின் சிலை அமைப்புப் பற்றி ஒரு சில வரிகளை இச் செய்தியூடாகப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1974 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காரைதீவு முச்சந்தியில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் அரையுருவச் சிலை ஒன்று நிறுவப்பட்டிருந்தது பின்னர் அச்சிலை சில விஷமிகளால் சேதமாக்கப்படடிருந்தது. அக்காலப்பகுதியில் நான் அப்போது கிராமாட்சி மன்றத் தலைவராக இருந்த டாக்டர் மா.பரசுராமன் அவர்களிடமிருந்து ஒரு அரை உருவச் சிலையைப் பெற்று மல்வத்தை விபுலாநந்தா சனசமூக நிலையத்தின் உதவியுடன் சனசமூக நிலையத்திற்கு அருகில் நிறுவினேன். அச் சிலை தற்பொழுதும் அவ்விடத்தில் காட்சியளிக்கின்றது.

காரைதீவு மண்ணிலே பிறந்து இந்த மண்ணுக்குப் பெருமை தேடித் தந்த பெருமகன் உலகம் போற்றும் உத்தம துறவி யாழ் நூலையும், மதங்க சூளாமணியையும் எமக்களித்த பெருந்தகை இவ்வாறு தமிழுக்கும் சமூகத்திற்கும் நற்பணி செய்த சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கு காரைதீவு முச்சந்தியில் இந்த மண்ணில் பிறந்தவர்களாலே சிலை அமைக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் என் அடிமனதிலிருந்து இயல்பாகவே எழுந்ததன் காரணமாக அதற்கான முயற்சிகளில் நான் இறங்கினேன். அமைப்பு ரீதியாக இதனை மேற்கொள்ளும் எண்ணத்துடன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பு மூலம் பிரதேச சபையிடமிருந்து இதற்கான அனுமதி பெறப்பட்டது. இதன்படி 12 அடி உயரமான சிலை செய்வதற்கான முற்பணம் செலுத்தப்பட்டு சிலை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. இதை அறிந்த விஷமிகள் சிலர் இதைக் குழப்புவதற்கும் தடுப்பதற்குமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மூலமாக அவ்விடத்தில் அரைச்சிலை வைப்பதற்கான பிரயத்தனத்தில் இறங்கியிருந்ததுடன் அதற்கான அனுமதியினையும் பிரதேச சபையிடம் கோரியிருந்தனர் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டிருந்த காரணத்தால் முச்சந்தி வளைவைத் தவிர்த்து ஏனைய பொருத்தமான இடமொன்றில் விரும்பினால் சிலையை நிறுவுமாறு பிரதேச சபையினால் அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. இருந்தும் வேறு இடத்தில் அவர்கள் சிலையை நிறுவ விரும்பவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலை அமைத்து முடிக்கப்பட்ட பின் எமது அமைப்பு காரைதீவு முச்சந்தி வளைவில் இந்து ஆலயக் குருக்களைக் கொண்டு பூமி பூஜை செய்ததுடன் ஏனைய வேலைகளையும் ஆரம்பிக்கத் தொடங்கியபோது பிற சமூகம் சார்ந்த சிலரும் அரசியல்வாதிகள் சிலரும் பின்னணியில் நின்று இதைத் தடுப்பதற்கு மேற்கொண்ட முயற்சியினால் அதிலும் பின்னடைவு ஏற்பட்டது பாதுகாப்புத் தரப்பினராலும் புலனாய்வுப் பிரிவினராலும் முறையான அனுமதி பெற்றபின் வேலைகளை ஆரம்பிக்குமாறு ஆலோசனை கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சிடமிருந்து இதற்கான அனுமதியைப் பெறும்பொருட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது அனுமதி பெறும் விடயத்தில் அகில இலங்கை இந்து சம்மேளனத் தலைவர் திரு.என்.அருண்காந்த் மற்றும் பௌத்த அமைப்புக்கள், சில பௌத்த துறவிகள் அக்கறையோடு செயற்பட்டு எமது செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். அத்துடன் இந்து சம்மேளனத்தின் தேசிய ஆலோசகர் என்ற வகையில் நானும் இந்து சம்மேளனத்தின் தலைவரும் இந்தியா சென்று அமைச்சர்களான பொன் இராதாகிருஷ்ணன், முரளி மனோகரராவ், வி.ஜே.பி. தமிழ்நாட்டுத் தலைவர் இல. கணேசன், திருமதி. தமிழினி சௌந்தரராஜன் ஆகியோரின் கவனத்திற்கு இவ்விடயங்களைக் கொண்டு வந்ததுடன் இந்துக்கள் இந்நாட்டில் படும் துயரங்களையும் தெளிவுபடுத்தியிருந்தோம். அதன் அடிப்படையில் அனுமதிக்கான உதவிகளை அவர்களும் செய்திருந்தார்கள் அவர்களுக்கும் இந்தியா செல்ல ஏற்பாடு செய்து தந்த திரு.இ.ராதாஜி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனுமதி பெறப்பட்டதனை உறுதிப்படுத்தும் ஆவணமான MBRA/2-SAD/10/Con.Gen/2014-H இலக்க 02.12.2014 திகதிய கடிதப் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.

முறையான அனுமதியுடன் மீண்டும் அத்திவார வேலைகளைத் தொடங்கியபோது கல்முனை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருந்தனர் அதன்படி பொலிசார் எம்மை அழைத்து விசாரித்தனர் நாம் உரிய அனுமதியைக் காட்டியதும் அவர்கள் வேலையை ஆரம்பிக்குமாறு கூறி எங்களை அனுப்பிவைத்தனர். மீண்டும் நாங்கள் வேலையை ஆரம்பித்தோம் எமது அமைப்புடன் இந்து சமய விருத்திச் சங்கம், ஏனைய அமைப்புக்கள், சமூக மற்றும் சமய ஆர்வலர்கள் எனப் பலரும் இணைந்துகொண்டனர். அத்திவாரம் தோண்டுவதற்கு பிரதேச சபையின் கவுண்டி இயந்திரத்தை தந்துதவுமாறு முன்னைய தவிசாளர் திரு.வை.கோபிகாந்த் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும் சிலை அமைப்பதில் அவர் கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக அதனைத் தர மறுத்ததுடன் வெளிநாட்டில் வசிப்போரின் உதவியுடன், தான் இதை அமைக்கவிருந்ததாகவும் கூறியிருந்தார் பின்னர் வாடகைக்கு இயந்திரம் பெறப்பட்டு வேலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டன. அத்திவார வேலைகள் முடிவுற்று சிலையும் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது மழைகாரணமாக வேலைகளைத் தொடர்ச்சியாகச் செய்ய முடியாத தாமத நிலையும் ஏற்பட்டது.

வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளைகளில் இடையிடையே பொலிசார் வந்து அனுமதி இருக்கிறதா என அதட்டிவிட்டுச் செல்லும் நிலையும் இருந்தது.

இவ்வாறு இந்தச் சிலை நிறுவுவதில் இருந்து வந்த தடைகளென்றால் ஏராளம் ஏராளம். அத்தனை தடைகளையும் தாண்டி இன்று எல்லோரும் பெருமைப்பட்டுப் பேசுமளவிற்கு எமது கிராமத்தின் மையப்பகுதியான விபுலாநந்த சதுக்கத்தில் முத்தமிழ் வித்தகனின் சிலை கம்பீரமாக நிற்பதையிட்டு நான் இக்கிராம மக்களுடன் சேர்ந்து மிகவும் மனநிறைவடைகிறேன். அதனை அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் குறிப்பாக இரவு பகல் பாராது அமைப்பு வேலைகளில் ஈடுபட்ட இந்து சமய அபிவிருத்திச் சங்கச் செயலாளர், தலைவர் ஆகியோருக்கும் நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு எங்களுக்கு அடிக்கடி இடையூறுகளைத் தந்து நாங்கள் விரைவாகச் செயற்படுவதற்கு மறைமுகமாக ஊக்கம் தந்து செயற்பட்டவர்களுக்கும் நான் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். சொந்த முயற்சியில் என்ன செய்தோம் என நினைத்து செயற்படுவதை விட்டு முயற்சி செய்வோருக்கும் இடையூறு செய்வதுதான் சிலருக்கு கைவந்த கலையாக உள்ளது. கதைபேசுவதும் விமர்சிப்பதும்தான் இலகுவானது. செய்து முடிப்பதும் செயல் வடிவம் கொடுப்பதும் மிகவும் கஷ்டமானது என எல்லோரும் உணர்ந்தால் அதுவே மனிதத் தன்மைக்கு ஒப்பான நற்காரியமாகும்

**செல்லையா இராசையா.**
பிரதேச சபை முன்னைநாள் தவிசாளரும்,
நிறைவேற்றுப் பணிப்பாளரும்,
புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலை அமைப்பும், அமைப்பின் செய்பாடும்

இ. நிரஞ்சலா - ஆசிரியர்
புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பு
விளையாட்டு மற்றும் கல்வி சம்பந்தமான ஆலோசகர்

காரைதீவு புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பினுடைய விளையாட்டு, கல்வி ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கான ஆலோசனைகளையும் இலவச பயிற்சிகளையும் செய்து வருகின்ற அமைப்பின் செயற்குழு உறுப்பினராக செயற்பட்டு வரும் நான், காலத்தின் முக்கிய தேவை எனக் கருதக்கூடிய சுவாமி விபுலாநந்தரின் திருவுருவச்சிலையை அவர் பிறந்த மண்ணிலே எமது அமைப்பானது முன்னெடுத்து நிறுவியதை நினைந்து காரைதீவு மக்களில் ஒருவராக இருந்து மிகவும் பெருமையடைகின்றேன்.

இது வீண் விரயமான செயல் என சிலர் நினைக்கலாம் ஆனால், இச்சிலை நிறுவும் திட்டம் இந்து சமயத்திற்கும், எமது மொழிக்கும் செய்யும் பெரும் கைங்கரியமாக நான் கருதுகின்றேன்.

உலக இந்து சமயத்துறவிகளுள் ஈண்டு குறிப்பிடத்தக்கவர்களின் வரிசையிலும், தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விளங்கியவர்களிலும் ஈண்டு குறிப்பிடத்தக்கவர் சுவாமி விபுலாநந்தர் என்பது நான் சொல்ல தேவையில்லை ஏனெனில் இது உலகம் அறிந்த உண்மையாகும்.

அன்னாருக்கு இதுவரை நான் அறிந்த வரையில் 12 அடி உயர உருவச்சிலை நிறுவப்பட்டது அவர் பிறந்த மண்ணான காரைதீவில் தான் என்பதில் எந்தவொரு ஐயப்பாடும் இல்லை. இச்சிலை நிறுவப்பட்டதை எண்ணி இந்த ஊரில் பிறந்த ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டியதும், நிறுவியவர்களைப் பாராட்ட வேண்டியதுமான ஒரு தருணம் இதுவாகும்.

இது தவிர, எமது அமைப்பினால் பெண்களின் கல்வி, விளையாட்டு முன்னேற்றத்திற்காகவும் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் இவ்வமைப்பினால் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளுக்கான மத்தியஸ்தம் மற்றும் மேம்படுத்தல்களும் விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. மற்றும் கல்விசார் கற்றல் உபகரணங்கள், மாவட்டத்தில் பின்தங்கிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு இருப்பதுடன் க.பொ.த. சா.த பரீட்சைகளில் அதீத திறமைச் சித்தி பெற்ற மாணவர்களை பாராட்டி ஊக்குவிப்பும் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் மாதர் அணிக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக்கள் உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காரைதீவு மண்ணிலே பிறந்து தமிழையும் தமிழிசையையும் வளர்த்து அவற்றின் பெருமைகளை உலகறிய வைத்ததுடன் சமயத்திற்கும் பெரும் பணியாற்றி பரந்த நோக்குடன் பல கல்வி சாலைகளை நிறுவி உதவிய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் அவர்களுக்கு அவர் பிறந்த ஊரின் முச்சந்தியில் இச்சிலையை நிறுவிய புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பிற்கும், அமைப்பின் உறுப்பினர்களுக்கும், இச்செயற்பாட்டில் உதவிய ஏனைய அனைவருக்கும் எனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ்வமைப்பின் அங்கத்தவர்களுள் நானும் ஒருவர் என நினைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வமைப்பின் பணிகள் மென்னேலும் முன்னேற்றமடைய எல்லாம் வல்ல இறைவனை துணைநிற்க வேண்டி எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ.நிரஞ்சலா** - ஆசிரியர்
புஸ்பா பொருளாதார, கல்வி, சமூக அபிவிருத்தி அமைப்பு
விளையாட்டு மற்றும் கல்வி சம்பந்தமான ஆலோசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விபுலாநந்தரின் தமிழ்த் தொண்டு

ஈழ நாட்டில் தமிழ் மொழிக்கு ஆக்கம் தந்த பெரியோர் மிகச் சிலரே உள்ளனர். அவர் தம்முள் ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, சுவாமி விபுலாநந்தர் வித்துவான், சி.கணேசையர், குமாரசாமிப்புலவர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். அவருள்ளும் நாவலருக்குப் பின்னரே ஈழநாட்டிலும், தமிழ் நாட்டிலும் சமயம், தமிழ் என்பவற்றால் அருந்தொண்டாற்றிய பெருமை விபுலாநந்த அடிகளுக்கே உரியது.

தொண்டு என்பதற்கு பணி எனவும் பொருளுண்டு. "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனச் சரியைத் தொண்டு பல செய்த நாவுக்கரசர் அடிக்கடி குறிப்பிட்டமையாலும் இதனை உணரலாம். பண்புடனும் பணிவுடனும் அதாவது அடக்கமுடைமையுடனும் செய்வது பணி.

> ''காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
> அதனினு உங்கில்லை உயிர்க்கு'' (குறள் : 122)

என்பதற்கேற்ப அடங்கிப் பணி புரிதல் உயிருக்கு ஆக்கம் தருவதொன்றாகும். தனக்கென மட்டும் வாழாது பிறர்க்கெனவும் வாழ வேண்டுமென எண்ணம் கொண்டு ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றும் தாயுமானவர் வாய்மொழிக்கேற்ப உயர்ந்த எண்ணத்தைச் சிந்தையில் வைத்துத் தான் பிறந்த சமூகத்திற்கேற்ப கைக்கொண்டொழுகும் சமயத்திற்காகத் தனது தாய்மொழியில் பெருமைக்காக அரும்பாடுபட்ட வரலாற்றுப் பின்னணியும் வளமாகக் கொண்டவர் விபுலாநந்த அடிகளார்.

தமிழ் மொழியியல், இசை, நாடகம் என முப்பிரிவினைக் கொண்டது. அடிகளார் தமிழ்மொழி மீது கொண்ட தணியாத காதலால் முத்தமிழ் வளரத் தொண்டாற்றினார். இயற்றமிழ் வளர, இசைத்தமிழ் வழங்க, நாடகத் தமிழ் வளமுற தன்னாலானவரை தமிழ்ப் பணியினை சிரமேற்கொண்டு இம்மண்ணில் இருந்து மறையும் வரை தனது வாழ்க்கையின் முடிவு வரை தமிழ்ப் பணி புரிந்தவர் அடிகளார்.

1947ம் ஆண்டு ஆனித் திங்கள் 5ம், 6ம் நாட்களில் திருக்கொள்ளம் புத்தூரில் கரைந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் ''யாழ் நூலினை'' அரங்கேற்றம் செய்து வைத்த வேளையிலும் கூட அடிகளார் உடற்பிணியால் சோர்வுற்றிருந்தார். அவ்வேளையிலும் அவரின் உடல் சோர்ந்திருந்ததே தவிர உளம் சோரவில்லை. தாய் மொழி மீது கொண்ட பற்றினால் அம்மொழியில் இடையறாத வளர்ச்சியினையே தனது இலட்சியமாகக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆறுமுகநாவலரைப் போலவே அடிகளார் தமிழ்ப் பணி, சமயப் பணி, சமூகப் பணி ஆற்றியவர் ஆவார். முப்பணிகளிருந்தும் முதன்மைப் பணியாகத் தமிழ்ப் பணி செய்வதையே தாகமாகக் கொண்டிருந்தார்.

சுவாமிகள் கொழும்பு மாநகரிலேயே ஆசிரியப் பயிற்சி பெற்ற வேளையிலும் கூட தமிழைச் செவ்வனே கற்பதில் அக்கறை காட்டினார். எந்தவொரு துறையிலும் தொண்டு செய்ய முனைபவர்கள் அந்தந்தத் துறையில் அறிவு, அனுபவம் பெற்றிருத்தல் அவசியம். அதற்கு ஏற்ப ஆசிரியப் பயிற்சி பெற்ற காலத்திலிருந்தே கல்லூரி ''நூல்'' நிலையத்திலிருந்தே தமிழ் நூல்களைப் பெற்று வாசித்து வந்துள்ளார். அத்துடன் அக்காலத்திலிருந்தே அங்கு தமிழ் விரிவுரையாளராகக் கடமை புரிந்து வந்த தென்கோவை கந்தையா பிள்ளையிடம் சிந்தாமணி முதலிய நூல்களைப் பாடம் கேட்டு வந்துள்ளார். சிந்தாமணியில் சுவாமிஜி அவர்கட்கு நிறைந்த ஆட்சி இருந்தது.

சாதாரணமாக உரையாடும்போது கூடச் சிந்தாமணிச் செய்யுள்களைப் பாடிக்காட்டிப் பொருளும் கூறுவார். தமிழ் இலக்கண நூல்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, ஐம்பெரும் காப்பியம், ஐஞ்சிறும் காப்பியம், நைடதம், காசி காண்டம் போன்ற இலக்கிய நூல்கள் பன்னிரு திருமுறைகள், பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்கள் முதலான சமய சாஸ்திர நூல்கள், கந்தபுராணம், பெரியபுராணம் ஆகிய புராண நூல்கள் பாரதம், இராமாயணம் போன்ற இதிகாச நூல்கள் என்பவை தொடக்கம் பாரதி பாடல் வரை நன்கு படித்து அவற்றில் ஆட்சியும் பெற்றிருந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம் பண்டித பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்தி மற்றையோரும் அவர் வழி தொடர வழிகாட்டினார். சிறு வயதிலேயே தந்தையார் காட்டியபடி நின்று பெரியபுராண வசனம், பஞ்சதந்திரம், வினோத மஞ்சரி, வில்லிபாரதம் என்பவற்றையும் கற்றுத் தேர்ந்தார்.

மையிலாம்பூரில் மடத்தில் இருந்த காலத்தில் இராம கிருஷ்ண சங்கம் நடாத்தி வந்த ''இராமகிருஷ்ண விஜயம்'' எனும் தமிழ்ச் சஞ்சிகையில் ஆசிரியராக இருந்து இயற்றமிழ் வரை பல அரிய பெரிய கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். அவர் எழுதிய கட்டுரைகளால் தமிழ்மொழி சிறப்புப் பெற்றது. அருள் செல்வநாயகம் அவர்கள் வெளியிட்ட "விபுலாநந்த வெள்ளம்", "விபுலாநந்த ஆராய்வு", "விபுலாநந்த தேன்" போன்ற நூல்களிலே அவர் எழுதிய கட்டுரைகள் வெளிவந்துள்ளதை நாம் அறிவோம்.

சிலப்பதிகார நூலினைக் கற்றுத் தேர்ந்து அந்நூலில் வரும் அரங்கேற்றுக் காதையை ஒட்டிய மாதவி அரங்கேற்றம், குன்றக்குமரன், ஆய்ச்சியார் குரவை, கானல்வரி, ஆதியம் பகுதிகளை நுணுகிப் படித்து ஆராய்ந்து அழியாப் புகழ் பெறும் ''யாழ் நூல்'' என்னும் இசை நூலினை எழுதி வெளியிட்டார். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைத்தமிழ் வளர வழியேற்பட்டது. ஸேக்ஸ்பியரின் நாடகங்களைப் படித்துச் சுவைத்து ''மதங்க சூளாமணி'' என்னும் நாடக நூலினை எழுதி தமிழ் நாடக மரபினை மக்கள் அறிய வழிசமைத்தார்.

இராமகிருஷ்ண சங்கம் நடாத்திய மற்றொரு சஞ்சிகையான ''பிரபுத்த பாரதம்'' எனும் சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்த காலத்தில் தமிழிலுள்ள அரிய பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுத் தமிழ் மொழியின் சிறப்பினை வெளிக்கொணர்ந்தார். சுதந்திரத் தாகங்கொண்டு பாரதி பாடிய பாடல்களிலேயே உள்ள சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டி அவற்றினை ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் ஆர்வம் காட்டினார்.

தமிழ் நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் நமது ஈழ நாட்டிலே இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ்த்துறைப் போராசிரியராக இருந்து தமிழ் வளர்ச்சிக்காக பல திட்டங்களை வகுத்துத் தமிழ்ப் பணி செய்து வந்துள்ளார். தாம் ஆங்கில நூல்களில் ஆங்கிலமொழி மூலம் கற்றறிந்த பூதநூல், வேதிநூல், ஆதியாம் நூல்களிலே உள்ள நுண்பொருள்களை கற்றறிந்தோரும் கல்லாதோரும் இலகுவில் படித்தறியக் கூடிய வகையில் தூய தமிழிலேயே எடுத்து விளக்கிக் கட்டுரைகள் பல வரைந்துள்ளார். ''பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்னும் பாரதியின் கனவினை நிறைவேற்றிய பெருமையும் அடிகளாருக்கு உண்டு.

புத்தம் புதிய நூல்கள் பலவற்றைத் தமிழ்மொழியில் எழுத வேண்டுமென்ற ஆர்வத்தினை தமிழ் மொழி மேலோங்க வேண்டும். அதற்காக உழைக்க வேண்டுமென்ற பேருணர்ச்சியை மக்களிடையே வளர்த்திடத் துடித்தார். தன்னை நாடி வந்த அனைவரிடமிருந்தும் தமிழ்த் தொண்டில் ஈடுபடவேண்டுமென்ற உணர்ச்சியை ஊட்டினார். 1934ம் ஆண்டிலே சென்னைப் பட்டிணத்திலே பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திலே அறிஞர்கள் பல கூடிய மகாநாட்டிலே தமிழில் கலைச்சொல் அகராதி ஒன்று ஆக்க வேண்டுமென்ற உணர்வு பிறந்தது. இவ்வகராதியைத் துணைகொண்டே இப்போதும் தமிழ் நாட்டிலே வேதிநூல், பூதநூல், கணிதம், அரசியல் நூல், விஞ்ஞானக் கலை பற்றிய வேறு பல நூல்கள் விரைவாக வளர்ந்து வருகின்றன.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக விபுலாநந்த அடிகளார் ஆற்றிய பணிகளோ அளவிடற்கரியன. யாழ்ப்பாணத்தில் ஆரிய, திராவிட மொழி நிறுவனத்தை உருவாக்கி அதன் முதல் தலைவராகத்தானே இருந்து பிரவேச பண்டித, பால பண்டித, பண்டித வகுப்புக்களை நடாத்திப் பண்டிதர்களை உருவாக்கிய பெருமையும் இவருக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி பெயர்ப்புத் துறையிலும் விபுலாநந்த அடிகள் சிறந்து விளங்கினார். ஸேக்ஷ்பியரின் நாடக கதாபாத்திரங்களுக்குக் கூட பொருத்தமுறு பெயர்களை மொழி பெயர்த்தும் அவரது கவிதை கவிதை நயத்தை எந்தவிதமான பொருள் வேறுபாடும் இல்லாமல் தமிழிலே ஆக்கம் செய்தும் தமிழில் புலமை பெற்றோரும் சுவைக்கும் வகையிலும் தமிழ்ப்பணி புரிந்தார். வித்தகர் விபுலாநந்தர் பூஞ்சோலைக் காவலன், விவேகானந்த ஞான தீபம், நடராஜ வடிவம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை முதலான இயற்றமிழ் நூல்கள் பலவற்றை ஆக்கிய இயற்றமிழ் வளரத் தமிழ்த் தொண்டு செய்தார். வசன நடை கைவந்த வள்ளலாக விளங்கினார். செய்யுள் இயற்றும் திறமையும் இவரிடத்தில் இருந்தது. இதனால் பல தெய்வத் துதிப்பாடல்களையும் இயற்றினார்.

நூலாசிரியராக, உரையாசிரியராக, போதனாசிரியராக, பல்கலைக் கழகங்களின் முத்தமிழ்ப் பெரும் பேராசிரியராகவும் இருந்து தமிழ்ப் பணி புரிந்தார். உடல் தளர்ந்து பிணிவாய்ப்பட்டு நடமாட முடியாமல் சோர்வுற்றிருந்த போதும் தமிழ் மொழி மீது கொண்ட தணியாத தாகத்தினால் தமிழ்த் தொண்டே தனித்தொண்டு என நினைத்து மற்றைய தொண்டுகளை விடத் தமிழ்த் தொண்டிற்கே முதன்மையிடம் கொடுத்து முன்னணியில் நின்ற பெருமையும் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரையே சாரும் என்றால் மிகையாகாது.

**எஸ். சிவராஜா** – ஆசிரியர்.
செயலாளர் – புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு,
காரைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஸ்பா பொருளாதார, கல்வி,சமூக அபிவிருத்தி அமைப்பின் 2016/ 2017 ஆண்டிற்கான நிர்வாக சபை

**ஆலோசகர்**

திரு. எம். குபேரன்

திரு. எஸ். தில்லையம்பலம்

**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

திரு. செல்லையா இராசையா

**தலைவர்**

திரு. கே. நடராஜா

**உபதலைவர்**

திரு. த. செல்லத்துரை

**செயலாளர்**

திரு. எஸ் சிவராஜா

**உப செயலாளர்**

திரு. எஸ். விஜயரெட்ணம்

**பொருளாளர்**

திரு. நடராஜா பதிவரதன்

**உள்ளக கணக்குப் பரிசோதகர்**

திரு. பொ. செந்தூரன்

**நிர்வாக சபை உறுப்பினர்கள்**

1. திரு. நி. நித்தியதர்சன்
2. திரு. ந. பத்மபிரியன்
3. திரு. சி. தெய்வநாயகம்
4. திரு. ந. சுதர்சன்
5. திரு. செ. பொன்னுத்துரை
6. திரு. சி. தங்கவேல்
7. திருமதி. வே. பங்கேஸ்வரி
8. திருமதி. பொ. கமலராணி
9. திரு. ஆ. கிருஷ்ணபிள்ளை
10. திரு. த. மோகன்
11. திரு. ஆ. பூபாலரெட்ணம்
12. திருமதி. இ. நிரஞ்சலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவிலல்

இந்நூலை வெளியிட கவிதைகள், ஆய்வுக் கட்டுரைகள், ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள் ஆகிய ஆக்கங்களைத் தந்துதவிய அனைத்துப் பெருந்தகைகளுக்கும் மற்றும் கணணி மயப்படுத்த உதவிய திரு.செல்லத்துரை, கஜேந்திரன் அவர்களுக்கும் புகைப்படம் எடுத்துதவிய திரு.எம்.இராஜகுமாருக்கும் செவ்வை பார்த்துதவிய தமிழ் மொழிப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.கே.வரதராஜன் அவர்களுக்கும் அழகான முறையில் அச்சிட்டு வெளியிட உதவிய கோல்டன் அச்சகத்தாருக்கும், திரு.தி.கிரிநிவாசன் அவர்களுக்கும் எமது அமைப்பின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி
# விபுலாநந்த அடிகளாரின்
# சிலை திறப்பு விழா.
## 8-10-69



பிரதம விருந்தினர்:

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை திறப்பு விழா நிகழ்ச்சி நிரல்.

## 8 - 10 - 69

நேரம்: மாலை 3 மணி

இடம்: கிராமாட்சி மன்றப் பணிமனை வளவு

துதிப்பாடல்— ஆர். குழந்தைவேல் அவர்கள்

சிலை திறப்பு—

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்**

பேச்சு—

சுவாமி ஜீவனானந்தா அவர்கள்
திரு. அருள் செல்வநாயகம் அவர்கள்
திரு. க. ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள்
திரு. பு. சுந்தரம்பிள்ளை ஆசிரியர் அவர்கள்
டாக்டர் வே. பஞ்சாட்சரம் அவர்கள்
திரு. சி. மு. இராசமாணிக்கம் B. A. (Econ.) அவர்கள் (பா. உ. பட்டிருப்பு)
திரு. K. W. தேவநாயகம் அவர்கள் (பா. உ. கல்குடா)
திரு. தேவநேசன் நேசையா அவர்கள் (அரசாங்க அதிபர் - மட்டக்களப்பு)
ஜனாப். எம். எம். முஸ்தபா அவர்கள் (பா. உ. நிந்தவூர்)
ஜனாப். எம். ஏ. மஜீத் B. A. அவர்கள் (பா. உ. பொத்துவில்)
திரு. கு. தர்மரெத்தினம் M. A. (Cantab) அவர்கள்

நன்றியுரை.

## மலர் வெளியீடு — அடிகளார் படிவ மலர்

நேரம்: மாலை 5 மணி

இடம்: ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வளவு

தலைமை—

**டாக்டர் மா. பரசுராமன் அவர்கள்** (மலர்க் குழுத் தலைவர்)

அறிமுகம்— திரு. ம. சற்குணம் B. A. (Hons.) அவர்கள் (மலர் ஆசிரியர்)

ஆய்வுரை— வித்துவான் F. X. C. நடராசா அவர்கள் (மொழி பெயர்ப்புத் திணைக்களத் தலைவர்)

பிரதி வாங்குபவர்கள்—

திருமதி. தம்பிப்பிள்ளை அவர்கள்
திரு. கே. வி. எம். சுப்பிரமணியம் (புரக்டர்) அவர்கள்
திரு. பொ. செல்லத்துரை அவர்கள் (தர்மகர்த்தா - காரைதீவு கண்ணகை அம்மன் கோவில்)

நன்றியுரை.

## சிற்பி கௌரவிக்கப்படுதல்

மாலை 7-30 மணி

தலைமை—

**டாக்டர் மா. பரசுராமன் அவர்கள்** (தலைவர் - கிராமாட்சி மன்றம்)

பேச்சு— சிற்பி புல்லுமலை நல்லரெத்தினம் அவர்கள்

சிறப்புப் பேச்சு— வித்துவான் க. வெள்ளைவாரணன் அவர்கள்

இசை விருந்து— சங்கீதபூஷணம் க. கணபதிப்பிள்ளை அவர்கள்

பக்கவாத்தியம்— வயலின்: திரு. செ. சிவஞானம் அவர்கள்
மிருதங்கம்: திரு. க. வேல்முருகு அவர்கள்

நன்றியுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் விழா நிகழ்ச்சி நிரல்.

**9-10-69 — 10-10-69**

## 9-10-69

## பொருட்காட்சி

நேரம்: காலை 9 மணி

இடம்: விபுலாநந்த மத்திய நூலகம்

திறந்து வைப்பவர்—

மூதவை உறுப்பினர் **மு. திருச்செல்வம் Q. C. அவர்கள்**

(முன்னைநாள் உள்ளூராட்சி அமைச்ச

## உரையரங்கு (சாமித்தம்பியார் அரங்கு)

நேரம்: மாலை 2 மணி

இடம்: ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வளவு

தலைமை உரை—

**புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்**

சொற்பெருக்கு—

பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் (பா. உ. கிளிநொச்சி)
கலாநிதி க. வித்தியானந்தன் அவர்கள்
ஜனாப் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள்
கலாநிதி சு. கைலாசபதி அவர்கள்
வித்துவான் F. X. C. நடராசா அவர்கள்
வித்துவான் க. செபரெத்தினம் B. A. அவர்கள்
கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்கள்
திரு. கை. கணபதிப்பிள்ளை F. R. G. S. அவர்கள்
திரு. அருள் தியாகராசா அவர்கள்
தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை அவர்கள்
வித்துவான் வி. சீ. கந்தையா B. O. L. அவர்கள்
திரு. ச. அம்பிகைபாகன் B. A. அவர்கள்
திரு. செ. இராசதுரை அவர்கள் (பா. உ. மட்டக்களப்பு)
பண்டிதர் வி. சீ. செல்லத்துரை அவர்கள்
திரு. க. நவசோதி B. A. (Hons.) அவர்கள்

நன்றியுரை.

நேரம்: மாலை 7 மணி

பேச்சு— (நடைக்கலை) சங்கீதபூஷணம் எம். கைலாயபிள்ளை அவர்கள்
நடனம்— கலைச்செல்வி கே. எஸ். சொர்ணலதா
கதாப்பிரசங்கம்— திரு. ஆர். வடிவேல் அவர்கள்
பாட்டு— சங்கீதபூஷணம் என். இராஜு கோஷ்டி
பாட்டு— திரு. ஏ. பி. விவேகானந்தராசா அவர்கள்
நாடகம்— கலைமகள் சனசமூக நிலையத்தினர்
இசைக் கச்சேரி— கதிரவன் இசைக் குழு.

நன்றியுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10-10-69**

## மாதர் நிகழ்ச்சி (கண்ணம்மையார் அரங்கு)

நேரம்: காலை 9 மணி

இடம்: ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வளவு

தலைமையுரை—

திருமதி. காலபூஷணி திருநாவுக்கரசு அவர்கள்

பேச்சு—

சைவப்புலவர் - பண்டிதை - செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
திருமதி. சி. இராமச்சந்திரன் அவர்கள்
திருமதி. கங்கேஸ்வரி கந்தையா அவர்கள்
திருமதி. பத்மாவதி பொன்னம்பலம் அவர்கள்

நன்றியுரை.

## கவியரங்கு (சுவாமி நடராசானந்தா அரங்கு)

நேரம்: மாலை 2 மணி

இடம்: ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வளவு

தலைமை—

திரு க. செ. நடராசா M. A. அவர்கள்
(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சி அதிகாரி

கவிஞர்கள்—

திமிலைத்துமிலன் —"நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்"
காசி. ஆனந்தன் —"நாடக நிபுணன்"
வை. அ. கைலாசநாதன் —"இலக்கிய மேதை"
ஆ. மு. ஷரிபுத்தீன் —"சமரச சன்மார்க்க வாதி"
நீலாவணன் —"இசை வல்லுநன்"

நன்றியுரை.

## நாடக அரங்கு (வித்துவான் சரவணமுத்தன் அரங்கு)

நேரம்: மாலை 5 மணி

இடம்: ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வளவு

நடனம்— மட்டக்களப்பு கலைக்கோவில்
நாட்டுக் கூத்து— "பாஞ்சாலி சபதம்"

நன்றியுரை.

ஆனந்தா அச்சகம், பிரதான வீதி, கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு
# PUSPA ECONOMICS EDUCATION SOCIO DEVELOPMENT ORGANIZATION
# පුෂ්පා ආර්ථික අධ්‍යාපන සමාජ සංවර්ධන ආයතනය


Vishnu Vid[illegible]ya Road,
Division No - 7,
Karaitivu,
Amparai,
Srilanka.
Tel / Fax : 067 2251319
Email : peesdo@gmail.com


Executive Director
Mr. S. Rasiah

Chairman
Mr. S. Thillai[illegible]palam

Vice Chairman
Mr. T. Sellathurai

Secretary
Mr. S. Sivarajah

Vice Secretary
Mr. N. Nithyatharsan

Treasurer
Mr. N. Sutharshan

Internal Audit
Mr. K. Satheeskumar

Committe Members
Mr. K. Nadarajah
Mr. S. Theivanayagam
Mr. S. Ponnuthurai
Mrs. V. Pankeswary
Mrs. P. Kamalarani
Mr. A. Krishnapillai
Mr. T. Mohan

Date: 15.05.2012

தவிசாளர்,
பிரதேச சபை,
காரைதீவு.

**காரைதீவு பிரதான வீதி முச்சந்தி வளைவில்**
**விபுலாநந்தர் சிலை நிறுவுவதற்கான அனுமதி கோரல்**

காரைதீவு பிரதான வீதி முச்சந்தி வளைவில் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் சிலை [illegible] நிறுவவேண்டுமென்று இக்கிராம மக்களால் [illegible] மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது ஸ்தாபனங்கள் போன்றவற்றிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தபோதிலும் அது இதுவரை நிறைவேறாத காரணத்தால் எமது அமைப்பானது 12 அடி உயரமான சுவாமி விபுலாநந்த அடிகளாரின் சிலையினை நிறுவி இக்கிராம மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருப்பதால் இதற்கான அனுமதியினை தந்துதவுமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்
Chairman
PEESDO
Karaitivu

உபசெயலாளர்
Secretary
PEESDO
KARAITIVU




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சபை - காரைதீவு
ප්‍රාදේශීය සභාව - කාරතිවු
**PRADESHIYA SABHA – KARAITIVU**
T.P – 0673673369 Fax – 0672251396

20.05.2012.

தலைவர்,
புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு,
காரைதீவு.

<u>காரைதீவு பிரதான வீதி முச்சந்தி வளைவில் விபுலாநந்தர் சிலை நிறுவுவதற்கான அனுமதி</u>

மேற்குறித்த விடயமாக தங்களினால் 15.05.2012 திகதியிடப்பட்டு எனக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக காரைதீவு முச்சந்தி வளைவில் சிலை அமைப்பதற்கான அனுமதி இத்தால் வழங்கப்படுகிறது.

சிலை நிறுவும்போது எமது ஆலோசனைகளுக்கு அமைவாக நிறுவுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

தவிசாளர்

**SELLIAH RASIAH**
Chairmen
Pradeshiya Sabha
Karaitivu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு
PUSPA ECONOMICS EDUCATION SOCIO DEVELOPMENT ORGANIZATION
පුෂ්පා ආර්ථික අධ්‍යාපන සමාජ සංවර්ධන ආයතනය

Vishnu Vidyalaya Road,
Division No - 7,
Karaitivu,
Amparai,
Srilanka.
Tel / Fax : 067 2251319
Email : peesdo@gmail.com

Executive Director
Mr. S. Rasiah

Chairman
Mr. S. Thillaiyampalam

Vice Chairman
Mr. T. Sellathurai

Secretary
Mr. S. Sivarajah

Vice Secretary
Mr. N. Nithyatharsan

Treasurer
Mr. N. Sutharshan

Internal Audit
Mr. K. Satheeskumar

Committe Members
Mr. K. Nadarajah
Mr. S. Theivanayagam
Mr. S. Ponnuthurai
Mrs. V. Pankeswary
Mrs. P. Kamalarani
Mr. A. Krishnapillai
Mr. T. Mohan

Date:.................

27.06.2014

அரசாங்க அதிபர்,
கச்சேரி,
அம்பாறை.

ஐயா !

விடயம் : முன்பு காரைதீவுச் சந்தியில் இருந்த சுவாமி விபுலாநந்த அடிகளாரின் சிலையை மீண்டும் நிறுவுதல்

காரைதீவு மக்களின் வேண்டுகோளுக்கிணங்க காரைதீவு முச்சந்தியில் பல ஆண்டுகளாக இருந்து வந்த அரை உருவச் சிலை முன்பு காணாமல் போனது. அதன் பின் மக்கள் பல அரசியல் வாதிகளிடமும் பொது அமைப்புக்களிடமும் கோரிக்கை விடுத்தும் அது நிறைவேற்றப்படாமல் இருந்தது. எமது அமைப்பு 15.05.2012 இல் பிரதேச சபைத் தவிசாளரிடம் சிலையை அமைக்க அனுமதி கோரப்பட்டு அவரின் அனுமதி எமக்குக் கிடைத்த பின்பு சிலையைச் செய்து தற்பொழுது முடிவடைந்துள்ளது.

இதனை நிறுவுவதற்கான பூமிப் பூசை 26.06.2014 ஆம் திகதி பி.ப.6.00 மணிக்கு காரைதீவு முச்சந்தியில் நடைபெற்றது அப்பொழுது காரைதீவுக்குப் பொறுப்பாயுள்ள ஆமி உத்தியோகத்தர் இதை நிறுவுவதை நிறுத்திவிட்டு அரசாங்க அதிபரின் அனுமதியைப் பெற்றுச் செய்யுமாறு கூறியுள்ளார்.

எனவே, அதற்கு அனுமதி வழங்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

தலைவர் — Chairman PEESDO KARAITIVU

செயலாளர் — Secretary PEESDO KARAITIVU

பிரதிகள் : 1. பிரதேச செயலாளர்,காரைதீவு – உரிய நடவடிக்கைக்காக
2. தவிசாளர்,பிரதேச சபை, காரைதீவு – தகவலுக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ප්‍රාදේශීය මහලේකම් කාර්යාලය - කාරතිවු
பிரதேச செயலகம் - காரைதீவு
**DIVSIONAL SECRETARIAT - KARAITIVU**

My No: DS/KT/Spl.rep/2014 | Your No: | Date: 27.06.2014

The Chairman

Pradeshya saba

**<u>Reestablishing of Srimath Vipulananda Statue in the Karaitivu Roundabout.</u>**

The roundabout situated at the Akkaraipattu-Kalmunai-Ampara junction was handed over to the Pradeshya Saba, Karaitivu in 2012 after the road renovation is completed. At that time initiative were started by the Pradeshya saba ,Karaitivu to renovate the roundabout in a way to express the cultural values of the area.

This renovation was repeatedly arisen in the DCC meeting and a sum of Rs.1.5mn too allocated by the Hon.Parliamentarian cum Divisional Cordinating committee chairman of Karaitivu under dayatakirula programme. Unfortunately it was not undertaken due to make suitable design in a stipulated period. Also the Pradeshya saba informed that initiatives are taken on their part.Finally the particular allocation was transferred to some other projects which had more priority than the is project.

As per the initiatives, this work was awarded to a local voluntary organization called ***Pushpa Economics Education socio development organization*** registered under the Department of social services and operating in the area. The organization has obtained formal approval from the Chairman of the Pradeshya Saba(then).


Divisional Secretary
067-2222036 (office)
067-2220151 (Residence)

Assistant Divisional Secretary
067-2220591 (office)
067-3696158 (Residence)

Accountant
067-2222035

Assistant Planning Director
067-3671420

Administrative Officer
067-2229591

067-2220591

Fax 067-2222036





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

They have proposed to reestablish the statue of Swami Vipulananda who is well known scholar of the world born in Karaitivu. As a tradition, the boomi pooja (Prayer to god of Earth) was organized on 26.06.2014 by 6.00 pm. But army personnel requested the particular society to sort the approval of Government Agent in order sort out unnecessary issues.

I hereby recommend giving approval for the construction because it is a long term request of the people to reestablish this statute please

Divisional Secretary

Karaitivu

Copy to:

Chairman ,Pradeshya Saba- Karaitivu

Chairman , Pushpa Economics Education socio development organization



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு
PUSPA ECONOMICS EDUCATION SOCIO DEVELOPMENT ORGANIZATION
පුෂ්පා ආර්ථික අධ්‍යාපන සමාජ සංවර්ධන ආයතනය
DS/KT/SS/V/2010/36

Vishnu Vidyalaya Road,
Division No - 7,
Karaitivu,
Amparai,
Srilanka.
Tel / Fax : 067 2251319
Email : peesdo@gmail.com

Executive Director
Mr. S. Rasiah

Chairman
Mr. S. Thillaiyampalam

Vice Chairman
Mr. T. Sellathurai

Secretary
Mr. S. Sivarajah
Vice Secretary
Mr. N. Nithyatharsan

Treasurer
Mr. N. Sutharshan

Internal Audit
Mr. P. Senthuran
Committe Members
Mr. K. Nadarajah
Mr. S. Theivanayagam
Mr. S. Ponnuthurai
Mrs. V. Pankeswary
Mrs. P. Kamalarani
Mr. A. Krishnapillai
Mr. T. Mohan

Date:.......................

The Director General,
Road Development Authority,
Sethsripaya,
Batteramulla.

**ROUNDABOUT SPACE AT THE MAIN ROAD JUNCTION-PRADESHIYA SABHA KARAITIVU**

The Roundabout space within the junction was handed over to the Pradeshiya Sabha by the Executive Engineer- RDA ,Kalmunai vide reference letter annexed.

After that it was handed to us the Village Committee-named PUSPA ECONOMICS EDUCATION SOCIO DEVELOPMENT ORGANIZATION – KARATVU for the purpose of renovating and decorating that area. One of the items of work is to re-establish the statue of Swami Vipulananda .When we started the construction of statue work, the O.I.C. Army Camp, Karaitivu and the O.I.C. of our Police Station Sammanthurai asked us to stop the work. After the discussion at the Police Station ,we were asked to take permission from the G.A. Amparai. Then the Committee Members and the people met the G.A. Amparai and requested permission to re-establish the Statue. Then the G.A.Amparai instructed us to get permission from the Ministry of Buddha Sasana and Religious Affairs. After that our Society Members tried to get the permission from the Ministry .We filled up the necessary formats certified by the D.S. Karaitivu and annexed all the relevant letters and documents and forwarded to the Ministry of Buddha Sasana and Religious Affairs. After queries we received the approval from the Ministry.(annexed copy of the approval).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு

PUSPA ECONOMICS EDUCATION SOCIO DEVELOPMENT ORGANIZATION

පුෂ්පා ආර්ථික අධ්‍යාපන සමාජ සංවර්ධන ආයතනය

DS/KT/SS/V/2010/36

Vishnu Vidyalaya Road,
Division No - 7,
Karaitivu,
Amparai,
Srilanka.
Tel / Fax : 067 2251319
Email : peesdo@gmail.com

Executive Director
Mr. S. Rasiah

Chairman
Mr. S. Thillaiyampalam

Vice Chairman
Mr. T. Sellathurai

Secretary
Mr. S. Sivarajah

Vice Secretary
Mr. N. Nithyatharsan

Treasurer
Mr. N. Sutharshan

Internal Audit
Mr. P. Senthuran

Committe Members
Mr. K. Nadarajah
Mr. S. Theivanayagam
Mr. S. Ponnuthurai
Mrs. V. Pankeswary
Mrs. P. Kamalarani
Mr. A. Krishnapillai
Mr. T. Mohan

Date:.......................

After getting the permission ,we informed the O.I.C.Police Station, Sammanthurai and the O.I.C. Army Camp, Karaitivu and started the work Now ,the Provincial Director,R.D.A. Akkaraipattu instructed us to get permission from you.

Therefore , we are requesting permission from you explaining the following facts:-

1. The above society with help of the people of Karaitivu is going to re-establish the above stature at the same location and decorate the area by planting flower plants bounded by the iron grills. The round is about 26 ft. Diameter.
2. As per G.A. Amparai's instruction we obtained permission from the Ministry of Buddha Sasana and Religious Affairs.
3. Swamy Vipulananda is rememberd by this statue is a scholar and has reputed internationally for his remarkable service in the development of Education through the Rama Krishna Mission.
4. Also we assure you that whenever if necessary to remove the stature for the purpose of widening the road the society will never say any objection.
5. We ,also assure you that we will decorate and illuminate and maintain the flower plants continuously.
6. The Pradesha Sabha Karaitivu may help us to continue and maintenance procedures.

As such we humbly request you to consider above facts and grant permission to re-establish the roundabout and maintain same.

Thank you,

Chairman
PEESDO
KARAITIVU

Secretary
PEESDO
KARAITIVU



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ප්‍රාදේශීය මහලේකම් කාර්යාලය – කාරතිවු
பிரதேச செயலகம் - காரைதீவு
DIVISIONAL SECRETARIAT – KARAITIVU

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | DS/KT/AO/[illegible]/2014 | |
| ඔබේ අංකය<br>உங்கள் இல<br>Your No | | |
| දිනය<br>திகதி<br>Date | 2014.09.10 | |

செயலாளர்,
புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு.
காரைதீவு - 07

<u>சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை நிறுவுதல் தொடர்பாக</u>

மேற்படி விடயம் சம்பந்தமாக தங்களால் 27.06.2014 ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் சம்பந்தமானது .

அதற்கிணங்க மேலதிக மாவட்ட அரசாங்க அதிபரினால் தங்களுக்கு பிரதியிட்டு எனக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரகாரம் சிலை நிறுவுவதற்கான அனுமதியை புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்திற்கிணங்க விண்ணப்பிப்பதன் மூலம் அனுமதி பெறப்படல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சிலை நிறுவுவதற்கான விண்ணப்பப்படிவமும் சுற்று நிருபமும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால் தாங்கள் அலுவலகத்திற்கு சமூகமளித்து விண்ணப்பப்பத்திரத்தினை பெற்று பூர்த்தி செய்து அதன்படி சிலை நிறுவுவதற்குரிய அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பிரதேச செயலாளர்,
காரைதீவு.

Mrs.NIRUBA BRINTHAN
Assistant Divisional Secretary
Divisional Secretariat
Karaitivu

---------- දුරකථන ---------- தொலைபேசி ---------- Telephone ----------

ප්‍රාදේශීය ලේකම් / பிரதேச செயலகம் / Divisional Secretary – 0672222036 (Office), 067 2220151 (Residence)
සහකාර ප්‍රාදේශීය ලේකම් / உதவி பிரதேச செயலாளர் / Assistant Divisional Secretary – 067 2229591
ගණකාධිකාරී / கணக்காளர் / Accountant – 067 222035
ෆැක්ස් / பெக்ஸ் / Fax – 067 2222
සහකාර සැලසුම් අධ්‍යක්ෂ / உதவி திட்டமிடல் பணிப்பாளர் / Assistant Director of Planning – 0662671420
පරිපාලන නිලධාරී / நிருவாக உத்தியோகத்தர் / Administrative Officer – 067 2229591
ප්‍රධාන කාර්යාලය / பிரதான அலுவலகம் / General Office – 0672229591



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය
மாவட்ட செயலாளர் காரியாலயம்
DISTRICT SECRETARIAT

අම්පාර
அம்பாறை
AMPARA

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දිසාපති / அரசாங்க அதிபர் / Government Agent | 063-2222206 | අතිරේක දිසාපති / மேலதிக அரசாங்க அதிபர் / Addl.Gover Agent | 063-2223553 | පොදු / பொது / General | 063-2222233 / 063-2222234 | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 063-2222130 / 063-2222236 |

මගේ අංකය / எனது இல / My No: ADM/CORD/04/

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / Date / திகதி: 06.08.2014

பிரதேச செயலாளர்,
பிதேச செயலகம்,
காரைதீவு.

**சுவாமி விபுலாநந்த அடிகளாரின் சிலை நிறுவுதல் தொடர்பாக**

புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பின் 27.06.2014ம் திகதிய கடிதம் சார்பாக (கடிதம் இணைக்கப்பட்டுள்ளது.)

மேற்படி கடிதத்தில் காரைதீவு முச்சந்தியில் சிலை நிறுவுவதற்குரிய அனுமதியை வழங்கும்படி கேட்கப்பட்டிருந்தது. புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைய இவ்வாறான மதம்சார் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து அதன் பின்பே அவற்றை நிறுவவேண்டும் என கேட்கப்பட்டிருந்தது. சுற்றுநிருபமும், விண்ணப்பப் படிவமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. எனவே மேற்படி அமைப்பினரை அழைத்து குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து அதன்படி நிறுவுவதற்கு அறிவுரை வழங்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

K. Vimalanathan
Additional District Secretary
Ampara District

.........................................

க.விமலநாதன்
மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர்,
அம்பாறை.

பிரதி: 1. தலைவர், செயலாளர், புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு - காரைதீவு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| [illegible] / நிர்வாகம் [illegible] / Admin./Esta. | 063-2222236 (ෆැක්ස්) / 063-2222193 | ගිණුම් අංශය / நிதிப்பிரிவு / Accounts Branch | 063-2222131 | ඉංජිනේරු / பொறியியலாளர் / Engineer | 063-2222608 |

" [illegible] "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**අලුතින් ආගමික ස්ථානයක් සඳහා ගොඩනැගිලි ඉදිකිරීම පිණිස අවසර ලබා ගැනීම**

01. අයදුම්කරුගේ නම සහ ලිපිනය

එස්. තිල්ලෙයම්බලම් සභාපති
ශුද්ධා ආර්ලිත අධ්‍යාපන සමාජ සංවර්ධන ආයතනය කාරතිව් 10.

දිසාපති කාර්යාලය
28 OCT 2003

02. i. ඉදිකිරීමට ඉල්ලුම් කරන ගොඩනැගිල්ලේ ස්වභාවය

ස්වාමි විපුලානන්දගේ පිළිමය

ii. ගොඩනැගිල්ල ඉදිකිරීමට අපේක්ෂිත ස්ථානයේ ලිපිනය

තුන් මං හන්දිය කාරතිව්

iii. ගොඩනැගිල්ල ඉදිකරන ඉඩමේ අයිතියේ ස්වභාවය

සිවිල් සංවර්ධන අධිකාරිය (ප්‍රාදේශීය සභාවෙන් අනුමැතිය ලබා ඇත)

iv. එම ඉදිකිරීම තුළින් අපේක්ෂා කරන අරමුණු හා කාර්යයන්

ලෝකය සඳහන් කරන ලද ස්වාමින් වහන්සේගේ දැනුම, සමාජ, ආධ්‍යාත්මික සේවාවන් සිහි කිරීම හා ගරු කිරීම.

03. i. ඉල්ලුම් ඉදිරිපත් කරන ආගමේ / සංවිධානයේ නම

ශුද්ධා ආර්ලිත අධ්‍යාපන සමාජ සංවර්ධන ආයතනය කාරතිව් 10

ii. එම ආගම අයත් නිකායක් තිබේනම් එයද සඳහන් කරන්න.

නැත.

iii ශ්‍රී ලංකාවේ තිබෙන මූලස්ථානයේ ලිපිනය (තිබේ නම්)

නැත.

iv. එම ආගමේ/ සංවිධානයේ ශ්‍රී ලාංකික ප්‍රධානියාගේ නම හා ස්ථිර පදිංචි ලිපිනය
(අගත තොරතුරු සනාථ කිරීම සඳහා අදාළ ලියවිලිවල ඡායා පිටපත් අමුණා එවන්න.)
**(ශ්‍රී ලංකාවේ සම්ප්‍රදායික ආගම් සඳහා මෙම ලියවිලි ඉදිරිපත් කිරීම අවශ්‍ය නොවේ.)**

04. ප්‍රදේශය තුළ පදිංචි එම ආගමට / සංවිධානයට අයත් සාමාජිකයන් සංඛ්‍යාව පිළිබඳ තොරතුරු
අ. ප්‍රාදේශීය සභා බල ප්‍රදේශයක නම් නියමිත ස්ථානයට කි.මී. 3ක වටප්‍රමාණය තුළ පදිංචි සංඛ්‍යාව
ආ. නගර සභා / මහ නගර සභා බල ප්‍රදේශයක නම් කි.මී. 2ක වටප්‍රමාණය තුළ පදිංචි සංඛ්‍යාව
(ග්‍රා.නි. සහතිකය මගින් සනාථ කරන්න.)

අ. 20000 ක් පමණ.

1 (පෙරළන්න)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. ඉහත අංක 03හි සඳහන් ප්‍රදේශය තුළ වෙනත් ආගම්වලට අයත් පූජනීය ස්ථාන තිබේ නම් ඒවා පිළිවෙළ සඳහන් කරන්න.

| අයත් ආගම | ලිපිනය | යෝජිත ස්ථානයේ සිට ඇති දුර ප්‍රමාණය |
|---|---|---|
| | | |

06. එකී ප්‍රදේශය තුළත්, ඊට ආසන්නවත් තිබෙන ඉල්ලුම් කර ඇති ආගමට අයත් වෙනත් ස්ථාන පිළිබඳ විස්තර

| ලිපිනය | යෝජිත ස්ථානයට ඇති දුර ප්‍රමාණය |
|---|---|
| | |

ඉහත තොරතුරු නිවැරදි බව සහතික කරමි.

දිනය 23/01/2014

ඉල්ලුම්කරුගේ අත්සන

නම සහ නිල මුද්‍රාව

Chairman
PEESDO
KARAITIVU

(3 ඇමුණුම)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(අදාළ පළාත් පාලන ආයතනය විසින් පමණක් සම්පූර්ණ කිරීම සඳහා)

## II කොටස

පළාත් පාලන ආයතනයේ නම හා ලිපිනය

යොමු අංකය P/S/2

දිසාපති කාර්යාලය
28 OCT 2008
අම්පාර

ලේකම්,
ආගමික කටයුතු හා සදාචාර වර්ධන අමාත්‍යාංශය
115, විජේරාම මාවත,
කොළඹ 07.

### නිරීක්ෂණ හා නිර්දේශ

07. i. ඉදිකිරීමට අපේක්ෂිත ගොඩනැගිල්ලේ ස්වභාවය

පිළිමයකි

ii. අපේක්ෂිත ස්ථානයේ ලිපිනය

තුන් වන හංදිය කාරතිව් 10.

iii. ප්‍රාදේශීය ලේකම් කොට්ඨාශය:

කාරතිව්

දිස්ත්‍රික්කය: අම්පාර

iv. ප්‍රාදේශීය ලේකම්ගේ නිරීක්ෂණ හා නිර්දේශ

(ප්‍රාදේශීය ලේකම්ගේ නිරීක්ෂණ හා නිර්දේශ ඇතුළත් ලිපියේ පිටපතක් ඉදිරිපත් කරන්න.)

නිර්දේශ ලිපියක් අමුණා ඇත.

08. අපේක්ෂිත ගොඩනැගිල්ල ඉදිකිරීමෙන් ප්‍රදේශයේ ආගමික සංහිඳියාවට තර්ජන හෝ බිඳුපැමක් / හානියක් සිදු වීමට අවකාශ තිබේ නම් ඒ පිළිබඳ විස්තර ඉදිරිපත් කරන්න.?

නැත.

(4 පිටුව)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. මූර්තිකරු දක්වා ඇති කරුණුවල නිවැරදිභාවය පිළිබඳ සහතිකය. (සාවද්‍ය කරුණු සඳහන්කොට ඇත්නම් නිරවද්‍ය තොරතුරු සටහන් කරන්න.)

මූර්තිකරු දක්වා ඇති කරුණු නිවැරදි බව සහතික කරමි

10. නිරූපණයකට එළඹීම සඳහා කමිටුවට වැදගත් වේයැයි අදහස් කරන වෙනත් යම් කරුණු වේනම් සඳහන් කරන්න.

11. මහ නගර සභාවේ/ නගර සභාවේ/ ප්‍රාදේශීය සභාවේ නිරීක්ෂණ හා නිර්දේශ

මෙම පිළිමය ස්ථාපිත කිරීමට නිර්දේශ කරමි.

දිනය 23/01/2014

අත්සන සහ නිල මුද්‍රාව
(නගරාධිපති / සභාපති / නාගරික කොමසාරිස් විසින් පමණක් අත්සන් කළයුතුය.)

SELLIAH RASIAH
Chairman
Pradeshiya Sabha
Karaitivu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

බුද්ධශාසන හා ආගමික කටයුතු අමාත්‍යාංශය

புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

**MINISTRY OF BUDDHASASANA AND RELIGIOUS AFFAIRS**

මගේ අංකය / எனது இல. / My No. MBRA/2-SAD/10/Con.Gen/2014-H    ඔබේ අංකය / உமது இல. / Your No.    දිනය / திகதி / Date 2014.12.02

ප්‍රාදේශීය ලේකම්,
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය,
කාරතිවු.

<u>නව ආගමික ස්ථානයක් ඉදිකොට පවත්වාගෙන යාම සඳහා අනුමැතිය ලබාදීම.</u>

පුණ්‍යා ආර්ථික අධ්‍යාපන සමාජ සංවර්ධන ආයතනයේ සභාපති විසින් කාරතිවු 10, තුන් මං හන්දිය යන ස්ථානයෙහි ස්වාමි විපුලානන්දගේ පිළිමයක් ඉදිකිරීමට අනුමැතිය ලබා ගැනීම සඳහා ඉදිරිපත් කරනු ලැබ ඇති ඉල්ලීම හා බැඳේ.

ඒ සම්බන්ධයෙන් වූ, කාරතිවු ප්‍රාදේශීය සභාවේ ගරු සභාපතිතුමාගේ හා ඔබගේ ද නිර්දේශයන් අනුව මෙම අමාත්‍යාංශය මගින් නිකුත් කොට ඇති 2008.10.16 දිනැති ලිපියෙහි ද ඊට සමගාමීව පොලිස්පති විසින් නිකුත් කොට ඇති 2009.04.07 දිනැති අංක 2154/2009 හා 08/2009 දරන චක්‍රලේඛ ලිපියෙහිද 2013.10.08 දිනැති මෙම අමාත්‍යාංශය මගින් නිකුත් කොට ඇති ලිපියෙහි ද දැක්වෙන විධිවිධාන ප්‍රකාරව, කාරතිවු 10, තුන් මං හන්දිය යන ස්ථානයේ ස්වාමි විපුලානන්දගේ පිළිමයක් ඉදිකිරීම සඳහා මෙයින් අනුමැතිය ලබා දෙන බැව් කාරුණිකව දන්වමි.

එම්.කේ.බී. දිසානායක
ලේකම්,
බුද්ධශාසන හා ආගමික කටයුතු අමාත්‍යාංශය.

<u>පිටපත්:-</u>

1) ගරු සභාපතිතුමා, කාරතිවු ප්‍රාදේශීය සභාව - කරු.දැ.ගැ.ස.
2) දිස්ත්‍රික් ලේකම්, අම්පාර - කරු.දැ.ගැ.ස.
3) අධ්‍යක්ෂ, හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව - කරු.දැ.ගැ.ස.
4) සභාපති, පුණ්‍යා ආර්ථික අධ්‍යාපන සමාජ සංවර්ධන ආයතනය - කරු.දැ.ගැ.ස.

No. 135, Sreemath Anagarika Dharmapala Mawatha, Colombo 07, Sri Lanka
Office 011-2307674, 011-2307694    Fax 011-2307406    Website www.mbra.gov.lk    Secretary 011-2307905
E-mail secmbara@gmail.com

புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு
PUSPA ECONOMICS EDUCATION SOCIO DEVELOPMENT ORGANIZATION
පුෂ්පා ආර්ථික අධ්‍යාපන සමාජ සංවර්ධන ආයතනය

Vishnu Vidyalaya Road,
Division No - 7,
Karaitivu,
Amparai,
Srilanka.
Tel / Fax : 067 2251319
Email : peesdo@gmail.com

Executive Director
Mr. S. Rasiah

Chairman
Mr. S. Thillaiyampalam

Vice Chairman
Mr. T. Sellathurai

Secretary
Mr. S. Sivarajah

Vice Secretary
Mr. N. Nithyatharsan

Treasurer
Mr. N. Sutharshan

Internal Audit
Mr. K. Satheeskumar

Committe Members
Mr. K. Nadarajah
Mr. S. Theivanayagam
Mr. S. Ponnuthurai
Mrs. V. Pankeswary
Mrs. P. Kamalarani
Mr. A. Krishnapillai
Mr. T. Mohanthas

Date: 16/12/2014

திறைசேரிப் பொறியியலாளர்,
R.P.A
அக்கரைப்பற்று / கல்முனை

(புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு காரைதீவு)

ஐயா,

காரைதீவு முச்சந்தியில் சிலை அமைக்க அனுமதி கோரல்

கடந்த 31/05/2012 திகதி காரைதீவு பிரதேச சபையில் கையளிக்கப்பட்ட [illegible] இல் பார்வையிட்டு அது சிலை அமைப்பதற்கான அனுமதியைக் கோருகின்றோம்.

மேலும் இவ்விடத்தில் [illegible] அனுமதி [illegible] கிடைக்கப்பட்டமை தெரியப்படுத்துகின்றோம்.

— நன்றி —

தலைவர்    செயலாளர்

(புஸ்பா பொருளாதார கல்வி சமூக அபிவிருத்தி அமைப்பு காரைதீவு)

இலக்கம்:- R.P.A/-EE/KM/S/02 - 31/05/2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මාර්ග සංවර්ධන අධිකාරිය
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
Road Development Authority

*Executive Engineer's Office, Kalmunai*

RDA/EE/KM/S/12

31.05.2012

067-2229628 | 067-2229626 | eekalmu@rda.gov.lk

Chairman,
Pradesiya Sabah.
Karaitivu.

**HANDING OVER OF KARAITIVU ROUNDABOUT.**

As it is instructed to me to hand over the above Roundabout to the Chairman Pradesiya Sabah, Karaitivu , Please take over the same and sign under mention please.

Executive Engineer,
RDA. Kalmunai

Executive Engineer
Road Development Authority
Kalmunai

| Handing Over Officer | | Taking Over Officer | |
|---|---|---|---|
| Name : | K.L.M. Ismail | Name : | |
| Designation : | Executive Engineer | Designation : | |
| Signature : | | Signature : | |
| Date : | 31/05/2012 | Date : | 31/05/2012 |

SELLIAH
Chairman
Pradeshiye Sabha
Karaitivu.

Copy to : APD/RDA/Akkaraipattu. -f.i.pls.-
Chief Engineer / RDA/Akkaraipattu. -f.i.pls.-

certified as true copy

Secretary
Pradesiya Sabha
Karaitivu



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலாநந்தர் சிலை திறப்பு விழா நினைவு மலர் வெளியீட்டிற்கு


*எமது வாழ்த்துக்கள்*

கிழக்குப் பிராந்தியத்தில்...

**உங்களுக்குத் தேவையான**

- பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையிலான அனைத்து பாடப் புத்தகங்கள்
- பாடசாலை உபகரணங்கள், அப்பியாசப் கொப்பிகள்
- காரியாலய உபயோகத்துக்கான காகிதாதிகள்
- இந்தியப் புத்தகங்கள் (மருத்துவம், யோகாசனம்)
- மாதாந்த சஞ்சிகைகள்
- தினசரி பத்திரிகைகள்
- தவணைப்பரீட்சை வினாத்தாள்கள்
- சமயப் புத்தகங்கள்
- ஆங்கில மொழிப் புத்தகங்கள்
- விளையாட்டு உபகரணங்கள் பரிசுப் பொருட்கள் போன்றவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.



# அன்பு ஸ்ரோர்

**புத்தக விற்பனையாளர்**

இல.14/A-1, Y.M.C.A. கட்டிடம்,
மட்டுநகர் வீதி, கல்முனை.
தொ.பேசி: 0672229540, 0776446046





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்லையா புஸ்பராணி

(பேராதனைப் பல்கலைக்கழக பல் வைத்திய
இறுதி ஆண்டு விஞ்ஞான பீட மாணவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org